
www.padippakam.com

www.dalithmurasu.com

# தலித் முரசு

சமூக நீதித் திங்களிதழ்
பிப்ரவரி 2006 • ரூ. 10
Volume : 3 - Issue : 4



**10** ஆம் ஆண்டு சிறப்பிதழ்

படிப்பகம்

www.padippakam.com



# அறிவாற்றல் இல்லையெனில் அரசியல் அதிகாரம் இல்லை - IV



“ தொழிலாளர்களே தங்களது சொந்த அணிகளைக் கொண்ட ஒரு தனியான அரசியல் அமைப்பாக உருவாகி, இந்த இரு நோக்கங்களுக்காகவும் பாடுபட முடியும். காங்கிரஸ் மற்றும் இந்து மகாசபையின் உடும்புப் பிடிகளிலிருந்து விடுபடுவதன் மூலம் – அது இந்தியாவின் விடுதலைக்காக சிறந்த முறையில் போராட முடியும். அதே நேரம், தேசியத்தின் பேரால் தான் ஏமாற்றப்படுவதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். இதை எல்லாம்விட முக்கியமாக, இந்திய அரசியலில் நடைபெற்றுவரும் பகுத்தறிவற்றத் தன்மைகளுக்கு அது முற்றுப் புள்ளி வைக்க முடியும். ”

நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பின் கீழ் உழைக்கும் வர்க்கங்கள் வாழநேரிடுமாயின், அதைத் தங்கள் நலன்களுக்குப் பயனளிக்கக்கூடியதாக மாற்றுவதற்கான வழிமுறைகளை – அந்த வர்க்கங்கள் வகுத்துக் கொள்ள வேண்டும். இந்தக் குறிக்கோளை அடைய வேண்டுமானால், இரண்டு செயல்களை அது செய்ய வேண்டும் என்பது என் கருத்து. முதலாவதாக, தொழிற்சங்கங்களை அமைப்பதை மட்டுமே இந்தியாவில் தொழிலாளர்களின் இறுதி லட்சியமாக, குறிக்கோளாகக் கொள்வதைக் கைவிட வேண்டும். அரசாங்கம் தொழிலாளர் கைகளுக்கு வருவதைத் தனது லட்சியமாக அது பிரகடனப்படுத்த வேண்டும். இதன் பொருட்டு, ஒரு தொழிலாளர் கட்சியை ஓர் அரசியல் கட்சியாக உருவாக்க வேண்டும். இத்தகையதொரு கட்சி, தொழிற்சங்கங்களையும் தனது அமைப்புக்குள் கொண்டிருக்கும் என்பதில் ஐய்யமில்லை.

ஆனால், இத்தகைய கட்சி தொழிற்சங்க இயக்கத்தின் குறுகிய கண்ணோட்டத்திலிருந்து விடுபட்டதாக இருக்க வேண்டும். ஏனென்றால், பொதுவாக தொழிற்சங்கங்கள் இறுதி நலன்களை விட, உடனடி நலன்களையும், தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்த தொழிற்சங்கத் தலைவர்களுக்குள்ள உரிமையையும் வலியுறுத்துபவையாகவுமே இருக்கும். மேலும், தொழிலாளர்களின் இந்தக் கட்சி, இந்து மகாசபை அல்லது காங்கிரஸ் போன்ற வகுப்புவாத அல்லது முதலாளித்துவக் கட்சிகளிலிருந்தும் விலகி இருக்க வேண்டும். காங்கிரசோ அல்லது இந்து மகாசபையோ, இந்தியாவின் சுதந்திரத்திற்காகப் போராடி வருவதாக உரிமை கொண்டாடிவரும் கட்சிகள் என்பதற்காக, அவற்றில் சேர வேண்டிய அவசியமோ அல்லது அக்கட்சிகளின் கூட்டணியினராக இருக்க வேண்டிய கட்டாயமோ தொழிலாளர்களுக்கு இல்லை.

தொழிலாளர்களே தங்களது சொந்த அணிகளைக் கொண்ட ஒரு தனியான அரசியல் அமைப்பாக உருவாகி, இந்த இரு நோக்கங்களுக்காகவும் பாடுபட முடியும். காங்கிரஸ் மற்றும் இந்து மகாசபையின் உடும்புப் பிடிகளிலிருந்து விடுபடுவதன் மூலம் – அது இந்தியாவின் விடுதலைக்காக சிறந்த முறையில் போராட முடியும். அதே நேரம், தேசியத்தின் பேரால் தான் ஏமாற்றப்படுவதிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். இதை எல்லாம்விட முக்கியமாக, இந்திய அரசியலில் நடைபெற்றுவரும் பகுத்தறிவற்றத் தன்மைகளுக்கு அது முற்றுப் புள்ளி வைக்க முடியும்.


காங்கிரஸ் அரசியல் ஏமாற்றத்தைத் தவிர, வேறு எதையும் கொண்டுவரவில்லை என்பது மறுக்க முடியாத உண்மை. காங்கிரஸ் அரசியல், பகுத்தறிவுக்கு ஒவ்வாது இருப்பதே இதற்குக் காரணம். அக்கட்சிக்கு சரியான போட்டி இல்லாததாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், இந்தியாவில் ஒரு தொழிற்கட்சி ஏற்படுமானால், கடந்த இரு பதாண்டுகளாக இந்திய அரசியலில் கோலோச்சி வரும் நிலைக்கு அது முடிவு கட்டும். இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டிய இரண்டாவது செய்தி : அறிவாற்றல் இல்லையேல் அதிகாரம் இல்லை என்பதாகும்.

இந்தியாவில் ஒரு தொழிற்கட்சி அமைக்கப்படுமானால், ஆட்சிப் பீடத்தில் தன்னை அமர்த்த வேண்டும் என்ற ஒரு கேள்வி எழும் என்பது உறுதி. மற்ற வர்க்கங்களைவிட தொழிலாளர்கள் மோசமாக ஒன்றும் ஆட்சி செய்ய மாட்டார்கள் அல்லது உள்நாட்டு விவகாரங்களிலோ, அயல்நாட்டு விவகாரங்களிலோ அப்படி ஒன்றும் ஓட்டாண்டிகளாக நடந்து கொள்ள மாட்டார்கள் என்று நொண்டிச் சமாதானம் கூறுவது – இக்கேள்விக்குச் சரியான, முறையான, நேரிய பதிலாக இருக்க முடியாது. மாறாக, தொழிலாளர்கள் சிறப்பாக, திறம்பட ஆட்சி செய்ய முடியும் என்பதைத் திட்டவட்டமாக மெய்ப்பித்தாக வேண்டும்.

அதேவேளை, பிற வர்க்கங்களின் அரசாங்கப் பாணியைவிட தொழிலாளர்களின் அரசாங்கப் பாணி மிகவும் கடினமானது என்பதையும் மறந்து விடக் கூடாது. தொழிலாளர்களின் அரசாங்கம் வரைமுறையற்ற, கட்டுப்பாடற்ற அரசாங்கமாக இருக்க முடியாது. அது முக்கியமாகவே ஒரு கட்டுப்பாட்டு முறையில் அமைந்த அரசாங்கமாகவே இருக்கும். ஒரு சிறந்த கட்டுப்பாட்டு முறையை உருவாக்குவதற்கு அதிகளவு அறிவாற்றலும், பயிற்சியும் தேவை. இந்தியாவில் உள்ள தொழிலாளர்கள், படிப்பின் முக்கியத்துவத்தை உணரத் தவறிவிட்டது கெடுவாய்ப்பானதாகும். இந்தியாவிலுள்ள தொழிற்சங்கத் தலைவர்கள் செய்திருப்பதெல்லாம் தொழிலதிபர்கள் மீது எப்படி வன்மையோடு, உக்கிரத்தோடு வசைபாட முடியும் என்பதைக் கற்றுக் கொண்டிருப்பதுதான்.

ஆகவே, இந்தியத் தொழிலாளர் சங்கம் இந்தக் குறைபாட்டை உணர்ந்து கொண்டிருப்பதையும், தொழிலாளர் வர்க்கங்களுக்காக இந்தப் பயிற்சி முகாம்களைத் தொடங்க முன்வந்திருப்பதையும் அறிந்து மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆட்சி புரிவதற்கு தொழிலாளர்களைத் தகுதியுடையவர்களாக ஆக்க, இந்தப் பயிற்சி முகாம்கள் சிறந்த சாதனங்களாக விளங்கும். ஒரு தொழிற்கட்சியைத் தொடங்க வேண்டிய அவசியத்தை சங்கம் மறந்து விடாது என்றும் நம்புகிறேன். இது செய்யப்படுமானால், ஆளும் வர்க்கத்தின் நிலைக்குத் தங்களை உயர்த்தியமைக்காக, தொழிலாளர் வர்க்கங்கள் சங்கத்துக்குப் பெரிதும் நன்றிக் கடன் பட்டிருக்கும்.

*- முற்றும்*



*அகில இந்தியத் தொழிற்சங்கத்தின் சார்பில், 1943 செப்டம்பர் 8 முதல் 17 வரை டில்லியில் நடைபெற்ற கூட்டத்தில், இறுதி நாள் ஆற்றிய உரையிலிருந்து...*




படிப்பகம்

www.padippakam.com



யாழன் ஆதி



பெங்களூரில் 22.1.2006 அன்று வர்த்தமான் முனிசாகரிடம் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் ஆசி பெறுகிறார்

வெட்கம் பிடுங்கித் தின்னுகிறது
நிர்வாணத்தின் முன் ஆடையின்
தலைகுனிவு பற்றி

அதிர்ச்சியின் கோபங்கள் ஊறும்
ரத்த நாளங்களின் கண்கள்
சிவக்கின்றன

ஆட்சி
விஞ்ஞானம்
பொருளாதாரம்
எதுவெனினும்
அடங்கி பம்முகின்றன
மதங்களின் கைகளுக்கு கீழ்

நிர்வாண அசிங்கங்கள் புனைந்த
வேடங்களின் முன்னால்
நின்று குழைகிறது
நாட்டின் உயரதிகாரம்

பகுத்தறிவுப் போர்வையை
உதறிப் போட்டுவிட்டு
கனவு காண்கிறது தேசம்
அடுத்த சாமியாரின் அருளாசிக்காய்



படிப்பகம்

www.padippakam.com



பிப்ரவரி 7
மொழிஞாயிறு
தேவநேயப் பாவாணர்
பிறந்த நாள்



படிப்பகம்

www.padippakam.com

தலித் முரசு

Volume : 3 Issue : 4

பிப்ரவரி, 2006

10 - 1

•

ஆசிரியர்

புனித பாண்டியன்

ஆசிரியர் குழு

இளங்கோவன்

அழகிய பெரியவன்

யாக்கன்

காவ்யா

விழி.பா. இதயவேந்தன்

•

ஆண்டுக் கட்டணம் : ரூ.100/-
நூலகக் கட்டணம் : ரூ.200/-
வாழ் நாள் கட்டணம் : ரூ.1000/-

•

தொடர்பு முகவரி

203, ஜெயம் பிரிவு - சித்ரா அடுக்ககம்
9, சூளைமேடு நெடுஞ்சாலை
சென்னை - 600 094

பேசி : 2374 54 73

E-mail : ambedkar@md4.vsnl.net.in
www.dalithmurasu.com

# பங்கேற்பை நல்குக

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு, சமூக மாற்றத்திற்கான ஒரு சிறு முயற்சியாகத்தான் 'தலித் முரசு' தொடங்கப்பட்டது. மாதம் ஓரிதழே எனினும், அது குறைந்தது பத்தாண்டுகளுக்காவது இடைவிடாது வெளிவர வேண்டும் என்ற தீர்மானத்துடன்தான் செயல்பட்டோம். அந்த நோக்கம் நிறைவேற, இன்னும் ஓராண்டு எஞ்சியிருக்கிறது. நாம் பயணிக்க வேண்டிய தொலைவு நெடியது எனினும், கடந்து வந்த பாதையில் நாம் ஏற்றுக் கொண்ட கொள்கைப் பயணம் மற்றும் செயல்பாடுகள் மீதான ஒரு திறந்த விமர்சனத்தை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

வேறு எவரைக் காட்டிலும், தலித் முரசின் வாசகர்களே இத்திறனாய்வை சிறப்புற செய்ய முடியும். இத்தகைய விமர்சனங்கள் ஆக்கப்பூர்வமாகவும், பங்கேற்புப் பூர்வமாகவும் - அடுத்த கட்ட நகர்வை நோக்கியும்இருந்தால் பயனுள்ளதாக இருக்கும். இதன் மூலம் அடுத்த பத்தாண்டுகளுக்கான செயல்திட்டத்தை வடித்தெடுக்க முடியும். எனவே, வாசகர்கள் தங்கள் பகுதியில் இதழை அறிமுகப்படுத்த/விற்பனை செய்ய/வாசகர் வட்டம் அமைக்க, தங்களின் ஒப்புரவை நல்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

நாம் இடையறாது முன்வைக்கும் எளிய கோரிக்கையையே மீண்டும் நினைவூட்டுகிறோம். ஒரு வாசகர், குறைந்தது ஒரேயொரு வாசகரை அறிமுகப்படுத்தினாலே போதும். இதழின் விற்பனை எண்ணிக்கை, பன்மடங்கு அதிகரிக்கும். கடந்த ஆகஸ்ட் திங்களில் 'முதல் உதவி'க்கான வேண்டுகோள் விடுத்திருந்தோம். வெகு சிலரே நமக்குத் தோள் கொடுக்க முன்வந்தனர். இருப்பினும், கிடைக்கும் வாய்ப்புகளைப் பற்றிக் கொண்டு, கொள்கைச் சமரசமின்றியும், தொய்வின்றியும் செயல்பட உறுதி பூண்டுள்ளோம். சாதி ஒழிப்பு என்ற இலக்கை நோக்கிய நம் பயணத்தில், இன்னல்களை உரமாக்கிச் செயல்படுகிறோம். இலக்கை நோக்கிய அம்பு முழு வீச்சுடன் பாய, இயன்றவரை வளையக்கூடிய திண்மையைப் பெற்றிருக்கிறோம். அதேவேளை, வில்லை உடையாமல் காப்பாற்ற வேண்டிய பொறுப்பும் கடமையும் - இந்தச் சமூகத்திற்கும் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஒரு தலித் பத்திரிகையின் தேவையை தொடர்ந்து வலியுறுத்தினாலும் - அதன் முக்கியத்துவத்தை இந்தச் சமூகம் சரிவர உணர்ந்ததாகத் தெரியவில்லை! களத்தில் நடைபெறும் போராட்டங்களை வரலாறாக மாற்றும் தன்மை, பத்திரிகைக்கு உள்ளது; விடுதலைக்கான விழிப்புணர்வை, நூல்களும் பத்திரிகைகளுமே பரவலாக்கும்; அதன் மூலம் ஓர் ஒருங்கிணைப்பும் உருவாகும். இருப்பினும், பகட்டு அரசியலுக்கு அளிக்கும் ஆதரவில் நூறில் ஒரு பங்குகூட, நம்மை அடிமைத் தளையிலிருந்து முற்றாக விடுதலை செய்யும் நூல்களுக்கும் ஏடுகளுக்கும் - படித்த தலித் மக்கள் அளிப்பதில்லை என்பது பெரிதும் வருந்தத்தக்கது. நாம் 'தலித் முரசு'க்காக மட்டும் இதைச் சொல்லவில்லை; இயக்க ஏடுகளுக்கும், பிற தலித் இதழ்களுக்கும் சேர்த்துதான் குறிப்பிடுகிறோம்.

வரலாறு தெரியாதவர்கள், வரலாற்றை உருவாக்க முடியாது என்பது மட்டும் அல்ல; வரலாற்றை முறையாகப் பதிவு செய்யாதவர்களும், தங்கள் அரசியலை அடுத்த கட்டத்திற்கு நகர்த்த முடியாது.

ஓர் அமைப்பாக/நிறுவனமாக நாம் இயங்கினால்தான் - ஓரளவுக்காவது திறம்படச் செயலாற்ற முடியும். 1940களின் இறுதியில், டாக்டர் அம்பேத்கர், மாவட்டங்கள்தோறும் ஒரு சமூக மய்யம் அமைக்க விரும்பினார். மேற்கத்திய நாடுகளில் இருக்கும் சமூகக் குடியிருப்புகள் போல, தீண்டத்தகாத மக்களின் சமூக, பண்பாட்டு வாழ்வியல் நிலைகளில், பழக்க வழக்கங்களில் ஒட்டுமொத்த மாற்றத்தை ஏற்படுத்துவதும், இம்மக்களிடையே ஒருமித்த நோக்கத்தையும், ஒருங்கிணைந்த செயல்பாடுகளையும் உருவாக்குவதுமே இம்மய்யத்தின் நோக்கம். ஆனால், இந்நோக்கம் நிறைவேறாமலேயே போய்விட்டது. அண்ணலின் தொலைநோக்குச் செயல்திட்டத்தை, ஒன்பதாம் ஆண்டுச் சிறப்பிதழில் வெளியிட்டிருந்தோம். அதை விரைவில் ஒரு சிறு கையேடாகவும் 'தலித் முரசு' வெளியிட இருக்கிறது. அதன் முக்கியத்துவம் கருதி, அதிலிருந்து சில முக்கிய பகுதிகளை, அடுத்த பக்கத்தில் வெளியிட்டுள்ளோம்.

நம்மீதான பண்பாட்டுப் படையெடுப்பை முறியடிக்க, அம்பேத்கர் வலியுறுத்திய சமூக மய்யத்தை உருவாக்குவது இன்றியமையாத ஒன்றாகும். இதுகுறித்து இடையறாது பிரச்சாரம் செய்வதே - பத்தாம் ஆண்டில் நமது முதன்மையான செயல் திட்டங்களில் ஒன்றாக இருக்கும்.

•



படிப்பகம்

www.padippakam.com

# நம் இயக்கம் வெற்றிபெற...

ஒரு வரலாற்று மாணவன் என்ற அடிப்படையில் அறிவாழமிக்கப் பார்வையுடன் அணுகினால், ஒரு சமூகத்திற்குப் புத்துயிரூட்ட, அரசியல் எவ்வளவு முக்கியமானதாக இருந்தாலும், சமூக, பொருளாதார மற்றும் நெறி சார்ந்த கொள்கைகளே - வேறு எதை விடவும் முக்கியமானதாக எனக்குத் தெரிகிறது. மக்களின் சமூக, பொருளாதார மற்றும் நெறி சார்ந்த எழுச்சிக்கான ஒரு வழியாக மட்டுமே அரசியல் சக்திகள் இருந்திருக்கின்றன.

நான் தொடக்க நிலையிலிருந்தே அரசியல் இயக்கத்தைவிட, சமூக இயக்கத்திற்கே - மாபெரும் அழுத்தத்தையும் முக்கியத்துவத்தையும் அளித்து வந்திருக்கிறேன். என்னுடைய 25 ஆண்டுகால பொது வாழ்க்கையின் பெரும் பகுதியை - தீண்டத்தகாத மக்களின் சமூக மேம்பாட்டுக்காகவே செலவழித்திருக்கிறேன். நான் ஓர் அரசியல்வாதி மட்டுமே என்ற என் மீதான கருத்தைத் திருத்தவே - இதை இங்கு குறிப்பிடுகிறேன். நான் ஓர் அரசியல்வாதி என்பது தவறான கருத்து.

நம்முடைய இயக்கம் வெற்றி பெற வேண்டும் எனில், பின்வரும் மூன்று தேவைகளும் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பதில் இரு கருத்துகளுக்கு இடமிருக்க முடியாது. 1. ஒரு மய்ய தலைமைச் செயலகம் 2. அர்ப்பணிப்புடன் கூடிய நன்கு பயிற்சி பெற்ற செயல்வீரர்கள் 3. நிதி ஆதாரம். இத்தகைய வழிமுறைகள் இருந்தால்தான் - நம்முடைய இயக்கம் உறுதியாக, நிரந்தரமாக இயங்க முடியும். இம்மூன்று முக்கிய தேவைகளுள் ஒரு சமூக மய்யத்தை - மய்ய தலைமைச் செயலகமாக நிறுவுவதே, இவற்றுள் மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். ஒரு சமூக மய்யம் நிறுவப்பட்டு விட்டால், இயக்கத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் - நான் வகுத்த திட்டத்தின்படி ஒருங்கிணைக்க உதவியாக இருக்கும். மேலும் இது, அர்ப்பணிப்புள்ள முழுநேர செயல்வீரர்களுக்கான ஊதியத்திற்கும், சமூக செயல்பாடுகளுக்கான செலவுகளுக்கும் வருவாய் ஈட்டக்கூடியதாக இருக்கும்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தீண்டத்தகாத மக்களுக்கென ஒரு சமூக மய்யம் கண்டிப்பாகத் தேவை என்பதில், எந்த சந்தேகமும் இருக்க வேண்டியதில்லை. உண்மையில், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒன்று வழங்குவது என்பது என்னுடைய திட்டம். எனினும் தொடக்கத்தில் எங்காவது ஓரிடத்தில் இது நிறுவப்பட வேண்டும். எனவே, இதை பம்பாயில் நிறுவுவது, ஒரு நல்ல தொடக்கமாக அமையக்கூடும் என்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்.

இவ்வியக்கத்திற்கான தோற்றுவாயாக பம்பாய் அமைந்துள்ளது. இதன் தொடக்க கட்டமாக, முறையான நிரந்தர அமைப்பு பம்பாய் மாநகரத்தில் அமைய உள்ளது. பம்பாயில் நிறுவப்பட உள்ள சமூக மய்யம், தீண்டத்தகாத மக்களின் மேம்பாட்டுக்கான சமூக, பொருளாதார, கல்வி செயல்பாடுகளுக்கான ஒரு மாதிரியாக மட்டுமே இருக்காது. புதிய சிந்தனைகள் ஒளிரும் மய்யமாகவும், ஒட்டுமொத்த நல்லிணக்கத்திற்கான பல்வேறு செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் மய்யமாகவும் இது அமையும்.

பல்வேறு சமூக சீர்திருத்தவாதிகள் மற்றும் அரசியல்வாதிகள் எடுத்த முயற்சிகளுக்குப் பிறகும் - நாடு சந்தித்திருக்கும் முன்னேற்றம் என்பது, நிறைவு அளிக்கக்கூடிய வகையில் இல்லை. உண்மையில், பிரச்சினையின் ஒரு முனை அளவே இதுவரை விவாதிக்கப்பட்டுள்ளது. ஒரு பெரும் திரளாகக் கருதப்படும் தீண்டத்தகாத மக்கள், வேறு எவரையும் விடவும் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுடைய சமூக, பொருளாதார, கல்வி மற்றும் அரசியல் முன்னேற்றம் - ஒவ்வொரு நிலையிலும் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகிறது. உதவிக்காக மற்றவர்களை சார்ந்திருப்பது - இம்மக்களிடையே நயவஞ்சகமாக ஊட்டப்பட்டு வருகிறது. இது, தீண்டத்தகாத மக்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்காகத் தொடர்ந்து போராடுவதற்குத் தகுதியற்றவர்களாகவும் அவர்களை மாற்றி விடுகிறது.

தங்களின் லட்சியத்திற்கானப் பாதையில் குறுக்கிடும் அனைத்துத் தடைகளையும் தகர்த்தெறிந்து, பல்லாண்டுகால அடிமைத் தளையிலிருந்து உண்மையான விடுதலை பெறுவதற்கான ஆற்றல், கண்டிப்பாக இம்மக்களிடமிருந்தே வர வேண்டும். ஏனெனில், தீண்டத்தகாத மக்களின் இப்புதிய இயக்கம் அதாவது தங்களுக்கான இயக்கம் - நான் உறுதியாகச் சொல்கிறேன், அது அவர்களை மேம்படுத்தி வெற்றிக்கு வழிவகுக்கும்.

(பி.ஆர். அம்பேத்கர்)

மனிதாபிமான அடிப்படையில் இருந்து பார்த்தால், தீண்டத்தகாத மக்களின் மிக முக்கிய பிரச்சினைகளுக்கு காரணமாகவும், இந்திய நாட்டின் அனைத்துவகை முன்னேற்றத்திற்கும் தடையாக இருப்பது - இந்து பண்பாடுதான் என்பது அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட ஓர் உண்மையாகும். இதைத் தகர்ப்பதற்கு மனத்திண்மையும் திறமையும், ஆதாரங்களும், அனைத்து அமைப்புகளின் ஒருங்கிணைந்த ஆற்றலும் தேவையான ஒன்றாக இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

# இவர்களின்றி 'தலித் முரசு' இல்லை

■ பெ.சந்திரசேகர்

■ எஸ். கண்ணன் ■ சிறீராமன் ■ குமார்

■ அர்ச்சுணன் ■ த. கணேஷ் மூர்த்தி ■ ப. செந்தில் குமார்

■ 'விழுதுகள்' தங்கவேல் ■ பி.பி.மார்ட்டின் ■ ராம. பிரபு

■ ஆர்.ஆர். சீனிவாசன் ■ கே.எஸ். முத்து ■ புரசை கோ. தமிழேந்தி

■ எஸ்.வி. ராஜதுரை ■ தம்மதுரை ■ எஸ். நடராஜன் ■ நெடுஞ்செழியன்

■ சுப.வீரபாண்டியன் ■ ஏபி. வள்ளிநாயகம் ■ கிறிஸ்டினா ■ வ. கீதா

■ கிருத்துதாசு காந்தி ■ ஞானசேகர் ■ ஜி.கே.விஜயன் ■ சமூக செயல்பாட்டு இயக்கம்

■ பி. தன்ராஜ் ■ சொ.சு. தமிழினியன் ■ தமிழேந்தி ■ ஆர்.உதயகுமார் ■ கோ.சுகுமாரன்

■ பி. ஆனந்தன் ■ பிரேமா ■ அன்பு செல்வம் ■ மோகன் ■ லூத்புல்லா ■ நீலகண்டன்

■ மு. ரமேஷ் குமார் ■ ஆர். ஜோன்ஸ் ■ சி. ராமன் ■ ஜெமிமா ஆலிஸ் ■ டி. நம்பி ■ சவுந்தர்

■ அ.ந.திருநாவுக்கரசு ■ பொ.ரத்தினம் ■ பூவிழியன் ■ ரா.அதியமான் ■ செபஸ்டியன்

■ கண்ணன் எம். ■ ஆர்.எம்.சேகர் ■ க. மோகன கிருஷ்ணன் ■ கே. குடியரசன் ■ 'விடியல்'சிவா

■ சிவகாமி ஏஜென்சி ■ பாலகிருஷ்ணன் ■ எம்.விஜயகுமார் ■ சின்னப்பாதமிழர் ■ ஜெ.அன்பரசு

■ அ.கஜேந்திரன் ■ ஆர்.முருகப்பன் ■ ஜி.பாண்டியன் ■ அன்பு சிவம் ■ ஏ.ராமசாமி ■ டி. பாலு

■ எம்.சீனுவாசகன் ■ கே.எஸ். கிருஷ்ணமூர்த்தி ■ ராஜூ ■ பி. பெருமாவளவன் ■ ஆர்.கே. ரங்கசாமி

■ என். பழனிவேலு ■ வி.சற்குணம் ■ தலித் ஆதார மய்யம் ■ சிவக்குமார் ■ எஸ்.ஜி. சேகர் ■ இ. தன்ராஜ்

■ தி. மா. சரவணன் ■ ஏ.இளங்கோவன் ■ நரசிம்மன் ■ தி. பெரியார் சாக்ரடிஸ் ■ ஆ. ஜானகிராமன்

■ எம். சுந்தர்ராஜன் ■ ஏ. ஜாகிர் உசேன் ■ எம். அமிர்தராஜ் ■ கனகமுத்து ■ ஆர். ரமேஷ் ■ ராஜேஷ்

■ கே. சிவசங்கர் ■ பி. சேவுகபெருமாள் ■ ராஜா ■ லட்சுமி புக் ஸ்டால் ■ முருகன் ■ ஆர். சந்தானம்

■ கே. தேவராசு ■ சு.க. சங்கர் ■ சிவ செந்தில் நாதன் ■ விஸ்வநாதன் ■ எஸ். சுந்தர்ராஜன் ■ மோகன்பாபு

■ ராமச்சந்திரன் ■ டாக்டர் அம்பேத்கர் இன்டர் நேஷனல் மிஷன் ■ எம். சந்திரசேகரன் ■ ராமலிங்கம்

■ ஜெ. வெங்கடேசன் ■ மா. அமரேசன் ■ எம். முத்துலட்சுமி ■ என். செல்வதுரை ■ ஜி. அலாய்சியஸ்

■ பூங்குழலி ■ ரமேஷ் (வெப்சைட்) ■ ராமச்சந்திரன் ■ ரா. அதியமான் ■ மோகன் மணி ■ கே. சந்துரு

■ அஜித் முரிக்கன் ■ ரா. முருகப்பன் ■ மாற்கு ■ சூ. ரிச்சர்ட் ■ பூ. மணிமாறன் ■ தமிழ் முழக்கம்

■ சூர்யா ஏஜென்சி ■ நியூ புக் லேண்ட்ஸ் ■ விடியல் பதிப்பகம் ■ அதெகாம் பின்னகம்

■ தமிழ்ப்பித்தன் ■ அமுதவள்ளி ■ சுந்தர் ■ தருமலிங்கம் ■ சுரேஷ் அம்பேத்கர்

■ எஸ். மோகன் ■ கே. துரை ■ பித்தன் ■ டி. எழிலரசன் ■ எஸ். அண்ணாதுரை

■ பி.ஜா. ஏழுமலை ■ ஆணழகன் சீனிவாசன் ■ 'ப்யூச்சர்' ராதா ■ அன்பு

■ சேகர் ■ கருணாகரன் ■ சவுந்திரன் ■ பிரியங்கா கிருஷ்ணன் ■ பாபு

■ முரளி ■ முருகன் ■ பிரேம்குமார் ■ ராஜேஷ் ■ ராஜா ■ சுந்தர்

■ சந்துரு ■ தயாளன் ■ பாக்கியநாதன் ■ வாசகர்கள்

■ ஆர். வேணுகோபால் ■ வாழ்நாள்

உறுப்பினர்கள்

முன்னட்டைப் புகைப்படம் (மேலவளவு பாட்டி) : பாலா



படிப்பகம்

# வாக்குமூலம்

உலக வரலாற்றிலேயே மிகமிக மோசமான, நிறுவனமயமாக்கப்பட்ட, தொடர்ச்சியான இனப்பாகுபாட்டுக் கொடுமைக்கு (தீண்டாமை) - உங்களுடன் வாழும் 10 கோடி ஆண்களும் பெண்களும் ஆட்பட்டிருக்கிறார்கள் என்பது, உலகத்தின் பார்வையிலிருந்து மறைக்கப்படுகிறது. இந்தத் தீயமுறை, இந்தியாவின் அன்றாட வாழ்வில் எந்த அளவுக்கு ஓர் அங்கமாக மாறிவிட்டது என்றால், அத்தீமையைப் பற்றி எவரும் கண்டு கொள்ளாத அளவுக்கு ஆகிவிட்டது. தென் ஆப்பிரிக்காவில் இனவெறியை எதிர்த்து உலகமே ஒன்று திரண்டது. அது ஒரு நீண்ட போராட்டம். இருப்பினும், இறுதியில் நீதி வென்றது. தீண்டாமை என்பது, இவை எல்லாவற்றை விடவும் அதிகமான இன ஒடுக்கல் முறையாகும். மேலும், தீண்டாமை கண்ணுக்குப் புலனாகாத ஒன்று. அத்தகைய தீண்டாமையை எதிர்த்து, இப்பொழுது உலகம் ஒன்றுபட வேண்டிய தேவை இருக்கிறது.


ராய் பிரவுன், தலைவர், உலக மனித நேய அறநெறி ஒன்றியம் - லண்டன், சென்னையில் 4.1.2006 அன்று திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற சுயமரியாதை இயக்கத்தின் 80 ஆம் ஆண்டு நிறைவு விழாவுக்காகத் தயாரிக்கப்பட்ட உரையிலிருந்து

ஒவ்வொரு அரசும் தங்கள் குடிமக்களைப் பாதுகாக்க ஆயுதம் வாங்க வேண்டிய கட்டாயம் இருப்பதால், ஆயுத உற்பத்தித் தொழில் தவிர்க்க முடியாததாக்கப்பட்டு விட்டது. ஆனால், இத்தகைய கொடிய ஆபத்துகள் நிறைந்த தொழிலைக் கட்டுப்படுத்தும் வாய்ப்புகள் ஏதும் இல்லை. ஆயுத வன்முறையால் ஒவ்வொரு நிமிடமும் ஒருவர் இறக்க நேரிடுகிறது. ஓராண்டில் 5 லட்சம் ஆண், பெண் மற்றும் குழந்தைகள் இதனால் கொல்லப்படுகின்றனர். பெருமளவு வளங்கள், அதிகளவு ராணுவத் தளவாடங்கள் வாங்க செலவிடப்படுவதால் வறுமை அதிகரிக்கிறது. இருப்பினும், இத்தகைய வன்முறையை உற்பத்தி செய்யும் தொழில் மூலம் பெரும் வணிகத்தை மேற்கொள்கின்றனர். உலகளவில் ஆயுதம் விற்கும் தொழிலில் ஒவ்வொரு ஆண்டும் 84 ஆயிரம் கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. பணக்கார நாடுகளும் வல்லரசு நாடுகளுமே இவ்வணிகத்தைச் செய்து வருகின்றன. இதன் மூலம் உலகெங்கும் அவை சண்டையை உருவாக்கி வருகின்றன. 1998 முதல் 2001 வரை அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள், வளர்ச்சி அடையும் நாடுகளுக்கு உதவித் தொகையாக அளித்த தொகையை விட, ஆயுதத் தொழில் மூலம் சம்பாதித்த பணம் அதிகமானது.

பியான்கா ஜக்கர் என்ற செய்தியாளர், 'தி கார்டியன்' நாளேட்டில் எழுதியுள்ள கட்டுரையில்

முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ள சூழலில், 'மதத்தின் அடிப்படையில் முஸ்லிம்களுக்கு இடஒதுக்கீடு வழங்குவது நியாயமல்ல' என்றொரு வாதம் முன்வைக்கப்படுகிறது. இந்த வாதத்தை முன்வைப்பது யார்? இந்த நாடு முழுவதையும் மதத்தின் அடிப்படையில், 'இந்து நாடாக மாற்றுவோம்' என மதவெறியுடன் செயல்படக் கூடியவர்கள்தான். அவர்களுக்கு நம் கேள்வி இதுதான் : தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இடஒதுக்கீடு, அவர்கள் இந்து சமூகத்தில் இருப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்தானே வழங்கப்பட்டுள்ளது. பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் என்றால் யார்? அவர்கள் இந்து மதத்தில் குறிப்பிட்ட சாதியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். எனவே, அங்கும் மத அடிப்படையிலான இடஒதுக்கீடே வழங்கப்படுகிறது என்பதை மறுக்க முடியுமா? தலித் கிறித்துவர்களுக்கு இடஒதுக்கீடு கேட்பது என்பதும், மதம் மாறிய கிறித்துவர்களுக்கு இடஒதுக்கீடு கேட்பது என்பதும் - மதத்தின் அடிப்படையில்தான். அதே போல, இஸ்லாமியர்களுக்கு இடஒதுக்கீடு கேட்கப்படும்போது மட்டும் - மத அடிப்படையில் கொடுக்கலாமா எனக் கேட்பது நியாயமல்ல.

'விடுதலை' க. ராசேந்திரன், பொதுச் செயலாளர், தந்தை பெரியார் திராவிடர் கழகம், 'உணர்வு' இதழில்




'டெக்கான் கிரானிக்கல்'




'தீக்கதிர்'




'தி இந்து'

www.padippakam.com






# புதுவை விற்பனைக் குழு

## தட்டாஞ்சாவடி, புதுவை - 605 009

**E-mail : amdpc@pondy.pon.nic.in ■ Website : www.pondicherrymarketcommittee.org**

| | | | |
|---|---|---|---|
| தலைவர் | : 0413 - 2246100 | செயலர் | : 0413 - 2248072 |
| தட்டாஞ்சாவடி | : 0413 - 2248263, 2245234 | அலுவலகம் | : 0413 - 2242803 |
| மதகடிப்பட்டு | : 0413 - 2641148 | கன்னிய கோயில் | : 0413 - 2611020 |
| கூனிச்சம்பட்டு | : 0413 - 2680656 | உழவர் சந்தை | : 0413 - 2331448 |


1978 - 79 ஆம் ஆண்டு தட்டாஞ்சாவடியில் துவக்கப்பட்ட விற்பனைக்கூடம் தனது விற்பனை மதிப்பு ரூ. 61 லட்சமாக இருந்து கடந்த 2004 - 05இல் ரூ. 48 கோடியை எட்டி உள்ளது. இந்த வளர்ச்சியின் காரணம் :

- மறைமுக ஏலம் மற்றும் போட்டி அடிப்படையில் விலை நிர்ணயம்.
- சரியான எடை நிர்ணயம்.
- விவசாயிகளுக்கு இலவச சேவை மற்றும் உடனடி பணப்பட்டுவாடா.
- ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் வாயிலாக விற்பனை செய்யப்படும் நெல்லுக்கு கூடுதல் ஊக்கத் தொகை வரும் 1.8.2005 முதல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 30லிருந்து ரூ. 50 ஆக உயர்த்தி புதுவை அரசு வழங்க இருக்கிறது.
- உழவர் சந்தைகளுக்கு விவசாயிகள் காய்கறிகள் மற்றும் பழங்களை ஏற்றி வர இலவச வாகன வசதி.
- உழவர் சந்தையில் விவசாயிகளுக்கு கடைகளை கணினி மூலம் ஒதுக்கீடு செய்தல்.

**விற்பனைக் குழுவின் வளர்ச்சியில் மேலும் ஒரு மைல் கல்**

- காலாப்பட்டில் ஒரு விற்பனைக் கூடம் தொடங்குதல்.
- அரும்பார்த்தபுரத்தில் ஒரு உழவர் சந்தை விரைவில் திறக்க ஏற்பாடு செய்தல்.
- உழவர் சந்தையில் குளிர்பதன முறை அமைத்தல்.
- விற்பனைக் கூடங்களில் விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் பயன்படும் வகையில் எடை மேடை அமைத்தல்.
- தட்டாஞ்சாவடியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கணினி மூலம் ஏலம் நடத்த வழி செய்தல்.

மேலும் விவசாயிகளுக்குப் பயன் அளிக்கும் வகையில், பல திட்டங்களும் செயல்பாடுகளும் விரைவில் இந்த புதுவை அரசு கொண்டு வந்து விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும் பொருளாதாரத்தையும் மேம்படுத்த உத்தேசித்துள்ளது.

**சி. வசந்தகுமார்**
செயலர்

**கி. பாண்டியன்**
தலைவர்

No. 773/DIP/PRA/PRESS/2005 - 2006 / S - 59

படிப்பகம்

www.padippakam.com



# கியூபா : உலகின் நண்பன்

■ அ. முத்துக்கிருஷ்ணன்

தென் அமெரிக்கக் கண்டத்தின் வடகோடியில், கரீபியக் கடலில் மிதந்து கொண்டு, இன்று உலகை வழிநடத்திக் கொண்டிருக்கும் நாடு கியூபா. சின்னஞ்சிறு நாடான கியூபா, 1500 தீவுகளுக்கு மேல் குழுமிய நிலப்பரப்புடையது. உலகை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் வட அமெரிக்காவின் மியாமி நகரத்துக் கரைகளிலிருந்து 90 கி.மீ. தூரத்தில் உள்ளது கியூபா. வட அமெரிக்காவின் கீழ் அமைந்துள்ளதால், கியூபாவை அவர்கள் காலனி நாடு என்று குறிப்பிடுவார்கள். நம்மைப் பொறுத்தவரை கியூபா, லத்தீன் அமெரிக்காவின் மகுடமாகத் திகழ்கிறது. கி.பி. 1492இல் கொலம்பஸ் தன் கப்பலின் நங்கூரத்தை கியூபா கரைகளில் வீசியதிலிருந்து 1959 சனவரி வரை, கியூபா ஸ்பானிய காலனியாகவும், அமெரிக்கக் கட்டுப்பாட்டில், பிரிட்டிசாரின் பிடியில் எனத் தொடர்ந்து - இன்னல்களின் பாதுகாவலிலேயே இருந்தது. விளை நிலங்கள், கனிமங்கள் என இயற்கையின் அரவணைப்பில் இருக்கும் நாடு அது. நூற்றாண்டுகளாகப் பல தாக்குதல்களுக்கும், கொள்ளைகளுக்கும்



படிப்பகம்

www.padippakam.com

ஆளானது. உலக ஏகாதிபத்திய நாடுகள் இயற்கை வளங்களைக் குறிவைத்துத்தான் - இந்தியா உட்பட அனைத்து மூன்றாம் உலக நாடுகளையும் படை எடுத்துக் கொண்டிருக்கின்றன.

குரங்கு கையில் கிடைத்த பூமாலை போல, பாடிஸ்டாவின் கைகளில் சிக்கித் தவித்த கியூபாவில் - வேலையில்லாத் திண்டாட்டம் மக்களை வறுமையில் ஆழ்த்தியது. ஜோஸ் மார்த்தியின் சிந்தனைகளில் உரமேறிய பிடல் காஸ்ட்ரோ (இன்றைய அதிபர்), இளைஞர் பட்டாளத்தைத் திரட்டி சூலை 26, 1953இல் மான்கடா படைத்தளத்தை முற்றுகையிட்டு, அதில் தோல்வியைத் தழுவினார். பிறகு அர்ஜென்டினிய இளைஞரான சே குவேராவை இணைத்துக் கொண்டு, புதிய படை ஒன்றுடன் 1956இல் கிரண்மா கியூபாவை வந்தடைந்தது. போராட்டம் மீண்டும் உருப்பெற்றது. காடுகள், மலைகள், கிராமங்கள் என அந்த நிலப்பரப்பு முழுவதும் வசித்து வந்த மக்களை சந்தித்து, நாட்டின் நிலைமையை விளக்கி, ஆதரவைத் திரட்டியது அந்தப் படை. லத்தீன் அமெரிக்காவின் தனித்த குணாம்சங்களில் இப்படி எல்லாப் பகுதி மக்களையும், இனக் குழுக்களையும் சந்தித்து - பிரச்சனைகளின் அரசியலை விளக்கி, அவர்களை அறிவுப்பூர்வமாக அணிதிரட்டுவது நடந்து வருகிறது.

நாடு முழுக்க ஆதரவு அலைவீசத் தொடங்க, 1959 சனவரியில் கியூபா புரட்சிப் படையின் வசமாகியது. அமெரிக்க முதலாளிகள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர். எல்லா நிறுவனங்களும் அரசுடைமை ஆக்கப்பட்டன. நில உச்சவரம்புச் சட்டம், மக்களுக்கு நிலத்தைப் பிரித்தளிக்க வழிவகை செய்தது. கியூப மக்களின் வாழ்வில் நம்பிக்கையும், மகிழ்ச்சியும் பூத்தது. ஆனால், அமெரிக்காவின் தொடர் தாக்குதல்கள் தொடங்கின. பல கூலிப்படைகளால் 3000-க்கும் மேற்பட்ட கியூபர்கள் கொல்லப்பட்டனர். 1962இல் அமெரிக்க நாடுகள் கூட்டமைப்பிலிருந்து கியூபா விலக்கப்பட்டது. கியூபா மீதான பொருளாதாரத் தடைகள் நடைமுறைக்கு வந்தன. சோவியத்தின் நேசக்கரம் கியூபா நோக்கி நீண்டது. சர்க்கரைக் கிண்ணமான கியூபாவிடமிருந்து, சர்க்கரையைப் பெற்றுக்கொண்டு, பண்டமாற்றாக எரிபொருளை சோவியத் வழங்கியது. எல்லாத் துறைகளிலும், சோவியத் தனது தாராள ஆதரவை வழங்கியது. சோவியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சிறிது காலம் கியூபாவின் அரசாங்கம் மூச்சுத் திணறியது. கியூபாவுடன் வர்த்தக உறவு, தொழில்நுட்பப் பரிமாற்றம் என எந்தத் தளத்திலும் உறவை வைத்துக் கொள்ளக் கூடாது என, உலக நாடுகளை எல்லாம் அச்சுறுத்தும் அமெரிக்காவின் பிடி மேலும் இறுகியது.

46 ஆண்டுகளாக அமெரிக்காவை ஆண்ட 10 அரசாங்கங்களும் மாற்றமின்றி கடைப்பிடித்த ஒரே கொள்கை - கியூபா மீதான இந்தப் பொருளாதாரத் தடை மட்டுமே. இன்று வரையிலும் அது நீடிக்கிறது. இந்த நூற்றாண்டின் வரலாற்றில் வெட்கித் தலைகுனிய வேண்டிய, கோழைத்தனத்தின் உச்சபட்ச செயல் இதுவே. கியூபா பயங்கரமான ஆயுதங்களைத் தயாரித்து வருவதாகத் தொடர்ந்து பல

**❝ கியூபா - மற்ற நாடுகளுக்கு ஆயுதங்களையோ, போர்களையோ, மரண ஓலங்களையோ ஏற்றுமதி செய்வதில்லை. மாறாக, சுகாதாரத்தையும், கல்வியையும், நல்வாழ்வையும் ஏற்றுமதி செய்கிறது. ❞**

அவதூறுகளை அமெரிக்கச் செயலர்கள் கிளப்பி வருகிறார்கள். ஈராக் மீதான கட்டுக்கதையைப் போலவே, கொடூர ஆயுதங்களுக்கான சாட்சியங்கள் இதுவரை கிடைக்கவேயில்லை. அமெரிக்காவின் தடைகளால் கியூபாவின் 85 சதவிகித ஏற்றுமதியும், 80 சதவிகித இறக்குமதியும் பாதிக்கப்பட்டது. நாட்டின் உற்பத்திக் குறியீடு 35 சதவிகித சரிவில் பயணித்தது.



ஜுயென் கரெட்டெரோ இபானேஸ், எம்.ஏ. பேபி, ஹெர்னாண்டஸ், பிரகாஷ் காரட், மு. கருணாநிதி, என். ராம், என். வரதராஜன்

ஆனால், இதையெல்லாம் கடந்து பிடல் காஸ்ட்ரோ மக்கள் ஆதரவுடன் கூட்டு ஆலோசனைகளின் வாயிலாக, புதிய தீர்வுகளை நோக்கி வெற்றிகரமாகப் பயணித்துக் கொண்டிருக்கிறார்.

வேறு எந்த முதலாளித்துவ நாட்டைக் காட்டிலும் - எழுத்தறிவு, கல்வி, சுகாதாரம் எனப் பல தளங்களிலும் அதிசயிக்கத்தக்க வளர்ச்சிகளை எட்டி நிற்கிறது கியூப வாழ்க்கை. லத்தீன் அமெரிக்காவின் சராசரி வளர்ச்சி 4 சதவிகிதம் என்றால், கியூபாவின் வளர்ச்சி 11.8 சதவிகிதத்தை எட்டி நிற்கிறது. எங்கும் இல்லாதவாறு சிறு காய்ச்சல் முதல் நுட்பமான அறுவை சிகிச்சை வரை, கியூபா மக்களுக்கு இலவசம்தான். உலகின் தலைசிறந்த மருத்துவர்களும், மருத்துவமனைகளும் கியூபாவில்தான் உள்ளன. புற்றுநோய்க்கு மருந்தைக் கண்டுபிடித்தே தீருவோம் என பிடலின் உறுதியுடன் - வருங்கால மனித குலத்திற்கான அக்கறையுடனான ஆராய்ச்சிகள், அந்த மண்ணில்தான் நடத்தப்படுகின்றன.

அய்ந்து லட்சம் மாணவர்கள், உயர்கல்வியை இலவசமாகப் பெற்று வருகிறார்கள். பல பின்தங்கிய நாடுகளைச் சேர்ந்த 17,000 மாணவர்கள், இலவச உயர் கல்வி கற்று வருகிறார்கள். இதில் 12,000 மாணவர்கள் மருத்துவம் பயிலுகிறார்கள். உலகின் 60 நாடுகளில் 27,000 சுகாதாரப் பணியாளர்கள் தன்னலமின்றி பணிபுரிகிறார்கள். இதில்



படிப்பகம்

www.padippakam.com



சே குவேராவின் வாழ்க்கை வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சி

2,345 பேர், தற்பொழுது பாகிஸ்தானில் பூகம்பம் ஏற்பட்ட பகுதிகளில் தங்கி, நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். லத்தீன் அமெரிக்க நாடுகளில் மொத்தம் ஒரு லட்சத்து 70,000 பேர் இலவச கண் அறுவை சிகிச்சை மூலம் பார்வை பெற்றுள்ளனர். இந்தத் திட்டத்தில் கியூபாவுடன் வெனிசுலாவும் ஒன்றிணைந்து செயல்படுகிறது.

இத்தனை நெருக்கடிகளுக்கு இடையிலும், தொடர்ந்து லத்தீன் அமெரிக்க நாடுகளை வழிநடத்தும் நாடாக, முன் மாதிரியாகத் திகழ்கிறது கியூபா. இது எப்படி சாத்தியமாகிறது? உலகப் பொருளாதார நிபுணர்கள் இதைப்பற்றி தீராது சிந்தித்து குழம்பிப் போயிருக்கும் வேளையிது. சோசலிசத் தத்துவத்தின் பலமும், வழிகாட்டுதலும், மக்களை நேசத்துடனும், நெகிழ்வுடனும் அணுகும் அரசாங்கத்தின் நடைமுறையும்தான் - இத்தகைய வெற்றிகளை சாத்தியமாக்கியுள்ளது. இந்த நூற்றாண்டில் வெனிசுலா, பிரேசில், பொலிவியா எனப் பல நாடுகள் கியூபா மாதிரியைப் பின்பற்றத் தொடங்கியுள்ளன. உலகம் முழுவதிலும் இன்னல்களையும், ஏற்றத்தாழ்வுகளையும் விதைத்து தோல்வியைத் தழுவி, முதலாளித்துவ - ஏகாதிபத்திய அணுகுமுறை தலைகுனிந்து நிற்கிறது. அந்த ஆத்திரத்தில்தான் கியூபாவை அழித்தொழிக்க, பிடல் காஸ்ட்ரோவை கொலை செய்யத் துடிக்கிறது - அமெரிக்க வன்மத்தின் வெப்ப அலைகள்.

இத்தகையதொரு சூழலில்தான் கியூபா ஆதரவுக் குழுக்கள், உலகம் முழுவதும் உருவாகின்றன. தற்பொழுது 1850 கியூபா நட்புறவுக் குழுக்கள், உலகின் 135 நாடுகளில் இயங்கி வருகின்றன. சென்னையில் சனவரி 20, 21 தேதிகளில் 'ஆசிய - பசிபிக் பிராந்திய கியூபா ஆதரவு மாநாடு' நடைபெற்றது. 16 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இதில் பங்கேற்றனர். அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை விலக்கக்கோரி, உலகம் முழுவதிலும் கியூபாவுக்கு ஆதரவான அலை வீசி வருகிறது. கியூபா ஆதரவு என்பது, ஏகாதிபத்திய எதிர்ப்புக் குறியீடாகவும் மாறி வருகிறது எனப் பல பிரதிநிதிகள் கருத்து தெரிவித்தனர்.

இம்மாநாட்டைத் தொடங்கி வைத்த மார்க்சிஸ்ட் கட்சியின் சீத்தாராம் எச்சூரி, 'உலகத்தில் மனிதகுல நாகரிகத்தின் எதிர்காலம், சோசலிசம் அல்லது காட்டுமிராண்டித்தனம் ஆகிய இரண்டுக்கும் இடையேதான் சாத்தியம்' என்ற பிடலின் வரிகளை நினைவுபடுத்தினார். உலகில் 358 தனி நபர்கள், பல நாடுகளின் மொத்த வருவாயை விட அதிகமான செல்வங்களைக் குவித்து வைத்திருப்பதைச் சுட்டிக் காட்டினார். கியூபா ஆதரவு என்பது, உலகில் ஒற்றைக் குவிமய்யத்தை உருவாக்க முயலும் அமெரிக்காவின் திட்டங்களுக்கு எதிரான நடவடிக்கையாகும் என்றார் அவர்.

கியூபா கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினரும், கியூபா மக்கள் நட்புறவு அமைப்பின் தலைவருமான செர்ஜியோ கொரேரி ஹெர்ணாண்டஸ் தனது ஏற்புரையில், 'கியூபா மற்ற நாடுகளுக்கு ஆயுதங்களையோ, போர்களையோ, மரண ஓலங்களையோ ஏற்றுமதி செய்வதில்லை. மாறாக சுகாதாரத்தையும், கல்வியையும், நல்வாழ்வையும் ஏற்றுமதி செய்கிறது' என்றார். உலகம் முழுக்க மாற்றத்தின் அலை வீசுகிறது. அதன் பக்கம் அக்கறையுள்ள மனிதர்கள், மன உறுதியுடன் உங்கள் ஆதரவைத் தெரிவியுங்கள் என்றார்.

கியூபாவின் இந்தியத் தூதர் ஜுவென் கரெட்டெரோ இபானேஸ், அமெரிக்காவின் தடைகளை மீறி, அங்கு வசிக்கும் பல தனி நபர்கள், கியூபாவுடன் தங்கள் உறவையும், ஆதரவையும் தொடர்வதைக் குறிப்பிட்டார். பல தொழில்நுட்பத் தளங்களிலும்கூட பரிமாற்றங்கள் நடந்து வருவதாக அவர் கூறினார். அமெரிக்க மக்கள் பாவம் அப்பாவிகள், அவர்களுக்கு அமெரிக்கத் தொலைக் காட்சிகள் ஒளிபரப்புவது மட்டும்தான் தெரியும். கியூபா பற்றிய உண்மை நிலவரங்களை அவர்களுக்கு விளக்கி, அவர்கள் மனதில் உள்ள தவறான எண்ணங்களைக் களைய வேண்டும். அவர்களின் நட்பையும் ஆதரவையும் நாம் பெற வேண்டும் என்றார்.

பிரதிநிதிகள் குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, விவாதங்கள் நடைபெற்றன. கியூபா ஆதரவு இயக்கத்தை உலகம் முழுவதிலும் எப்படி முன்னெடுத்துச் செல்வது; உலக மக்களின் நட்பை எப்படிப் பெறுவது; பெரும் ஊடகங்களில் திட்டமிட்டுப் பரவலாக்கப்படும் கியூபா குறித்த செய்திகளின் அரசியலை முறியடித்து, கியூபாவின் வாழ்க்கையைப் பற்றியும் அதன் சாதனைகள் பற்றியுமான தகவல்

## வாழ்வின் நிமிடங்கள்


இம்மாநாட்டில், சே குவேராவின் வாழ்க்கை வரலாற்றுப் புகைப் படக் கண்காட்சியான 'வாழ்வின் நிமிடங்கள்' இடம் பெற்றது. பிரதிநிதிகள் அனைவரும் கண்காட்சியை வெகுநேரம் கண்டுகளித்தனர். கியூப நாடாளுமன்ற உறுப்பினர், பல காட்சிகளை முதல் முறையாகப் பார்த்ததாக தன் குறிப்பைப் பதிவு செய்தார். இந்தக் கண்காட்சி கியூப புரட்சியை உயிர்ப்போடு தனக்குள் வைத்துள்ளதாக கியூபா தூதர் தெரிவித்தார். இக்கண்காட்சி, புதிய தலைமுறையினரிடையே கியூபா குறித்த புதிய சித்திரங்களையும் ஆதர்சத்தையும், உலகமயத்திற்கு எதிரானப் போராட்டத்தையும் முன்னெடுத்துச் செல்ல உந்து சக்தியாக விளங்கும் என்றார். கியூபா தூதரகம் மற்றும் நட்புறவுக் குழுக்களின் ஆதரவுடன் இந்தக் கண்காட்சி - இந்தியாவின் எல்லா நகரங்களிலும், பல்கலைக் கழகங்களிலும் வலம் வர இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com

*With Best Compliments from*



# SOFTLOGIC SYSTEMS

## An International Call Centre

***We have vacancy for Graduates with :***

- Good command over Spoken English
- Willing to work in shifts
- Interested in learning and adapting

*Eligible / Interested Candidates may Contact :*

**Softlogic Systems Private Limited**
#10, P.T. Rajan Salai, K.K. Nagar, Chennai - 600 078
Tel : (44) 2485 1188 / 2489 1188 ■ E-mail : hr@softlogicsys.net

படிப்பகம்

www.padippakam.com

களை எப்படிப் பகிர்ந்து கொள்வது எனப் பல தளங்களில் விவாதங்கள் நடந்தேறின. அரசியல் மற்றும் சமூகத் தளங்களில் பணியாற்றுபவர்கள், விவசாயிகள், தொழிலாளிகள், இளைஞர்கள், பெண்கள், மாணவர்கள், அறிவுஜீவிகள் மற்றும் கலைஞர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து, கியூபா ஆதரவு நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

'அமெரிக்காவுக்கு எதிரான போரில் கியூபா தனியாக இல்லை. எங்கள் மக்கள் உங்களோடு இருக்கிறார்கள்' என்றார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர் து. ராஜா. வருகிற மார்ச் முதல் வாரத்தில், அமெரிக்க அதிபர் புஷ் இந்தியா வரும் தருணத்தில், கியூபாவின் மீதான தடைகளை விலக்கக் கோரி இயக்கங்கள் நடத்தப்படும் என



முத்துக்கிருஷ்ணன், ஜுயென் கரெட்டெரோ இபானேஸ், க்யூட்டோ சோசா

மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் காரட் அறிவித்தார். இந்தியாவைப் போல, வேறு எந்த நாட்டிலும் கியூபாவுக்கு இத்தகைய ஆதரவு கிடைத்திருக்க வாய்ப்பில்லையென்றார் அவர். கியூபாவுக்கு இந்தியாவிலிருந்து கப்பல்களில் கோதுமையும், துணிமணிகளும், மருந்துகளும் அனுப்பப்பட்டதை நினைவு கூர்ந்தார். மேலும், சூலை 26அய் கியூபா நட்புறவு நாளாக அறிவித்து அன்று, ஆசிய பசிபிக் நாடுகளில் கியூபாவுக்குப் பேராதரவு தெரிவிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் நடைபெறும் என அறிவித்தார் காரட்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கியூபா பற்றிய தனது கவிதையை வாசித்தார் தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி. வரவேற்புக் குழுவின் தலைவர் என். ராம், தேசிய ஒருங்கிணைப்பாளர் விஜயராகவன், ஜி. ராமகிருஷ்ணன், வீ. ராஜ்மோகன் போன்றோர், தங்கள் கருத்துகளைப் பதிவு செய்தனர். நாட்டுப்புறக் கலைகள், நிகழ்ச்சிக்குப் புத்துயிர் அளித்தது. பாப்பம்பாடி ஜமாவைக் கேட்ட கியூப பிரதிநிதிகள் ஆட்டத்தில் இறங்கினார்கள். கியூபா என்றாலே உலகம் முழுவதும் உற்சாகம் தொற்றிக் கொள்வது இயல்புதானே!

''இந்திய மக்கள் எங்களுக்கு மிகவும் உணர்ச்சிப்பூர்வமான வரவேற்பை அளித்து, இந்த மாநாட்டையும் நடத்தித் தந்துள்ளனர். கலை நிகழ்ச்சிகளோடு புதிய நம்பிக்கையை எங்களோடு எடுத்துச் செல்கிறோம். நம்பிக்கை என்பது புரட்சிகர இயக்கங்களிடம் பிரிக்க முடியாத ஒன்று. அவநம்பிக்கை பணக்கார நாடுகளின் சொத்து. நாம் மேலும் மேலும் நம்பிக்கையோடும், காதலோடும் பயணிப்போம்'' என்று நிறைவு நாள் பொது நிகழ்வின் ஏற்புரையில் கூறினார் கொரெரி. 'கியூப புரட்சி தடுத்து நிறுத்த முடியாதது' என்றார் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் கேப்ரியல் கார்சியா மார்க்வேஸ். அதைப் போலவே, கியூபாவின் புரட்சியும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. உலகமெல்லாம் கியூபாவின் நேசக்கரம் சென்றடைகிறது. சிறந்ததொரு உலகம் சாத்தியமே. யுத்தங்களற்ற அந்த உலகைச் சென்றடைவோம். ●

*இக்கட்டுரையாளர், ஆசிய பசிபிக் பகுதி கியூபா ஆதரவு மாநாட்டின் பிரதிநிதி*

## கியூபாவுக்கான ஆதரவு வலிமையடைந்துள்ளது



கியூப கம்யூனிஸ்ட் கட்சியின் மய்யக் குழு உறுப்பினரும், கியூப மக்கள் நட்புறவு அமைப்பின் தலைவருமான செர்ஜியோ கொரெரி ஹெர்னாண்டஸ்

*இவ்வளவு சிரமத்துக்கிடையில், லத்தீன் அமெரிக்கா மட்டுமின்றி உலகின் பிற நாடுகளுக்கும் கியூபாவால் எப்படி உதவி செய்ய முடிகிறது? இளம் மருத்துவர், பொறியாளர் அல்லது தொழில்நுட்ப வல்லுநர் என உலகம் முழுவதும் சென்று எப்படி உதவி செய்கிறார்கள்?*

கல்வியால்தான் இவையெல்லாம் சாத்தியமாகிறது. உலக ஆதரவின் மதிப்பை கியூப நாட்டு மக்கள், மூன்று தலைமுறைகளாக கற்றுணர்ந்து வருகிறார்கள். எல்லாவற்றுக்கும் மேலாக, நாங்கள் உலகெங்குமிருந்தும் பேராதரவைப் பெற்றிருக்கிறோமே! சென்னையில் நடைபெறும் கியூபா ஆதரவு மாநாடும் இதன் வெளிப்பாடுதான். நாங்கள் உலகெங்கும் இருந்து பெற்ற ஆதரவை திரும்பச் செலுத்துவதற்கான ஒரு வழிமுறையே இது என்று நினைக்கிறேன். இது நீண்ட நாட்களாக நடந்து வருகிறது. அமெரிக்கா, கியூபா மீது பொருளாதாரத் தடை விதித்து 46 ஆண்டுகளாகிறது. ஆனால், உலக மக்களின் ஆதரவு வரலாறு, இதைவிடப் பழமை வாய்ந்தது. பிற மக்களுடன் முன்னெப்போதைக் காட்டிலும் – தற்பொழுது கியூபாவுக்கான ஆதரவு வலிமையடைந்துள்ளது. கியூப மக்களும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கும் ஆதரவு இயல்பானதே. ஒவ்வொரு கியூப நாட்டுக் குடும்பத்திலிருந்தும் ஒரு ஆசிரியரோ, ஒரு மருத்துவரோ, ஒரு ராணுவ வீரரோ அல்லது ஒரு தொழில்நுட்பத் துறை வல்லுநரோ - தங்கள் ஆதரவைத் தெரிவிப்பதற்காக வேற்று நாடுகளுக்குச் செல்லாதவர் யாரும் இருக்க முடியாது.



படிப்பகம்

www.padippakam.com

## தலித் வரலாற்றை மீட்டெடுக்கும் பணியில் இருக்கும் 'தலித் முரசு' தொடர்ந்து வெளிவர வாழ்த்துகள்!




பா. ரவிச்சந்திரன், மாநில அமைப்பாளர்
தலித் விடுதலைக்கான மனித உரிமை அமைப்பு - தமிழ் நாடு



சுனாமி பேரழிவில் நிவாரணம் மற்றும் மறுவாழ்வில் தலித் மக்கள் தீண்டாமை மற்றும் சாதிய ரீதியாக புறக்கணிக்கப்பட்டது தொடர்பாக VDS/HRFDL மூலம் சென்னையில் ஆகஸ்ட் 30, 2005இல் நடத்தப்பட்ட தேசிய பொது விசாரணை.



சுனாமியில் வீடுகளை இழந்து தவித்த தலித் மக்களுக்கு VDS/HRFDL சார்பாக கட்டிக் கொடுக்கப்பட்ட தற்காலிக குடியிருப்புகள்.




சுனாமியில் பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு வாழ்க்கை மேம்பாட்டிற்காக தையல் இயந்திரம் VDS/HRFDL சார்பாக கொடுக்கப்பட்டது.



நவம்பர் 2005இல் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, கொள்ளிட கரை உடைப்பில் பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு VDS/HRFDL சார்பாக உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டது.

❖ சுனாமி மற்றும் வெள்ளப் பெருக்கில் பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு வாழ்வாதாரங்களாக ஆடு, மாடு, சிறுகடை, தையல் இயந்திரம், மீன் வியாபாரம், அரிசி வியாபாரம் இன்ன பிற வழங்கப்பட்டுள்ளது. ❖ மாணவர்களுக்கு மாலை நேரகல்வி நடத்தப்படுகிறது. ❖ மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. ❖ சுனாமி மற்றும் வெள்ளப்பெருக்கில் காணப்பட்ட சாதிய பாகுபாட்டை தேசிய பொது விசாரணை மூலம் எல்லா நாடுகளுக்கும் கொண்டு செல்லப்பட்டது.

### தலித் விடுதலைக்கான மனித உரிமை அமைப்பு - தமிழ் நாடு (HRFDL - TN)

203/1, வெங்கடேஸ்வரா நகர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் மாவட்டம், தமிழ் நாடு
தொலைபேசி : 04364 - 251216, 251135

படிப்பகம்

www.padippakam.com

# புதிய பரிணாமத்தில் தமிழ்த் திரைப்படம்?




■ ப. ஓம்பிரகாஷ்

தமிழ் நாட்டின் அடையாளங்களை, தமிழர்களின் அடையாளங்களைக் கொண்ட திரைப்படம் வெளிவந்திருக்கிற மகிழ்ச்சி எங்கெங்கும் தெரிகிறது. கிராமங்களை முதன்மையாகக் கொண்டு செயல்படும் நகரங்களில், குடும்பம் குடும்பமாக (இரவு இரண்டாவது ஆட்டத்திலும்) வந்து பார்க்கிற படமாக உள்ளது, இயக்குநர் சேரனின் 'தவமாய் தவமிருந்து'. இதன் மூலம் கோடம்பாக்கத் திரைப்பட வரலாற்றில் தனக்கென தனித்ததொரு அடையாளத்தை உருவாக்கிக் கொண்டதோடு, தமிழ்த் திரைப்பட வாசகனின் நினைவை விட்டு அகலாத நபராகவும் சேரன் உயர்ந்திருக்கிறார். வரவேற்க வேண்டிய ஒன்றே!

தந்தை, தந்தையின் பாசம், தந்தை என்கிற ஆளுமை, தந்தை என்பதின் எல்லாமுமான தமிழ் அடையாளம் என தந்தையின் தன்மை, படமெங்கும் விரவிக் கிடக்கிறது. அதுவும் தாரம் என்கிற வாழ்க்கைத் துணைவியை அவர் எப்படி மதிக்கிறார் என்றும் நேர்த்தியாகக் குறிப்பிடப்படுகிறது, காட்சிப் பூர்வமாக. அதே போல் குடும்பத்தை வழிநடத்தும் நல் தலைவியாக அவரும் நடந்து கொள்வது, மிகவும் கவனத்தோடு கையாளப்பட்டுள்ளது. ராஜ்கிரணும் சரண்யாவும் எளிதில் மறக்க முடியாத உழைப்பைத் தந்திருப்பது உண்மை. ''இது எங்க குடும்ப விஷயம்... இதுல நீ தலையிடாத...'' என (சரண்யா), தனது மூத்த மருமகளைக் கேட்கிறார். மருமகள் குடும்பத்தில் ஒருவர் இல்லையா? கோபத்தில் கேட்கலாம் என்றால், நேரம் கருதி வெட்டப்பட்ட காட்சிகளும் இப்படியான தன்மை கொண்டதாக இருக்கிறது. இதன் அடிப்படை குணாம்சம் எதிலிருந்து வருகிறது என்பது தெரியாததா?

சுமார் 20 ஆண்டுகளாக நமது தினசரிகளில் 'காதல் ஜோடி ஓட்டம்' எனச் செய்தி வெளிவராத நாளே இல்லை. இதற்காக, தமிழ்ச் சமூகத்தை நெறிப்படுத்தும் வகையில் - கதையின் மய்யப் போக்கை அமைத்ததற்கு மிகுந்த நன்றியை சொல்ல வேண்டியிருக்கிறது, இயக்குநர் சேரனுக்கு. பலர் பார்க்க ரோஜாக்களை கொடுத்தும், பலர் முன்னிலையில் பிறந்த நாள் பரிசைக் கொடுக்கிற கொச்சையான முறை, நிச்சயம் தமிழ் நாட்டில் உள்ள எந்தக் காதலர்களிடமும் இருந்ததில்லை. உங்கள் வார்த்தையில் சொன்னால் - 'கண் மூடித்தனமான காதல்' கொண்டவர்களிடம்கூட! காதலுக்கு அச்சமும், நாணமும் தானே வேர். தமிழ்க் காதலுக்கு?

''அண்ணே நாலு இட்லியும், ரெண்டு பரோட்டாவும் எவ்வளவு'' என்று கேட்கையில் காட்சியின் நிமித்தம் அருகாமைக் காட்சியில், மாநகர்ப்புற தள்ளுவண்டி இட்லி காட்டப்படுகிறது. ''அடுப்பு மேல இருந்து போறாப்போல இருக்கு...'' என அம்மா சொல்ல, மகன் கழிப்பறையை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்கிற நகர்ப்புற நவீன மாற்றம், தமிழ்ப் பார்வையாளனுக்குப் புதுசு. ஆனால், அந்தக் கழிப்பறை எந்தவிதக் கழிப்பறை என அருகாமைக் காட்சியில் காட்ட வேண்டிய அவசியம் இல்லையா? அழகியல் நோக்கில் தவிர்த்திருந்தால், நிச்சயம் ஆபத்து உள்ளது. நீங்கள் குறிப்பிடும் மேற்கத்திய வடிவக் கழிப்பறையை பெரும்பாலான தமிழர்கள் கண்டே இருக்க மாட்டார்கள். பலர் முதன் முறையாக இப்படத்தில்தான் பார்த்திருப்பார்கள்.

படத்தில் அழுத்தமாகக் குறிப்பிடப்பட வேண்டிய அம்சம் இசை. படம் முழுக்க மக்களிடம் பரவலாக சேர்ந்து அங்கீகரிக்கப்பட்ட திரைப்படப் பாடல்கள் ஒலிக்கின்றன - பின்னணி இசையாக. அது புதிய பார்வையை படத்துக்குத் தருகிறது. கதாநாயகன் மீது கதாநாயகி காதல் வயப்பட்டதை மைனாக்களின் ஒலியில் பதிப்பித்த விதம் நெகிழ்ச்சியானதே. ஆனால், முத்தையா (ராஜ்கிரண்) இறந்து சுடுகாட்டில் புதைக்கும் நிலையில், செம்பு வட்டுக் கொண்டு தடித்த கட்டையால் அடிக்கும் தமிழர்களின் தொன்மமான மரண இசைக் கருவியின் ஒலி, கவனிக்கப்படாமல் போனது ஏன்? சபேஷ் - முரளியை தோளிலும் தாங்கும் சேரனின் வலி போன்றது அவ்வொலி இல்லையா?

கலை, ஒப்பனை, நடிப்பு, பாடல்கள், மிகக் குறைவான வசனங்கள், விளம்பர முறை எனப் பலவற்றிலும் நேர்த்தியான பரிணாமத்திற்கு வழிகாட்டும் இயக்குநர் சேரன், கொண்டாடப்பட வேண்டியவர் தான். படத்தொகுப்பு பி. லெனின் என்று வருகிறது. சேரன்தான் படத்தொகுப்பைச் செய்தார் என்பது ஊர் அறிந்த செய்தி. 'ஆட்டோகிராப்பை' தொடர்ந்து இந்தப் படமும் தேசிய விருதுகளை வாங்கும் என்பது முழு நம்பிக்கை. ஆனால், படத்தொகுப்புக்கு விருது வந்தால் சேரனைப் பாராட்ட முடியுமா? இயக்குநர் மற்றும் படத்தொகுப்பாளராக பி. லெனின் பரவலாக அறியப்படுபவர். அவர் உங்களுக்கு உதவியமைக்காக அவரைத்தான் குறைத்து மதிப்பிட வேண்டுமா? விருது கிடைத்த பிறகு உங்கள் சூழலை விவரித்தால், தமிழர்கள் ஏற்பது எதிர்காலத்திற்கு நல்லதா?



படிப்பகம்

www.padippakam.com

'ஆட்டோகிராப்' தேசிய விருதுக்குப் பிறகு, நாளிதழ்களில் படத்தொகுப்பு மற்றும் இயக்கத்துக்கு விருது தந்திருக்க வேண்டும் என்ற ஆதங்கத்தோடு 'விட மாட்டேன்' என நம்பிக்கையுடன் உறுதியாகச் சொன்ன சேரன், படத்தொகுப்பிற்காக அதற்கென சங்கத்தில் முறையாகப் பதிவு பெற்றுதன்னைவெளிப்படுத்துவது, இன்றைய நிலையில் சிரமமான ஒன்றா? உடன் பணிபுரியும் படத்தொகுப்பு தொழிலாளரைக் குறைத்து மதிப்பிடுவதுதானே இதன் பொருள்.

உடலால் இயலாதவர்கள் எப்பொழுதும் ஒதுக்கப்பட வேண்டியவர்கள் அல்ல என்பதையும், அவர்கள் சமூகத்தின் செயல்பாட்டில் பங்கேற்பதில் முக்கியமாகவும் இருப்பார்கள் என்பதை, மீண்டும் காதுகேட்கும் திறமை குறைந்த அழகர்சாமி (இளவரசு) பாத்திரம் மூலம் சொல்வதும் இயக்குநர் சேரன்தான். அதேவேளை, தமிழ்ப் படம் என்றால் அதிலும் வீரம் வந்து வாளேந்தும் படம் என்றாலே, மதுரையை கதைக்களமாகக் கொண்டு குறிப்பிட்ட சமூகத்தை மய்யமிட்டே படம் எடுக்கப்படும் (கட்டாயமாக்கப்படும்) சூழல் நிலவுகிறது. மதுரை,

> **❝ நமது தமிழ்ச் சமூகம் என்பது தாய்வழிச் சமூகத்தின் வேராகும். ஆனால், தந்தை வழிச் சமூகமாக நாம் மாறியது, ஆணாதிக்கத்தின் தீவிர செயல்பாடே. ❞**

சிவகங்கை, காரைக்குடி என நிகழும் கதையும் அதே குறிப்பிட்ட சமூகத்தின் கதையாகவே நிகழ்வதாக இயக்குநர் சேரன் காட்சிப்படுத்துகிறார். வாளேந்தும் தன்மையில் சீரழியாது இப்படித் தங்களது வாழ்வையும் அமைத்துக் கொண்டவர்கள் உண்டு என சாதிய அரவணைப்பையும் சொல்வதற்கா இது?

நமது தமிழ்ச் சமூகம் என்பது தாய் வழிச் சமூகத்தின் வேராகும். ஆனால், தந்தை வழிச் சமூகமாக நாம் மாறியது, ஆணாதிக்கத்தின் தீவிர செயல்பாடே. வேரை அறுத்ததும் நாம்தான். வேறு யாருமல்ல. பாருங்கள், தந்தைப் பாசத்தை 'நிறைவாக' என்று சொன்ன இந்தப் படத்திலும் - 'ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு அம்மா - அப்பா' என்ற பாட்டாகட்டும், இறப்பிற்கான சடங்காகட்டும், எல்லாமே ஆணுக்கான முன்னுரிமை மட்டுமே அளிக்கப்பட்டுள்ளது. ''நாட்டரசன் கோட்டையில் இருந்து வாழ்க்கைப்பட்ட சாரதா'' என்று குழந்தைகள் வாசிப்பதில் மட்டுமே அவரின் அடையாளத்தைக் காண முடிகிறது. அவரது அப்பா, அம்மா, உடன்பிறந்தோர் பற்றி தகவல்கூட இல்லை. இறப்பின் சடங்கை அவருக்காக காட்டினால், அவரது பிறந்தகத்தைக் காட்ட வேண்டி வரும் - படத்தில் முன்வைக்கப்படும் சமூகத்தின் அடிப்படையில்கூட. 'தந்தை' என்கிற தனித்துவம் - தாய்வழி பாட்டி வீட்டில் சொல்லப்படுகிற விமர்சனங்களில் இருந்தே பிள்ளைகள் பெறுகிறார்கள் என்பது, தமிழ்ச் சமூகத்தின் விழுதுகளாகத் தொடரும் வரலாறு. மருந்துக்குக்கூட தாய் வழிப் பாட்டி வீடு பற்றி சொல்லப்படாமலே போனதின் காரணம் என்ன? இறக்கும்தருவாயில்கூட, தனது பிறந்தகத்தைப் பற்றி குறிப்பிடாமல் இறக்க மறுக்கிற நம் தாய்மார்களின் வழக்கத்தை - இப்படியான படத்தில் தவிர்க்க இயலுமா?


'இப்படியின்றி' தொடரட்டும் - இயக்குநர் சேரனின் சந்தோஷப் பயணம்...






எதை விதைக்கிறோமோ
அது விளையும்

கடந்த 15 ஆண்டு காலச் சமூகப் பணியில் கல்வி, பொருளாதாரம், சமூக விடுதலை ஆகியவற்றிற்காக நெஞ்சுரம், ஒற்றுமை, கருத்துத் தெளிவு முதலியவற்றையே விதைத்து - புரட்சியாளர் அம்பேத்கர் காட்டிய வழியில் அயராது பயணம் மேற்கொள்ள உறுதியேற்கிறது 'விழுதுகள்'.


'விழுதுகள்'
அலுவலகம் : 10/478, வி.எஸ்.வி. குடியிருப்பு
அவினாசி - 641 654, கோயம்புத்தூர்
தொலைபேசி : 04296 - 275985, 287688
E-mail : vizhuthugal@yahoo.co.in




படிப்பகம்

www.padippakam.com

# ''சக மனிதர்களே - என் கலை முயற்சியின் வேரும் விழுதுகளும்''

சென்ற இதழில் வெளிவந்த தலித் க. சுப்பையா அவர்களின் பேட்டி இந்த இதழிலும்...



**நீங்கள் வாழ்ந்த கிராமத்தின் மண் வாசனையைப் பற்றிச் சொல்லுங்கள்...**

கிராமத்தில் நான் வாழ்ந்த காலம் துயரங்களின் தொகுப்பாகும். நடப்பது, ஓடுவது, பேசுவது, சிரிப்பது, உடுத்துவது, படிப்பது போன்ற அனைத்தும் கள்ளர்களின் கண்காணிப்புக்கு உட்பட்டதாகவே இருந்தது. சாதி ஒழுங்கிற்கான இக்கண்காணிப்பு, சேரி மக்கள் மீது ஊர்க்காரர்கள் சுமத்திய சமூகக் கட்டுப்பாடாகவே இருந்தது. அச்ச உணர்வும், அடங்கி வாழ வேண்டிய நிர்ப்பந்தமும் என் உடம்பைக் குள்ளமாக்கி விட்டது. ஒழுங்கை மீறுதல் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. இதற்கானத் தீர்ப்பை வழங்கும் அதிகாரப் பீடமாக பஞ்சாயத்துமுறை இருந்தது. கள்ளர்கள்தான் பஞ்சாயத்தின் நீதிபதிகள். பஞ்சாயத்தின் முதலும் முடிவுமான நோக்கம், சாதிக் கட்டமைப்பைக் கட்டிக் காப்பதுதான். காலம் முழுவதும் சேரிமக்கள் கைகட்டி, விழுந்து வணங்கி மன்றாடுபவர்களாகவும், கள்ளர்கள் தீர்ப்புச் சொல்பவர்களாகவும் இருப்பதற்கான சாதி மேலாதிக்கத்தை - ரத்தம் சிந்தியாவது காப்பதற்கான ஆவணமில்லாத அமைப்புதான் பஞ்சாயத்தாகும்.

காலில் செருப்பணிய முடியாது; குதிகால் வரை வேட்டி உடுத்த முடியாது; முழங்காலுக்கு மேல் வேட்டியைச் சற்று உயர்த்திக் கட்டினால், 'உந்தொடைய எங்க பெண்கள் பார்க்கணும்னு வேட்டியத் தூக்கிக் கட்டுறியா' என்று கள்ளர்கள் கோபப்படுவார்கள். பாட்டுப் பாடிக்கொண்டு நான் செல்லும்போது, 'ஊருக்குள்ள பாட்டு என்னடா வேண்டியிருக்கு' என்று கேட்பார்கள். கள்ளர்கள் எதிரே வரும்போது, சேரி மக்கள் பாதையைவிட்டு தூர ஒதுங்கிச் செல்ல வேண்டும். உடம்பை வளைத்து மரியாதை செலுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாத பட்சத்தில் 'என்னடா/என்னடி வெறப்பா போறே போ, போ, ஒரு நாளைக்குச் சிக்குவே அப்ப வெச்சுக்குறேன்' என்று மிரட்டுவார்கள். அந்தச் சேரிப்பய/ பொம்பள என்னை உரசிக்கிட்டுப் போறான்/போறா, என்று ஊருக்குள் திட்டமிட்டுப் பரப்புவார்கள். இக்கருத்தை ஊதிப் பெருக்கி ஒருநாள் பழி தீர்த்துக் கொள்வார்கள்.

எங்கள் சேரிக் கோவிலான காளியம்மன் கோவில் வரவு செலவை என் தந்தைதான் நிர்வகித்து வந்தார். மேலும், வெட்டுக் காயங்களுக்குப் பச்சிலை கட்டும் மருத்துவராகவும், ஆடி மாதத்தில் நாற்றங்காலில் பழுதில்லாமல் விதை நெல் பாவுவதில் தேர்ச்சிப் பெற்றவராகவும் என் அப்பா விளங்கி வந்தார். இதனால் எங்கள் வீட்டிற்கு தினமும் மாலை நேரத்தில் ஆட்கள் வந்து செல்வார்கள். இப்படி வருபவர்கள் உட்காருவதற்காக, வீட்டின் முன்பு இரண்டடி உயரத்தில் 5 அடி நீளத்தில் பட்டியல் கல்லை அப்பா போட்டிருந்தார். ஒரு நாள் கள்ளர் சாதியைச் சேர்ந்த ஒருவர் வேலைக்கு ஆள் கூப்பிட வந்தபோது, கல்லில் உட்கார்ந்திருந்த சிலர் எழுந்திருக்காததால் மறுநாள் பஞ்சாயத்தைக் கூட்டி, உட்கார்ந்திருந்த பெரியவர்களைக் கும்பிட்டு விழ வைத்து மன்னிப்புக் கேட்க வைத்தார்கள். இப்பயத்தை மனதில் வைத்து அப்பா கல்லைத் தரையில் கிடத்திப் போட்டு விட்டார்.

இதைப் போலவே, காளியம்மன் கோவில் திருவிழாவின்போது வைக்கப்படும் பொங்கல் சோற்றையும், வெட்டப்படும் ஆட்டுக்கறியையும் கூறுபோட்டு குடும்பங்களுக்குக் கொடுப்பதற்காக கோவில் முன்பு அகலமான பட்டியல் கல்லை பெரியவர்கள் போட்டிருந்தனர். கோவில் முன்பு உள்ள ஆற்றைக் கடப்பதற்குப் பாலம் உள்ளது. உயரமான இப்பாலத்தில் கள்ளர்கள் உட்கார்ந்திருப்பார்கள். அதைவிடத் தாழ்வாக உள்ள கோவில் பட்டியல் கல்லில் நாங்கள் உட்கார்ந்திருப்போம். நாங்கள் கல்லின் மீது அமர்வதைப் பொறுக்க முடியாத கள்ளர்கள், 'ஏன்டா! உங்க குண்டிக்கு உட்கார்ரதுக்கு உசரமான



படிப்பகம்

www.padippakam.com

எடம் தேவைப்படுதா? போற போக்கப் பார்த்தா எங் களுக்குச் சமமா உட்கார்ந்திடுவிக போல இருக்கே' என்று கோபப்படுவார்கள். நாங்க வாங்கிப் போட்ட கல்லுல நாங்க உட்கார்ரதுல என்ன கஷ்டம் என்று கேட்டால் - 'எதிர்த்துப் பேசுரானுக பாரு, அவனு கள கட்டி வையுங்கடா' என்று அடிப்பதற்கு ஓடி வருவார்கள். இதுபோன்று வாக்குவாதம் ஏற்பட்டுப் பலமுறை தகராறுகளும் நடந்துள்ளன. இதற்குப் பயந்து அப்பட்டியல் கல்லைக் கீழே கிடத்திவிடலாம் என்று அப்பா உள்ளிட்ட பெரியவர்கள் முடிவு செய்த துண்டு. அதன் பிறகு இரவு நேரத்தில்தான் நாங்கள் அப்பட்டியல் கல்லில் உட்காருவோம். பகலில் உட்காரப் பயப்படுவோம்.

கள்ளர்கள் வழிபடும் கோவில் பக்கம் அது காட்டுப் பகுதியாக இருந்தாலும், சேரி மக்கள் சுத்த பத்தமாகச் செல்ல வேண்டுமென்று ஆன்மீக நேர்மை பேசுவார்கள். ஆனால், காளியம்மன் கோவிலுக்குள் செருப்புக் காலுடன் நுழைந்து காசு வைத்து தாயம் போடுவது, சீட்டு விளையாடுவது போன்று பகல் முழுக்கச் சூதாடுவார்கள். மதுரை - மேலூர் சாலை யில் எங்கள் கிராமத்தையொட்டி அமைந்துள்ள முனிக்கோவிலுக்கு வேண்டுதல் செய்ய விரும்பும் சேரிமக்கள் மாலை சாத்தி, தேங்காய் பழம் வைத்து நேரடியாக நேர்த்திக் கடன் செய்ய முடியாது. பூசைப் பொருட்களுக்குரிய பணத்தை கள்ளர் சாதி கோவில் பூசாரியிடம்தான் கொடுக்க வேண்டும். கோவில் சுற்றுச் சுவருக்கு வெளியில் நின்றுதான் நாங்கள் கும்பிட வேண்டும். பூசாரி திருநீரு மட்டுமே கொடுப்பார்.

எங்கள் கிராமத்தில் கள்ளர், கோனார், ஆசாரி ஆகிய சாதியினர் உள்ளனர். இவர்களில் ஆண்களை அய்யா என்றும், பெண்களை ஆயா என்றும்தான் நாங்கள் அழைக்க வேண்டும். வயதின் அடிப்படை யில் ஆண்களை மூத்தவரே, நடுவுளவரே, இளைய வரே என்றும், பெண்களை பெரிய ஆயா, நடு ஆயா, சின்ன ஆயா என்றும் அழைக்க வேண்டும். இத்தகைய அழைத்தலுக்கு அவர்களின் பதில் என்னடா! ஏண்டி! என்பதாக மட்டுமே அமையும். வயதுக்கு மரியாதை என்பதெல்லாம் மேலூர் வட்டாரத்தில் ஒருவழிப் பாதைதான். தப்பித் தவறி கள்ளர்களை ஒருமையில் வா, போ என்று பேசிவிட்டால் (பேச முடியாது) அன்று மாலை பஞ்சாயத்து கூட்டப்படும். இடுப்புக்கு மேல் உடம்பில் துணியில்லாமல், முழங்காலுக்கு மேல் வேட்டியை மடித்துக்கட்டி, அந்த வேட்டி அவிழாமல் இருக்க அதன்மேல் துண்டைக் கட்டி, நெஞ்சில் மண் ஒட்டும்படி மூன்றுமுறை கும்பிட்டு விழுந்து - கள்ளர் களின் விசாரணைக்குப் பதில் சொல்ல வேண்டும். விசாரணையின்போது அக்கா ஆத்தா என்கிற வசவு கள் கிடைக்கும். சில நேரங்களில் அடி, உதை விழும். அபராதம் போட்டால் அதைக் குறைக்கும்படி கோரி முழங்கால் தேய கும்பிட்டு விழ வேண்டும்.

குடும்ப வாழ்வில் எங்கள் சேரி மனிதர்கள் மிகவும் கண்ணியமானவர்கள். கொலை, கொள்ளை, திருட்டு, விபச்சாரம், சாராயம் காய்ச்சுதல் போன்ற



**" காலம் முழுவதும் சேரி மக்கள் கைகட்டி, விழுந்து வணங்கி மன்றாடுபவர் களாகவும், கள்ளர்கள் தீர்ப்புச் சொல்பவர் களாகவும் இருப்பதற் கான சாதி மேலாதிக் கத்தை - ரத்தம் சிந்தி யாவது காப்பதற்கான ஆவணமில்லாத அமைப்புதான் பஞ்சாயத்தாகும். "**

குற்றச் செயல்களைச் செய்ததாக எமது சேரி மக்கள் மீது மேலூர் காவல் நிலையத்தில் வழக்குகள் பதி வானதாகக் கூற முடியாது. காவல் நிலையத்திற்குச் செல்வதை எமது மக்கள் கேவலமாகக் கருதுவார்கள். இப்படிப்பட்டவர்கள், கும்பிட்டு விழும் தண்டனை யிலிருந்து எவரும் தப்பவில்லை. என் அப்பா பல முறை கும்பிட்டு விழுந்திருக்கிறார். இத்தகைய எனது கிராம வாழ்வின் இருண்ட காவியத்தை நான் விரிவாக எழுத இருக்கிறேன்.

**நீங்கள் எப்படி மார்க்சியத்தின்பால் ஈர்க்கப் பட்டீர்கள்?**

மதுரையில் மாமா வீட்டில் தங்கிப் படித்தபோது தான் சிட்டாலாட்சி நகரில் ஒரு குடிசையில் தங்கி யிருந்த தோழர் கே. ராஜ்குமார் (மறைவு) எனக்கு மார்க்சியத்தை அறிமுகப்படுத்தினார். அவரது வழி காட்டுதலின்படியே மார்க்சிய - லெனினிய நூல் களைப் படிக்கத் தொடங்கினேன். மதுரை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தில் உறுப்பினரானேன். அப்போது சிவப்புப் புத்தகங்களை வெளிப்படை யாகக் கையில் வைத்துக் கொண்டு செல்ல முடியாது. மார்க்சிய - லெனினியக் கருத்துகளை மக்கள் மத்தியில் விதைப்பதற்குப் படித்த இளைஞர்களைக் கொண்ட ஒரு குழுவை ராஜ்குமார் உருவாக்கினார். அக்குழுவில் தோழர் பொதும்பு சோனை, தோழர் மதிவாணன், தோழர் கோபால கிருஷ்ணன், த.மு.எ.ச.வின் இன்றையப் பேச்சாளர் தோழர் கிருஷ்ண குமார் நான் உட்படப் பலர் இருந்தோம். மதுரை நகரின் மிகவும் பின்தங்கிய சில குடிசைப் பகுதிகளில் இளைஞர் களின் ஆதரவோடு தோழர் ராஜ்குமார் பட்டி மன்றங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்த ஏற்பாடு செய்து எங்கள் குழுவை களமிறக்கினார். எங்கள் குழுவில் உள்ள அனைவரும் மார்க்சியத்தில் ஈடுபாடு கொண்டிருந்தபோதிலும், தோழர் சோனையும் நானும் நக்சல்பாரி இயக்கத்தின்பால் ஈர்க்கப்பட்டோம்.



படிப்பகம்

www.padippakam.com




ஒலிநாடா வெளியீட்டின்போது, தொல்காப்பியனுடன் சப்பையா

> **“மக்களை நேசிப்பதும், அவர்களின் பாடுகளுக்கான மூலங்களைக் கண்டறிவதும், அத்தடைகளை உடைப்பதற்கான கலை வடிவங்களைப் படைப்பதும், அதன் வழியே எதிர்கொள்ளும் விளைவுகளை - மன உறுதியுடன் எதிர்ப்பதற்கானப் புரட்சிகரத் தத்துவத்தைப் பின் புலமாகக் கொண்டிருப்பவனையே கலைஞன் என்பதாக மக்கள் அங்கீகரிக்கிறார்கள்.”**

இச்செய்திகள் விரிவாக எழுதப்பட வேண்டியவையாகும். கிராம வாழ்வில் நான் எதிர்கொண்ட பாடுகளை உணர்ந்து, அவைகளை எதிர்கொள்வதற்கான விழிப்பைப் பெறும் தளமாக மார்க்சியம் எனக்கு அமைந்தது. சேரிமனிதர்களில் மார்க்சியத்தை உள்ளீடாகக் கொண்டு இயங்கும் தோழர்கள், இந்துத்துவம் உள்ளிட்ட வரலாற்றுப் பகைமையை எதிர்கொள்ளும் தனித்த போக்கை, இன்று தமிழகம் கண்டு வியக்கிறது.

அய்யா பெரியார், மேலூர் பேருந்து நிலையம் அருகில் ஒருமுறை பொதுக் கூட்டத்தில் பேசியதைப் பார்த்ததாக எனக்கு நினைவிருக்கிறது. டவுசர் போட்ட வயசில் பார்த்த அந்த நிகழ்வை, என்னால் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை. எம்.ஜி.ஆர். படங்களை நான் விரும்பிப் பார்ப்பேன். அதன் தாக்கம் என்னை தி.மு.க. வின் அனுதாபியாக மாற்றியது. பெரியாரின் கடவுள் மறுப்புக் கொள்கையை வைத்தே தி.மு.க.வை அப்போது சாமி இல்லை என்று சொல்கிற கூட்டம் என்பதாக மக்கள் பேசுவார்கள். தி.மு.க. அனுதாபியாக இருந்த என்னைப் பார்த்ததும், 'சாமி இல்லை என்று சொல்கிறவன் வருகிறான்' என்று கிண்டலடிப்பார்கள். அப்பாவின் காலத்தில் காங்கிரஸ் - தி.மு.க. என்பதாகத் தமிழகம் பிரிந்து கிடந்தது. கிராமங்களை கள்ளர்கள் ஆளும் சூழலில் மேலூர் தனித் தொகுதியாகவும், கக்கன் அமைச்சராகவும் இருந்த நிலையில், கள்ளர்கள் காங்கிரஸ் 'கட்சி மீது மிகுந்த வெறுப்புக் கொண்டிருந்தார்கள். மேலும், சேரி மக்களுக்கும் தேவர்களுக்குமிடையே முதுகளத்தூரில் நடைபெற்ற சாதிப் போரையொட்டி, முத்துராமலிங்கத் (தேவரை) காமராசர் தலைமையிலான காங்கிரஸ் அரசு கைது செய்து சிறையிலடைத்தது. முத்துராமலிங்கம் மீது சாதி அபிமானம் கொண்ட காங்கிரஸ் கட்சி கள்ளர்கள் எல்லாம் காங்கிரசிலிருந்து விலகி, அக்கட்சியை ஒழிப்பதற்கானப் பிரச்சாரத்தில் இறங்கினார்கள். இத்தகைய எதிர்ப்பு, கள்ளர்களில் பெரும்பகுதியினரை தி.மு.க.வை நோக்கி நகர்வதற்கான நிர்பந்தத்தை ஏற்படுத்தியது. தி.மு.க. வழியே அய்யாவை அறிந்த நான், தி.மு.க.வில் ஒருபோதும் உறுப்பினராயிருந்ததில்லை. ஏனெனில், தி.மு.க. அப்போது மைனர்களையும், சாதி வெறியர்களையும் தலைவர்களாகக் கொண்டு வளரும் கட்சியாக இருந்தது.

அய்யா பெரியாரின் நூல்களை என்னிடம் கொடுத்து வாசிக்கத் தூண்டியவர், மறைந்த தோழர் மலைச்சாமி என்பது குறிப்பிடத்தக்கதாகும். என்னிலும் வயது குறைவுடைய அவர் 'தலித் பேந்தர்ஸ் ஆப் இந்தியா' எனும் அமைப்பைத் தமிழகத்தில் நிறுவியவர். மலைச்சாமி மிகச் சிறந்த பெரியார் கொள்கைப் பற்றாளர். மதுரை அவனியாபுரம் பெரியார் நகரை இருப்பிடமாகக் கொண்ட மலைச்சாமி, தமிழகத்தில் திராவிடர் கழகத்தை வேரூன்றச் செய்தவர்களில் ஒருவரும், தமிழக எண்ணெய் பலகாரக் கடைகளின் உரிமையாளரும், சேரி மக்களின் விடுதலையில் மிகுந்த அர்ப்பணிப்புடையவருமான அய்யா தேவசகாயம் அவர்களை அழைத்து, திராவிடர் கழகக் கூட்டம் நடத்தினார். அக்கூட்டத்தில் நானும் ஒரு பேச்சாளராகப் பங்கேற்றேன். நான் பங்கேற்ற முதல் பகுத்தறிவாளர் கூட்டம் அதுதான். மதுரை மாவட்ட திராவிடர் கழகத்தின் இன்றைய தலைவர் தோழர் மகேந்திரன், உயர்நிலைப் பள்ளியில் என் வகுப்புத் தோழர். பெரியார் குறித்து அவர் எனக்கு நிறையச் சொல்லுவார்.


மேதை அம்பேத்கரை அவரது நூற்றாண்டு தினத்திற்குப் பிறகுதான் அறிய நேர்ந்தது. மதுரை தியாகராசர் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயத்தில், காந்தி மியூசியம் நூலகத்தில் தனஞ்செய்கீர் எழுதிய அம்பேத்கர் வாழ்க்கை குறித்த நூலைப் பார்த்திருக்கிறேன். போதிய ஆங்கில அறிவு இல்லாத நிலையிலும், அம்பேத்கரைக் குறித்து அறியாத நிலையிலும் அந்நூலை நான் படித்ததில்லை. எங்கள் சேரிக்கு அம்பேத்கரை அறிமுகப் படுத்திய பெருமை, விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பையே சேரும். அதேசமயம், தி.மு.க., அ.தி.மு.க. நுகத்தடிகளில் நீண்ட காலம் பிணைக்கப்பட்டிருந்த எமது மக்களை - மீண்டும் மாட்டுவதற்கான திசையை நோக்கிச் செல்வது, அச்சத்தை அளிப்பதாக உள்ளது. மேற்கண்ட வரலாற்றை நான் பதிவு செய்யக் காரணம், எமது விடுதலைக் குரல் கலைக் குழுவின் இசைப் பயணத்தில் பங்கேற்கும் கலைஞர்கள் அனைவரும் - பாட்டாளிகளாகவும், நாங்கள் விதைக்கும் பாடல்களும், செய்திகளும் சோசலிசத்திற்கான வர்க்க ஓர்மை, இந்துத்துவத்தை அழிப்பதற்கான அணிசேர்க்கை, பவுத்தத்தை முன் மொழிதல் போன்ற தத்துவப் பின்னணியோடு இயங்குவதற்கு அடித்தளமாக உள்ளது என்பதைப் பகிர்ந்து கொள்வதற்காகத்தான். இத்தகைய பின்புலத்தோடு கலைத் தளத்தில் மக்களிடமிருந்து நான் கற்ற அறிவையும் பெற்ற அனுபவத்தையும் பகிர்ந்து கொள்வது பொருத்தமாக அமையும் என்று நம்புகிறேன்.

**தாங்கள் ஒரு இசைக் கலைஞராக உருவானது எப்படி?**

மனிதன் அழகியலின் பாதியாக இருக்கிறான். வாழ்வின் பன்முக நிலைகளில் மனிதனின் தொடர்ச்சியான இயங்குதலுக்கு கலை இலக்கியம் உந்து சக்தியாக அமை



படிப்பகம்




www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

கிறது. குரலிசை, விரலிசை, ஆட்டம், நாடகம், கூத்து ஆகிய கலை வடிவங்கள் தமக்குரிய வடிவம், உத்தி, உள்ளடக்கம் ஆகியவற்றால் மனித குலத்தை மகிழ்விக்கிறது. உழைப்பை அடிப்படையாகக் கொண்ட மண்சார், மரபுசார் கலைகளைப் படிப்பது, பரப்புவது, தரவுகளைச் சேகரிப்பது, நிகழ்த்துவது, பாதுகாப்பது ஆகிய வேலைகள் மட்டுமே - ஒருவனை கலைஞன் என்று அங்கீகரிப்பதற்கானத் தகுதியாகிவிட்டது. இது, படிப்பாளிகளின் பிழைப்புத் தொடர்பான பணிகளில் ஒரு பகுதி மட்டுமேயாகும். மேலும், தனது முன்னோர்கள் கலைஞர்களாக இருந்தார்கள் என்கிற 'பரம்பரை பம்மாத்து' கலைத் தளத்தில் கூச்சமற்ற உரையாடலாக வெளிப்படுகிறது. பிரபுத்துவ வழிப்பட்ட இச்சிந்தனை, கலைத் தளத்தில் அதிகாரம் செலுத்துவதற்கான தந்திரமாகக் கையாளப்படுகிறது. மக்களை நேசிப்பதும், அவர்களின் பாடுகளுக்கான மூலங்களைக் கண்டறிவதும், அத்தடைகளை உடைப்பதற்கான கலை வடிவங்களைப் படைப்பதும், அதன் வழியே எதிர் கொள்ளும் விளைவுகளை மன உறுதியுடன் எதிர்ப்பதற்கானப் புரட்சிகரத் தத்துவத்தைப் பின்புலமாகக் கொண்டிருப்பவனையே கலைஞன் என்பதாக மக்கள் அங்கீகரிக்கிறார்கள்.

இத்தகைய அனுபவங்களோடு எப்படி ஒரு கலைஞனாகப் பரிணமிக்க நேர்ந்தது என்பதை இங்கே தான் பதிவு செய்ய விரும்புகிறேன். கலைத் தளத்தில் பாடல் எழுதுவது, பண்ணமைப்பது, பாடுவது, நாடகம் மற்றும் நாடக விமர்சனம் எழுதுவது போன்ற தளங்களில் நான் இயங்குவதற்கு, கடவுளோ அல்லது அது தொடர்பான மத நிறுவனங்களோ காரணமல்ல என்பதைச் சொல்வதில் எனக்கு எவ்விதத் தயக்கமுமில்லை. என்னிலிருந்து வெளிப்படும் கலை முயற்சிகள் அனைத்திற்கும் வேராய், விழுதாய் இருப்பவர்கள் - எழுத்தறிவற்ற, பிறர் உழைப்பைச் சுரண்டாத தங்கள் எண்சாண் உடம்பை மட்டுமே நம்பிப் பிழைக்கிற தினக் கூலிகளான என் தாய் தந்தை போன்ற ஏழைகளான என் சக மனிதர்கள்தான். மண்ணின் கலைகளுக்கு இவர்கள்தான் அடித்தளம். வளர்ச்சி விதிகளைப் போலவே பாடற்தளத்தில் உழைக்கும் மக்களிடமிருந்து தொடர்ச்சியாக நான் கற்றுக் கொண்டவைகளை மூன்று நிலைகளில் வகைப்படுத்துகிறேன் : 1. பாடல் கேட்ட வரலாறு 2. பாடல் பாடத் தொடங்கிய வரலாறு 3. பாடல் எழுதத் தொடங்கிய வரலாறு என்பதாகும். வந்த வழிதான் செல்லும் வழிக்கானத் தொடர்ச்சியாகும்.

**தந்தை பாடிய தாலாட்டுப் பாடல்**

என் தந்தை ஓர் விவசாயத் தொழிலாளி. உழைப்பின் களைப்பை மறக்க இரவு நேரங்களில் நல்லதங்காள், அரிச்சந்திரன், கட்டபொம்மன், ஊமத்துரை, மதுரை வீரன் ஆகிய வரலாற்றுப் பாடல்களை எங்கள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து சிம்னி விளக்கின் ஒளியில் படித்து சத்தம் போட்டு இசையுடன் பாடுவார். பள்ளிப் பருவத்தில் இத்தகைய பாடல்களை, என் தந்தையின் அருகில் அமர்ந்து பாடக் கேட்டிருக்கிறேன். ஆனால், நான் கேட்ட முதல் பாடல் அதுவல்ல. எனது சின்ன அக்காள் பூச்சியம்மாளின் மூத்த மகன் கணேசன் மழலையாய் இருந்தபோது, என் தந்தை தாலாட்டுப் பாடியதைக் கேட்டிருக்கிறேன். பேரனுக்குத் தாலாட்டுப் பாடியவர், தன் சொந்த மகனுக்குத் தாலாட்டுப் பாடாமல் இருந்திருக்க நியாயமில்லை. தந்தை வழிச் சமூக அமைப்பில் ஆண் குழந்தைக்குரிய முக்கியத்துவமும் குறிப்பாக ஒரே மகன் என்கிற நிலையில் காணப்படும் பெற்றோர்களின் மகிழ்ச்சியும் பல்வேறு பரிமாணங்களாக வெளிப்படும். உறக்கத்திற்கான ஓசையாகவும், மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் செய்தியாகவும் உழைப்பாளிகளுக்கேயுரிய இயல்பான உரத்த சத்தத்துடன் என்னைத் தூங்க வைக்கப் பாடிய தாலாட்டுப் பாடல் தான் - உள்வாங்க இயலாத மழலைப் பருவத்தில் என் உடம்பைத் தாக்கிய, என் புலன்களைப் பரவசப்படுத்திய முதல் பாடல் என்று நம்புகிறேன்.



"அய்யா பெரியாரின் நூல்களை என்னிடம் கொடுத்து வாசிக்கத் தூண்டியவர் மறைந்த தோழர் மலைச்சாமி என்பது குறிப்பிடத்தக்கதாகும். என்னிலும் வயது குறைவுடைய அவர், 'தலித் பேந்தர்ஸ் ஆப் இந்தியா' எனும் அமைப்பைத் தமிழகத்தில் நிறுவியவர். மலைச்சாமி, மிகச் சிறந்த பெரியார் கொள்கைப் பற்றாளர்."

செல்வந்தர் குடும்பங்களில் குழந்தைகள் மகிழ்வுடன் தூங்குவதற்குத் தொட்டிலின் உச்சியில் பொம்மைகள், கிலுகிலுப்பான்களைக் கட்டித் தொங்கவிடுவார்கள். கண்கள் அழகிய பொருட்களைப் பார்க்கவும், காதுகள் தாலாட்டு இசையை ரசிப்பதற்குமான சூழலில், குழந்தைகள் சீக்கிரம் தூங்குவதற்கு இத்தகைய ஏற்பாடுகள் வசதியாக இருக்கும். ஆனால், சேரிக் குழந்தைகளோ கூரை வீட்டின் முகடுகளில் அழுக்குப் படிந்துள்ள ஓட்டடையைப் பார்த்துக் கொண்டே தூங்கும் அவலம். தொட்டில் சேலையும் அடிக்கடி மாற்றப்படுவதில்லை. மூத்திரத் துணிகளில் படியும் கிருமிகளால் குழந்தைகள் நெளிந்து தூங்கச் சிரமப்படும் நிலை. இதுபோன்ற சூழல், தாலாட்டுப் பாடலுக்கான நோக்கத்தையே அர்த்தமற்றதாக்கி விடுகிறது. சிந்திக்கத் தொடங்கும் முன்பே சேரிக் குழந்தைகள், இதுபோன்ற பலவிதமான பாடுகளை எதிர்கொள்வது இன்றும் தொடர்கிறது.

இத்தகைய அவலச் சூழலில் வளரும் பல்லாயிரம் சேரிக் குழந்தைகளின் தாலாட்டுப் பாடல் கேட்டு வளர்ந்த குழந்தைகள், எண்ணிக்கையில் மிகமிகக் குறைவென்றே கருதலாம். வாய்ப்புப் பெற்ற குழந்தைகளில் நானும் ஒருவனாக இருந்தமைக்கு என் தந்தை மிகுந்த நன்றிக்குரியவராகிறார். குழந்தைக்குத் தாலாட்டுப் பாடுவது, பெற்ற தாயிடமிருந்து வெளிப்படும் வாய்மொழி இலக்கியம். மூடை நெல்லை முக்காமல் தூக்கும் உடல் வலிமை, நாலு குப்பம் நாற்று முடிச்சுகளை தலையில் சுமந்து முழங்கால் சேற்றுக்குள் பாய்ச்சல் வேகத்தில் நடக்கும் உரமேறிய கால்கள், நாற்று முடிச்சுகளை, நாறபதடிக்கப்பால் விழும்படி வீச்சோடு எறியும் வாகான கைகள் - என் அம்மாவுக்கு இயற்கை அளித்த கொடையாகும். இவ்வளவு வலிமையைத் தந்த இயற்கை, அவரை மொழியற்ற பெண்ணாக்கி இதன் வழியே தாலாட்டுப் பாடுவதற்கான திறனையும், அழகியலையும் தர மறுத்துவிட்டது.

*நேர்காணல் : அன்பு செல்வம்*

*பேட்டி அடுத்த இதழிலும்*



படிப்பகம்

www.padippakam.com


*With Best Compliments from*

# i7 SOFTWARE ASIA PVT. LTD.

20, Moores Road, Park Circle
2nd Floor, Chennai - 600 006
Tel : +91 44 2822 3862 ■ www.i7asia.co.in

படிப்பகம்

www.padippakam.com






படிப்பகம்

www.padippakam.com

## விடுதலை இயக்க வேர்களும் விழுதுகளும் - 32

■ ஏபி. வள்ளிநாயகம்

உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் மனித இனக் குழுக்களுக்கெல்லாம் மூத்த பேரினமாகவும், வியப்பிற்குரிய வரலாற்றையும், போற்றுதலுக்குரிய பண்பாட்டையும் கொண்ட அறிவுமிகு - ஆக்கமிகு மாந்தர்களாகவும் வாழ்ந்த குடி சாக்கியப் பெருங்குடியாகும். இச்சாக்கிய இனக்குழு, கபிலரின் 'சாங்கியம்' என்ற தத்துவ தரிசனத்தின் மூலமே சாக்கியர் எனப் பெயர் பெற்றது. இவர்களுடைய தத்துவ மூலாம்பரம், சாங்கியத்தை அளித்த கபிலரிடமிருந்து தொடங்குகிறது.

சாக்கியர்களின் தத்துவமே சாக்கியமாகும். இடைநிலை இலக்கணப் போலியின் காரணமாகவே 'சாக்கியம்' என்பது 'சாங்கியமாக' மருவியது. சமூக நிகழ்வுகளுக்கான வரைமுறையே சாக்கியமாகும். எது விதைக்கப்படுகிறதோ, சூழலின் தன்மையோடு அது வளர்த்தெடுக்கப்படும் என்பதே அதன் அடிப்படைத் தத்துவம். கடவுளோ அல்லது மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட எதனாலும் விளைவின் போக்கை வடிவமைக்க முடியாது என்பதில் சாக்கியர்கள் தீர்க்கமாக இருந்தார்கள். சாக்கியர்களால் இத்துணைக் கண்டம், தத்துவங்களின் தளகர்த்தர்களைக் கொண்ட குழுமங்களாகவே காட்சியளித்தது.

சாக்கியர்களின் பொருள் முதல்வாதக் கண்ணோட்டம் பலமடைந்த காலத்தில்தான், இத்துணைக் கண்டத்தில் மருத்துவம், கணிதம், வானவியல் மற்றும் பல்வேறு துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டது. சாக்கியர்கள் மானுடம், இயற்கை குறித்து சுயவிமர்சனம் உள்ளிட்ட விமர்சனம் செய்யும் உரிமையை, தனிமனித வாழ்வியல் மற்றும் சமூக இயக்கத்தில் கறாராக மேற்கொண்டார்கள். ஒரு திடமான மனிதத் திரளான இவர்கள், ஒட்டுமொத்த மனிதர்களின் சமத்துவ லட்சியத்திற்கு முழு விசுவாசமாக இருந்தவர்கள். இவர்கள் உயிர்ப் பரிணாம வளர்ச்சியில் உச்சமான மானுட வம்சத்தை கூட்டுப் பிராணிகள் (Social Animal) என்று பிரகடனப்படுத்தி, அதில் எவ்வித அய்யத்திற்கும் இடமில்லாத இயற்கைப் பண்பைக் கொண்டிருந்தார்கள். இவர்களுடைய இத்தகைய மாண்புகள்தான் மானுட ஒருமைப்பாட்டிற்கு என்றும் எதிரிகளான பிறவி முதலாளிகளான பார்ப்பனர்களிடமிருந்து, அவர்களின் அடிவருடிகளான பார்ப்பனியர்களிடமிருந்து எழுந்த கடுமையான சமூக ஒடுக்குமுறையான - சமூக ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிடும் வலிமையை அளித்தன.

சாக்கியர்கள், வாழ்வுரிமை எனும்போது அது மரம், மலை, மண், பிரபஞ்சம் என்ற சகல உயிரினங்களுக்குமானது என்பதை மனங்கொண்டே தத்தம் செயல்பாடுகளைக் கட்டமைத்துக் கொண்டார்கள். இயற்கையுடன் மானுடத்தினுடன் ஒத்திசைவு என்பதே, சாக்கியர்களுக்கு ஒரு தொடர் நிகழ்வின் விளைவாகிக் கொண்டிருந்தது. சாக்கியர்கள் தங்கள் தங்கள் சுவாசத்தின் ஈரத்தில், சக மனிதர்களின் இருப்புகளையும் தாங்கிக் கொண்டிருந்தார்கள். சாக்கியர்கள் தங்கள் மரபாலும் வரலாற்றாலும் உட்படுத்திக் கொண்ட இடங்களைப் புராதன பொதுவுரிமை - பொதுவுடைமை அமைப்பாக நிறுவிக் கொண்டார்கள்.



இந்தப் பிரபஞ்சத்தைப் புரிந்து கொள்ள முடியாது; பிரபஞ்சம் ஒரு மாயை. மனித வாழ்வில் அனுபவிக்கும் துன்பங்கள் அனைத்தும் முற்பிறவியின் வினை. கடவுளை நம்பு; மோட்சம் அடைய எடுக்கும் நடவடிக்கைகளில் ஒன்றுதான் ஞானமார்க்கம்; கர்ம மார்க்கம் வீணானது என்றெல்லாம் பித்தலாட்டக் கருத்து முதல்வாதத்திற்கு எதிராக உலகத்திலேயே முதன் முதல் தத்துவப் போர் தொடுத்தவர்கள் சாக்கியர்கள். உலக வரலாற்றில் நடைபெற்ற/நடைபெறும் எல்லா முன்னேற்றங்களுக்கும் அறிவியல் வளர்ச்சிகளுக்கும் ஆதாரமாக இருந்து வருவது, பொருள் முதல்வாதம்தான். சமுதாய வளர்ச்சியில் கருத்து முதல்வாதத்தை குப்பைத் தொட்டியில் தூக்கி எறிந்த முழு மனிதர்கள் வரலாற்றில் சாக்கியர்கள். இயற்கை முழுவதும் மிகச் சிறு பொருளிலிருந்து மிகப் பெரிய பொருள் வரையிலும் மணலின் சிறு துகள்களிலிருந்து சூரியன் வரையும் - உயிரின் மூலக் க்ருவிலிருந்து மனிதர் வரையிலும் சமுதாய வளர்ச்சியில் முக்கியத்துவம் எவ்வளவு இருக்கிறதோ, அதே அளவு தத்துவ ஞான உலகில் சாக்கியர்களின் பொருள் முதல்வாதத் தத்துவத்திற்கும் உண்டு.

இயற்கையை மனிதர் மேலும் மேலும் அறியும்போது, மனிதருக்கும் - பொருளுக்கும், மனிதருக்கும் - இயற்கைக்கும், ஆத்மாவுக்கும் - உடலுக்கும் இடையே முரண்பாடு என்ற இயற்கைக்குப் புறம்பான மடமையான கருத்து மறையும் என்று ஏங்கெல்ஸ் குறிப்பிடுவதற்கு

> “ தத்துவம் என்பது வெறும் ஏட்டுக் கல்வி அல்ல. அது நடைமுறை வீரியத்தைக் கொண்டிருக்க வேண்டும். தத்துவம் தன்னுடைய வேர் ஆதாரத்தை மனிதர்களின் வாழ்க்கைச் சிக்கல்களிலிருந்து தொடங்க வேண்டும். மானுடத் தேவைகளை மய்யமாகக் கொண்டுதான் தத்துவம் உருவாக்கப்பட வேண்டும். உருவாகும் தத்துவங்கள், மீண்டும் மானுடத் தேவைகளை மறு ஆய்வு செய்வதாகவும், சமூகத்தைப் புனரமைப்பதற்கான ஓர் ஆயுதமாகவும் இருக்க வேண்டும். தத்துவங்கள் என்பது காதுகளில் கேட்டுக் கொள்வதற்கான ஒரு செய்தி மட்டுமல்ல. மாறாக, தத்துவங்கள் செவிமடுத்துச் செயல்படுத்த வேண்டும் என்ற உணர்வை வளர்க்கக் கூடிய வகையில் உயிரோட்டம் உள்ளதாக இருக்க வேண்டும் என்றார் புரட்சியாளர். சாக்கியம் அவ்வகையில் பொருத்தப்பாட்டுடன் விளங்கியது. ”



படிப்பகம்

www.padippakam.com

**மானுடத்தின் நேர்மறையும் - எதிர்மறையும்**

| | சாக்கியம் (நேர்மறை) | ஆரியம் (எதிர்மறை) |
|---|---|---|
| 1. | எல்லாமே மாறுதலுக்குட்பட்டது. | எல்லாமே மாயை |
| 2. | உடல் - நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கு மூலப் பொருட்களால் ஆனது. | உடல் - நிலம், நீர், காற்று, நெருப்பு, மேல் உலகம் ஆகிய அய்ந்து மூலப் பொருட்களால் ஆனது. |
| 3. | கர்மம் உண்டு. ஆத்மா இல்லை. வாழும் மனிதர்கள், தான் வாழும் காலத்தில், தான் செய்யும் விளைவிக்கும், தன் அக - புறச் சூழலில் நிகழும் வினைக்கும் உட்படுத்தப் படுகிறார். இதுவே கர்மம் எனப்படும். | கர்மம் உண்டு. ஆத்மா உண்டு. ஆத்மா வழியே கர்மம் தொடர்கிறது. |
| 4. | அகிம்சை என்பது ஒரு கொள்கை. (கொல்லாமை என்பது ஒரு விதி) | அகிம்சை என்பது ஒரு தத்துவம். (கொல்லாமை என்பது சட்டம்) |
| 5. | நிர்வாணம் என்பது வாழும் காலத்திலேயே அடையக் கூடியது (பற்றற்றத் தன்மை). | நிர்வாணம் என்பது இறைவனடி சேரு வது மூலம் உறுதி செய்யப்படுகிறது. |
| 6. | மரணத்திற்கு முந்தைய வாழ்வே கணக்கிடக் கூடியது. | மரணத்திற்குப் பிந்தைய வாழ்வே கணக்கிடக் கூடியது. |
| 7. | மக்களைத் தேடி துறவிகள் செல்ல வேண்டும். துறவி என்பவர் சிறந்த மனிதருக்கு எடுத்துக்காட்டாக வாழ்பவர். துறவியின் செயல்பாடுகள் வெளிப்படை யானவை. துறவி சிறந்த தனிமனிதருக்காக சீலத்துடன் வாழ வேண்டும். துறவி என்பவர் ஒழுக்கமானவர். | துறவிகள் கடவுளின் பிரதிநிதிகள். மக்கள் அவர்களை நாடிச் செல்ல வேண்டும். மக்கள் துறவியுடன் பய-பக்தியுடன் பழக வேண்டும். துறவி என்பவர் புனிதமானவர். |
| 8. | பெண் ஆணின் சரி பகுதியாகப் பார்க்கப்படுகிறார். சித்தார்த்தர் துறவறம் புறப்பட்டபோது தன் மனைவியை மறுமணம் செய்யக் கேட்டுக் கொண்டார். | பெண் ஆணின் உடைமையாக கருதப்படுகிறார். ஆண் தன்னுடைய உடைமையான பெண்ணை விற்கவும் கொலை செய்யவும் உரிமை பெறுகிறான் (அரிச்சந்திரன், ராமன் செயல்பாடுகள்). |
| 9. | பெண்கள் துறவிகளாக முடியும். பிக்குணிக் கெனத் தனிச் சங்கம் உண்டு. | பெண்கள் சிறந்த தொண்டர்களாக, அடிமைகளாக முடியுமே தவிர, ஒரு போதும் துறவிகளாக முடியாது. |
| 10. | கடவுள் இல்லை. அவதாரம் இல்லை. மனிதர்களுக்கு மறுபிறவி இல்லை. | கடவுள் உண்டு. அவதாரங்கள் உண்டு. மனிதர்களுக்கு மறுபிறவி உண்டு. |
| 11. | உடலில் வெப்பமே உயிர் எனக் கொள்ளப் படுகிறது. | உயிரைப் பற்றிய வரையறை இல்லை. உயிரைக் கொடுப்பதும், எடுப்பதும் கடவுள். உயிர் தனித்த பொருள். கடவுளின் இச்சைக்குட்பட்டது. உலகம் கடவுளுக்குக் கட்டுப்பட்டது. கடவுள் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டது. மந்திரம் பார்ப்பனர்களுக்குக் கட்டுப்பட்டது. |
| 12. | சமூக வாழ்க்கை, கூட்டு வாழ்க்கை வலியுறுத்தப்படுகிறது. | இறைவன் விட்ட வழி. ஒவ்வொரு தனி மனிதரும் இறைவனிடம் தொடர்பு கொண்டவர். |
| 13. | மைத்ரி (அறிவு சார்ந்த கருணை) முதன்மைப்படுத்தப்படுகிறது. | கருணை (பரிதாபம் சார்ந்த கருணை) முதன்மைப்படுத்தப்படுகிறது. |
| 14. | மானுட ஓர்மையே முதன்மையானது. | வர்ணாசிரமமே/ஆணாதிக்கமே/ வர்க்க வேறுபாடே முதன்மையானது. |
| 15. | பொதுவுரிமை - பொதுவுடைமையே நோக்கமானது. | தனி உரிமை - தனி உடைமையே நோக்கமானது. |
| 16. | சுதேசிகளின் வழிமுறையைக் கொண்டது. | விதேசிகளின் வழிமுறையைக் கொண்டது. |

முன்பே ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எடுத்துரைத்தவர்கள் சாக்கியர் கள். சாக்கியர்கள், உலகத்தைத் தவிர வேறு எதையும் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தப் பிரபஞ்சத்திற்கப்பால் இருக்கும் ஒரு தெய்வீக சக்தி, இங்குள்ள எல்லா அசைவுகளையும் நிர்ணயிக்கின்றது என்ற கருத்தை அடியோடு மறுத்தார்கள்.

மனிதர்களிலேயே சிறந்தவர்கள் தன்னிலிருந்து தொடங்கிச் சமூகத்திற்காக வாழ்பவர்கள்தான். இவர்கள்தான் தங்கள் மனித இருப்பில் தங்கள் தெளிவை நின்று நிதானித்து, சலித்துப் புடைத்து தேர்ந்த வர்கள். மனிதர்கள் என்பவர்கள் தனித் தனியானவர்கள்; ஆனால் சமமானவர்கள் என்பதை வரையறை செய்தவர்கள். காலத்தை மீறி இவர்களே நிலைப் பெற முடியும். தங்களது மெய்யுணர்வைக் கொட்டி வைக்க மானுடப் பரப்பின் மீது சாக்கியர்கள் கொண்ட காதலே, அவர்களுக் கிருக்கும் மெய்யான ஆளுமையாகும்.

இவர்கள் தன்னையும் காதலித்து சக மனிதர்களையும் காதலிப்பவர்கள். ஒரு தலைக் காதல் இல்லாத இந்த உண்மை மனிதர்களே சாக்கியர்கள். மனிதர்களாய் வாழ நேர்ந்ததில் தானும் வாழ்ந்து சக மனிதர்களையும் வாழ வைக்க வேண்டு மென்ற ஆசையைத் தவிர, வேறெந்த ஆசை யும் இவர்களுக்கில்லை. வாழும் மானுடத் தின் - வளரும் மானுடத்தின் தவிர்க்க முடி யாத செயலாகக் கூட்டுறவைப் பேணியவர் கள். இவர்களுக்கான வாழ்வு, தங்களுக் குள் மட்டுமில்லை; இனத்திலுமிருந்தது.

சாக்கியர்கள் உன்னதமான தத்துவச் சிந்தனைகளை வளர்க்கும் கூரிய அறிவு பெற்றவர்கள். அன்புள்ளமும், நட்புணர்வும், மனிதநேயமும் கொண்டவர்கள். மானுடத் தில் சாதனைகளுக்கு மேல் சாதனைகள் நிகழ்த்த - எட்டிய சிகரங்களை விட்டு விட்டு மேலும் உயர்ந்த சிகரத்தைத் தொட்டுப் பிடிக்க வேண்டும் என்பதே வரலாறு முழு வதும் இவர்களின் இதய தாகமாகும். மானுடத்தின் அழகுக்காகவும், உண்மைக் காகவும், நீதிக்காகவும் தங்களைத் தக வமைத்துக் கொள்ளுதல், மனித இயல் பான தத்துவத் தேட்டம், பாலி - தமிழ் இலக்கியத்தின் தரவுகள் ஆதல், உலகின் மானுடத் தரத்திற்குத் தங்களை நிறுவிக் கொள்ளுதல் ஆகியனவே சாக்கிய இனக் குழு மாண்பாகும்.

ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. இதுதான் இயக்கவியலாகும்.



படிப்பகம்

www.padippakam.com


# JAY M JAY TRAVEL SERVICES

**(The Complete Travel People)**

**SERVICE OFFERED**

- Interenational Air Tickets
- Domestic Air Tickets
- Passport Assistance
- Visa Assistance
- Emigration Services
- Hotel Reservation
- Package Tours
- Certificate Attestaion

**OUR SPECIALITY**

- Instant Computerised Reservations
- Free Door Delivery within City Limits
- Professional & Personalised Service
- Inbound & Outbound Tours
- Pilgrim Tours
- Tours to Suit Your Budget

**PACKAGE TOURS**

- Holy Land Tours to Israel & Rome
- Singapore, Malaysia, Thailand & Hongkong
- Whole of Europe & USA

**CONTACT**

28258770
52143112
28281573
28228770
28288770
52143110
52143109
28279547

**ALL MAJOR CREDIT CARDS ACCEPTED**

**CHEAPEST FARES TO USA EUROPE & AUSTRLIA**

**OTHER TELEPHONES NUMBERS**

28281573, 28228769, 28279547
Fax : 91-44-28360671
Cell : 98410-71399, 98410-71398

No.4, Gee Gee Minar, 23, College Road
Opp. Standard Chartered Bank
Nungambakkam, Chennai - 600 006
E-Mail : jaymjay@sify.com
Website : http://www.jaymjaytravelservices.com


படிப்பகம்

www.padippakam.com

> இந்தப் பிரபஞ்சத்தில் இரண்டே இரண்டு படைப்பாளிகள். ஒன்று, இந்தப் பிரபஞ்சத்தையே படைத்தளிக்கிற இயற்கை; மற்றொன்று இயற்கையின் படைப்புக்குள்ளேயே படைப்பாளி ஆகிக் கொள்கிற மானுடம். மானுடத்தில் முதன்மையானவர்கள் சாக்கியர்கள். சாக்கியர்கள் மனித மேன்மையின் சிகரத்தையே மகுடமாய் அணிகிறவர்கள். அந்த மகத்தான வளர்ச்சி, சாக்கியர்களுக்கு மட்டுமே எட்டக்கூடிய மானுடக் கிளர்ச்சியாக இருந்தது. மானுடம் தன்னை அடையாளம் கண்டு கொண்டதோடு, தன்னுடைய வரலாற்றையும் சாக்கியர்களின் தேடலாக ஆக்கிக் கொண்டது. சாக்கியர்களின் கால ஓட்டத்தை மீண்டும் மீண்டும் புதியதாய் பிறப்பித்துக் கொள்ளும் முறை பாலியாலும் - தமிழாலும் ஆனது.

சாக்கியர்கள் இவ்வியக்கவியலை 'தம்மம்' என்று அழைத்தார்கள். இந்த தம்மம், தன் வீச்சில் எவ்வளவு வலிமையாகயிருந்தாலும், அது நிலை குலையாது. சாக்கிய இனக் குழுவில் மனித இருப்பில் தன்னை நிலை நிறுத்திக் கொண்டவர்களே வீரர்களாக அங்கீகரிக்கப்படுவார்கள். மாறாக, தம்ம வீச்சிலிருந்து விலகி வாழ்வது சாக்கிய தம்மத்திற்கு ஏற்புடையது அல்ல. இது, சாக்கியத் தலைவர்கள் முழுமையாகக் கடைப்பிடிக்க வேண்டிய - தவிர்க்க இயலாத, குடிமக்கள் இயன்ற அளவிற்குப் பின்பற்ற வேண்டிய நியதியாகும்.

இயற்கையின் இயங்கியலோடு வாழ்வின் இக்கட்டுக்களை மோதியுடைத்து, தர்க்கம் விளைவிப்பதில் சாக்கியர்கள் வல்லுநர்களாக இருந்தார்கள். இச்சை, அன்பு, சோகம், காதல், பிரிவு, அக்கறை, பாசம் போன்ற உணர் விருப்புகளில் சுழன்று தன்னை தங்கள் இனத்திற்காக கரைத்துக் கொள்ளும் வழிகாட்டிகளாக இருந்தார்கள். எந்தச் சுகத்துக்கும் சொரிதலுக்கும் தம் சுயமரியாதையை, சுதந்திரத்தை விற்றுவிடாமல், எந்த உடுக்கடி மடத்திலும் ஒட்டிக் கொள்ளாமலும் மனித சிறப்புக்கும் கருத்து மோதலுக்கும் எப்போதும் பின் வாங்காதவர்களாக இருந்தார்கள். சொல்வதைக் கூர்மையாகவும் வெளியிட, சாக்கியர்கள் தவறியதே இல்லை.

சாக்கியர்கள் - பார்ப்பனிய திசைதோறும் இருள் தீற்றும் இழிந்த கருத்தாடல்களை, செயல்களைக் கேள்விக்குள்ளாக்கியவர்கள். பார்ப்பனியத்தால் உருக்குலைந்த மாந்தரின் வெடித்தெழும் குரலாய் அறைகூவல் விடுத்தவர்கள். எவர்விழிப்புடன் இருக்கிறாரோ அவரே மனிதர் ஆவார். மனிதர்கள் தங்களுக்கானத் தீர்வை நோக்கித் தாங்களே போராட வேண்டுமேயொழிய பிறரை நம்பியிருக்கக் கூடாது என்று பிரகடனம் செய்தார்கள். வரலாறு அறிந்தவரை மனித நாகரிகத்தின் அடையாள காலத்தில் இத்துணைக் கண்டம் 'ஜம்பு தீபம்' என்றும் 'நாவலந் தீவு' என்றும் அழைக்கப்பட்டு வந்தது. இதன் மக்களில் மூலமானவர்களே சாக்கியர்கள்.



சாக்கியர்கள் மனித குலத்தின் தொடக்க தொல்குடி. சாக்கியர்கள் இவ்வுலகில் கருத்து முதல்வாதக் கருவிகளான கடவுள், மதம், சாதி, மோட்சம், நரகம், ஊழ்வினை, ஆன்மா, வர்ண பேதம், வர்க்கபேதம், ஆண் - பெண் பேதம் ஆகியவற்றை உரிமை - உடைமைவாதிகள் புகுத்தப்படுவதற்கு முன்பே பிறந்து வளர்ந்தவர்கள். மானுடத்தின் எதிர்மறைகளை அறியாமல் வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள். இவர்கள் ஆயிரம்

ஆயிரம் ஆண்டுகளாக மானுட உலகத்திற்கு மொழி, கருத்தியல், மார்க்க நெறி, தத்துவம், பண்பாடு, வாழ்வியல் பாங்கு, சக மனிதர்களிடம் ஒப்புரவாக ஒழுகும் வழிமுறை ஆகியவற்றைத் தங்களின் கொடையாக ஈந்தனர். கபிலரின் நீட்சியாக புத்தரின் தலைமையை ஏற்று பிறவிப் பவுத்தர்களாயினர்.

சாக்கிய இனக்குழுவின் சமத்துவம், சகோதரத்துவம், புராதனச் சமூக சனநாயகம் இவைகளை எதிர்த்தே இங்கு பார்ப்பனியம் ஊடுறுவியது. புத்தரது காலம் வரை சாக்கியப் பழங்குடியரசுகள் முழுமையாக அழிக்கப்பட முடியவில்லை. கி.மு. 544 மே மாத (வைசாக பவுர்ணமி) முழு நிலவில் கோதமர் பேரொளியடைந்தார். சித்தார்த்த கோதமர் புத்தரானார். இது, மனிதகுல வரலாற்றின் மாபெரும் நிகழ்வானது.

அலெக்சாண்டர் கன்னிங்காம் என்பவர், இந்தியத் துணைக் கண்ட ஊழிகள் பற்றி ஆய்வு செய்து, 'இந்திய ஊழிகள்' நூல் Book of Indian Eras என்ற பெயரில் 1883இல் வெளியிட்டார். அலெக்சாண்டரைத் தொடர்ந்து எல்.டி. சாமிக்கண்ணு (பிள்ளை) என்பவர், இந்தியக் காலக்கணக்கீட்டு முறையை An Indian Ephemeris என்ற பெயரில் 1915 மற்றும் 1922 ஆம் ஆண்டில் வெளியிட்டார். ஊழிகள் பற்றிய இந்த இருவரின் நூல்களும் தொடர் ஆண்டு முறையின் தொடக்கமாக புத்த நிர்வாண ஆண்டு கி.மு. 544 ஆம் ஆண்டையே முதற்புள்ளியாகக் கொண்டு முத்திரையைப் பதித்தது குறிப்பிடத்தக்கது. இம்மண்ணின் தொல்குடிகளுக்குரிய பெருமை, தொடர் ஆண்டு புத்தரை முன்வைத்துப் பின்பற்றப்படுவதாகும். இம்மண்ணின், மக்களின் வரலாறு புத்தருக்கு முன் - புத்தருக்குப் பின் என்பதே ஆகும். ●

- தொடரும்



படிப்பகம்

www.padippakam.com


வாழ்க கூட்டுறவு! வளர்க கைத்தறி!

# பாண்ஃபேப்

புதுவை கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தித் திட்டம்
(அளவறை) எண் பி. 433

## ஏற்றுமதி தரம் வாய்ந்த அனைத்து கைத்தறி துணி வகைகளும் தள்ளுபடி விலையில் கிடைக்கும்

### புதுவை விற்பனை அங்காடிகள்

| | |
|---|---|
| 163, மாதா கோவில் வீதி, புதுவை - 1 | ஜி.ஆர்.ஆர். ஜோன் மறைமலை அடிகள் சாலை பாலர் பவன் எதிரில், புதுவை |

**அலுவலகம் :**

புதுவை கூட்டுறவு கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி திட்டம்
(அளவறை) எண். பி.433,
முத்தைய முதலியார் வீதி, முத்தியால்பேட்டை, புதுவை - 605 003
தொலைபேசி : 2237144, 2237145 ■ டெலிபேக்ஸ் : 0413 - 2237144

**நிர்வாகக் குழு இயக்குநர்கள்**

திருவாளர் கே. ஷேக் உசேன்.................... தலைவர்
திருவாளர் வேணு கஜேந்திரன்.................... உப தலைவர்
திருவாளர் ஆர். கண்ணன்.................... இயக்குநர்
திருவாளர் டி. மோகன சுந்தரம்.................... இயக்குநர்
திருவாளர் ஏ. பூமிதாஸ்.................... இயக்குநர்
திருமதி ஏ. சந்திரா.................... இயக்குநர்
திருமதி பி.எஸ். சுந்தரி.................... இயக்குநர்

No. 773/DIP/PRA/PRESS/2005 - 2006 / S - 59


படிப்பகம்

www.padippakam.com



# “ஒரு மீனவ மாட்டுக்கு பத்து சேரிக்காரன் சமம்”

■ பூவிழியன்

இயற்கையின் கொடூரத் தாக்குதல்கள்- பூகம்பம், சுனாமி, நிலச்சரிவு, கடல் கொந்தளிப்பு, வெள்ளம், புயல் என வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து மனித இனத்தை அச்சுறுத்தி வருகின்றன. இதுபோன்ற இயற்கைப் பேரழிவுகள் நடக்கும் போதெல்லாம், பாதிக்கப்பட்ட மக்களை முகாம்களில் தங்க வைப்பதில் இருந்து - நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளைச் செய்வதுவரை அரசும், அரசு சாரா நிறுவனங்களும், பிற சமூகத்தினரும் - பாதிப்பிற்குள்ளான சேரி மக்கள் மீது தொடர்ந்து பாகுபாட்டையே கடைப்பிடித்து வருகின்றன.

இயற்கைப் பேரழிவு ஒட்டுமொத்த சமூகத்தையும் பாதித்தாலும், அது தலித் மக்கள் மீது மீண்டும் மீண்டும் சாதிய வன்கொடுமையை ஏவுகிற ஒரு நிகழ்வாகவே மாறிவிடுகிறது. கடந்த நவம்பர் கடைசி வாரத்தில் பெய்யத் தொடங்கிய கனமழை, தமிழகத்தையே வெள்ளக்காடாக மாற்றியது. அதனைத் தொடர்ந்து கொள்ளிடம் ஆற்றில் கட்டுக்கடங்காத வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. ஆனால், இந்தத் தொடர் கனமழையிலும், வெள்ளப் பெருக்கிலும் அல்லலுறும் சேரி மக்கள் மீது சாதி ரீதியானப் பாகுபாடுகள் நிகழ்த்தப்படுகின்றன என்பது, கள ஆய்வு செய்து பார்க்கும்போது தெரிய வந்தன.

தமிழகத்தில் 23.11.2005 அன்று பெய்யத் தொடங்கிய தொடர்கனமழை, தொடக்கத்தில் 12 மாவட்டங்களை வெள்ளக்காடாக மாற்றியது. பிறகு இதன் பாதிப்பு 22 மாவட்டங்களைத் தாக்கியது. இதனால் மேட்டூர் அணைக்குத் தண்ணீர் வரத்தும் தொடர்ந்து அதிகரித்ததால், கொள்ளிடம் ஆற்றில் நீர் திறந்து விடப்பட்டது. நாகை மாவட்டத்தில் கொள்ளிட ஆற்றின் கரைகளில் ஏற்பட்டுள்ள உடைப்பு, புதிதாக உருவானதல்ல. கடந்த காலங்களில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் உடைந்த பகுதிகள்தான். ஆனால் அந்தக் கரைகளை உயர்த்தி, கான்கிரீட் தடுப்புச் சுவர்களை உருவாக்கி உடைப்பைத் தடுக்கிற வேலையை அரசு செய்யவில்லை. இந்தத் தாழ்வான பகுதிகளில் தலித் மக்கள்தான் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள். எனவேதான், இதுபோன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளில் அரசு அலட்சியம் காட்டுகிறது.

25.11.2005 அன்று தலித் மக்களை முன்னெச்சரிக்கை காரணமாக வெளியேற்றியபோது, தலித் மக்களின் உயரிய சொத்தான மாடுகளையும், ஆடுகளையும் பாதுகாக்கிற நடவடிக்கையில் அரசு ஈடுபடவில்லை. தலித் மக்களைப் பள்ளிகளில் தங்க வைப்பதற்காக தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளின் வகுப்பறைகளைத் திறந்துவிடாமல், வராண்டாவில் கும்பல் கும்பலாகத் தங்க வைத்துள்ளனர். சீர்காழி புத்தூர் பாலிடெக்னிக், சியாமளா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சபா நாயக (முதலியார்) இந்து மேல்நிலைப் பள்ளி, புதுப்பட்டினம் அரசு உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளில், தலித் பெண்கள் உறங்குவதற்கும், உடைகள் மாற்றுவதற்கும் வசதிகள் ஏற்படுத்தித் தராமல் கேவலப்படுத்தி உள்ளன. இது தவிர, ஆரப்பள்ளத்தில் பாதிக்கப்பட்ட தலித் மக்களை, ஆச்சாள்புரம் பெரிய கோவிலிலும் - பிற்படுத்தப்பட்ட மக்களை, சபரி ராசா திருமண மண்டபத்திலும் பிரித்து தங்க வைத்துள்ளனர்.

தாண்டவன்குளம் தலித் மக்களை, அங்குள்ள அரசு உதவிபெறும் தொடக்கப்பள்ளியில் தங்குவதற்கு அனுமதி மறுத்துள்ளார், பள்ளியின் தாளாளர் அருளழகன். மேலும் ‘பறப்பயலும், பள்ளப்பயலும் தங்குவதற்கு நான் என்ன சத்திரமா கட்டி வைத்துள்ளேன்’ என்று கேவலமாகப் பேசியுள்ளார். புதுப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில், புளியந்துறை கிராம தலித்துகள் சுமார் 1500 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மாலை 6 மணிக்கு தலித்துகளை வகுப்பறைகளில் இருந்து வெளியேற்றி - வராண்டாவில் படுக்கச் சொல்லியும், மின்சாரத்தைத் துண்டித்தும், கழிவறைகளைப் பூட்டியும் மக்களை அலைக்கழித்தனர்.

கடந்த 2004 டிசம்பர் 26 அன்று உலகத்தையே உலுக்கிய ஆழிப்பேரலை (சுனாமி), கடற்கரைச் சமூகத்தையே விழுங்கியது. ஆனால், மீனவச்சமூகம் மட்டுமே கடற்கரைச்சமூகம்; கடலுக்குச் சொந்தமானவர்கள் என்கிற வதந்தியும் இங்கு இடையறாது பரப்பப்பட்டது. தலித்துகளும் மீனவர்களைப் போல, கடற்கரைவாழிடங்களையும், கடற்தொழிலையும் முதல் நிலைத் தொழிலாகக் கொண்டு வாழ்கிறார்கள் (தூத்துக்குடி, தரங்கம்பாடி, வானகிரி, திருமுல்லைவாசல், பிச்சாவரம் - கிள்ளை, கல்பாக்கம், சென்னை). ஆனால், ஆழிப்பேரலை முகாம், நிவாரணம், மறுவாழ்வுப் பணிகள் மீனவர்களை மட்டுமே முதன்மைப்

**“இயற்கைப் பேரழிவுகளின் போதெல்லாம், முகாம்களில் தங்க வைப்பதிலிருந்து - நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் வரை அரசும், அரசு சாரா நிறுவனங்களும், பிற சமூகத்தினரும் - பாதிப்பிற்குள்ளான சேரி மக்கள் மீது தொடர்ந்து பாகுபாட்டையே கடைப்பிடித்து வருகின்றன.”**



படிப்பகம்

www.padippakam.com

படுத்தி நடந்தது. அடுத்த நிலையில் பாதிப்பிற்குள்ளாகிய தலித்துகளை அது சற்றும் திரும்பிப் பார்க்கவில்லை. அன்று புறக்கணிக்கப்பட்ட நிலை, இன்று வெள்ளம் மற்றும் கொள்ளிடக்கரை உடைப்பினால் ஏற்பட்டுள்ள பேரழிவு வரை பாதித்துள்ளது.

தமிழக அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் சாதியத் தன்மையுடன் வெளிப்படுகிறது. சுனாமி நடந்த அடுத்த இரண்டு நாட்களுக்குள் தமிழக அரசு ஓர் ஆணையை வெளியிட்டது. முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, இறந்தவர்களின் குடும்பத்திற்கு ரூபாய் ஒரு லட்சம் நிவாரணமாகத் தர வேண்டும் (அரசாணை நிலை எண். 574, தேதி : 28.12.2004) என்று அறிவிக்கப்பட்டது. அன்றைக்கு வெளியிடப்பட்ட இன்னொரு அரசாணையில் (அரசாணை நிலை எண் 575, தேதி : 28.12.2004) உடனடி நிவாரணமாக மாநில இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு கீழ்க்கண்டவைகளை வழங்க வேண்டுமென்பதுதான் அது : ஒரு வேட்டி, ஒரு புடவை, இரண்டு கம்பளிப் போர்வை, 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், ஆயிரம் ரூபாய் - பருப்பு, எண்ணெய், மற்ற மளிகைச் சாமான்களுக்கு; ரூபாய் ஆயிரம் - சமையல் அடுப்பு பாத்திரங்களுக்காக; தற்காலிகக் குடியிருப்பு ஏற்படுத்த ரூபாய் இரண்டாயிரம்.

அது தவிர, 31.12.2004 அன்று மீனவர்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்கும் ஆணையையும் (நிலை எண்.583) அரசு வெளியிட்டது. அதாவது, ஒரு வேட்டி, ஒரு புடவை, இரண்டு கம்பளிப் போர்வை வீதம், 60 கிலோ அரிசி, 3 லிட்டர் மண்ணெண்ணெய், ரூபாய் இரண்டாயிரம் - மளிகைப் பொருட்கள், எண்ணெய், பாத்திரங்கள் வாங்க என அது கூறுகிறது. சுனாமியால் பெரும்பான்மையான மீனவர்கள் பாதிக்கப்பட்டனர் என்பது உண்மை. அதே போல, வெள்ளப் பெருக்கு மற்றும் கொள்ளிடக் கரை உடைப்பு ஏற்பட்டதால், முழுபாதிப்படைந்தவர்கள் தலித்துகள் என்பதும் எல்லோரும் அறிந்த ஒன்றுதான். சுனாமியில் மீனவர் என்று ஒரு அடையாளத்தை வைத்து ஆணை வெளியிடும் அரசு, வெள்ளப் பாதிப்பில் தலித்துகளுக்கென்று நிவாரணம் குறித்த அரசாணையை ஏன் வெளியிடவில்லை?



காடுவெட்டி கிராமத்தில் கொள்ளிடக் கரை உடைப்பைத் தடுக்கும் மக்கள்

**❝ சுனாமியால் பெரும்பான்மையான மீனவர்கள் பாதிக்கப்பட்டனர். வெள்ளப் பெருக்கு மற்றும் கொள்ளிடக் கரை உடைப்பால், தலித்துகள் முழு பாதிப்புக்குள்ளாயினர். சுனாமியில் மீனவர் என்ற அடையாளத்தை வைத்து ஆணை வெளியிடும் அரசு, வெள்ளப் பாதிப்பில் தலித்துகளுக்கென்று நிவாரணம் குறித்த அரசாணையை ஏன் வெளியிடவில்லை? ❞**

சுனாமி தாக்கிய பிறகு 28.12.04 அன்று வெளியிட்ட அரசாணையில், சமையல் அடுப்பு வாங்குவதற்கு ஆயிரம் ரூபாயை தர சம்மதித்து ஆணையிடுகிற ஆட்சியாளர்கள், வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு வீட்டை முற்றிலும் இழந்து தெருவுக்கு வந்த தலித்துகளுக்கும் - இழப்பீட்டுத் தொகை ரூபாய் 1000 என அறிவித்ததை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? ஆக, ஒரு மீனவரின் ஒரு அடுப்பின் மதிப்புதான் ஒரு சேரிக்காரனின் மொத்த வாழ்க்கையே என்பது, சாதியப் பாகுபாடின்றி வேறென்ன? அதே போன்று சுனாமியால் இறந்து போன மாட்டிற்கு ரூ. 10,000 வழங்கிய அரசு, முழுவதும் இடிந்து போன வீட்டிற்கு 2,000 ரூபாய் என்றும், லேசான பாதிப்பு என்றால் 1,000 ரூபாய் என்றும் கூறுகிறது. பத்து சேரிக்காரனின் மொத்த மதிப்பு, ஒரு மீனவ மாட்டிற்குச் சமம் என அரசு சொல்கிறதா?

மேலும், 6.1.2005 அன்று வெளியிட்ட அரசாணை (நிலை எண்.10) இல் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றிற்கு 8000 ரூபாய் மதிப்புள்ள தற்காலிகக் குடியிருப்பு கட்டித்தர மற்றும் இடம் தேர்வு செய்ய, அந்தந்த மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனால், தலித்துகளின் வாழ்நிலையை அடையாளம் கண்டு, தற்காலிகக் குடியிருப்புகளை அமைக்காதது ஏன்? அதே அரசாணையில் தற்காலிகக் குடியிருப்புகள் அமைப்பதற்கும், நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகளில் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுடன் உறவை ஏற்படுத்திக்கொண்டு, பாதிக்கப்பட்ட மீனவ மக்களுக்கு உதவிகளைச் செய்ய வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், வெள்ளப்பாதிப்பில் தலித் மக்கள் பாதிக்கப்பட்டபோது, முகாம் மற்றும் நிவாரணங்களில் தொண்டு நிறுவனங்கள் தலித் மக்களுக்கு உதவி செய்யக் கூடாது (நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ராதாகிருஷ்ணன்) எனத் தடுத்தது ஏன்?

அண்மையில் நடைபெற்ற கடைசி சட்டமன்ற விவாதங்களில்கூட, முதலமைச்சரும் எதிர்க்கட்சியினரும் பல தனிப்பட்ட விரோதங்களுக்காக ஆவேசமாக மோதிக் கொண்டனர்; பலமுறை வெளிநடப்புச் செய்தனர். ஆனால், தலித் மக்கள் மீதான சாதிப் பாகுபாடுகளைச் சுட்டிக்காட்டி, நடவடிக்கை எடுக்க - குரல் கொடுக்கவோ, வெளிநடப்புச் செய்யவோ எவருமே தயாராக இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



# புகழ்பெற்ற தலித் மக்களின் முகவரி



இந்த நாட்டின் தொல்குடியினரான தலித் மக்கள், நாடு முழுவதும் பரவிக் கிடக்கிறார்கள். ஆங்காங்கே ஒரு தலைமையில், சிறு சிறு குழுக்களாகச் செயல்பட்டு வருகிறார்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்ளாமல் இருக்கிறார்கள். அதனால் இவர்கள் சமூக விடுதலையையும், அரசியல் விடுதலையையும் வென்றெடுக்க முடியாமல் போகிறது. இவர்கள் அனைவரையும் ஒரே நேர்க்கோட்டில் இணைத்து, தங்களுக்குள் உள்ள கருத்து வேறுபாடுகளைக் களைந்து - சமூக விடுதலை, அரசியல் அதிகாரம் பெற பாலமாக ஒரு கருவி தேவைப்படுகிறது.

ஆகவே, தொலைநோக்குப் பார்வையோடு, 'தலித் பிரபலமானவர்களின் முகவரி' என்ற நூல் தொகுப்பை வெளியிட இருக்கிறோம். தலித் அமைப்புகள், தலித் அரசியல் கட்சிகள், தன்னார்வக் குழுக்கள், மனித உரிமை இயக்கங்கள், எஸ்.சி./எஸ்.டி. தொழிற்சங்கம் போன்றவற்றின் நிர்வாகிகள், சட்டம், மருத்துவம், பொறியியல், கலை, இலக்கியம், பத்திரிகை, வர்த்தகம், விளையாட்டு போன்ற துறைகளில் புகழ்பெற்று விளங்கும் தலித் பிரமுகர்கள் தங்களின் பெயர், படிப்பு, பணி, பொறுப்பு, முகவரி, தொலைபேசி எண் போன்றவற்றைத் தெளிவாக எழுதி, எங்கள் முகவரிக்கு 28.2.2006-க்குள் அனுப்பி, எங்கள் முயற்சிக்கு ஆதரவு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**அனுப்ப வேண்டிய முகவரி : ஆணழகன் து. சீனிவாசன்**
**6, 3ஆவது தெரு, கே.கே. நகர், மணவாள நகர், திருவள்ளூர் - 602 002, பேசி : 2764 0423**

**தனிச்சுற்றுக்கு மட்டும் - விலை ரூ. 10**




**சனவரி - பிப்ரவரி 2006**
**சந்தா ரூ.100 (12 இதழ்கள்)**

**விழிப்புணர்வு**
அரசு சட்டக் கல்லூரி மாணவர்களால் நடத்தப்படும் இதழ்

**இந்த இதழில்**
**வரலாற்றுச் சுவடுகள் - வெண்மணி**
ஆர். நல்லக்கண்ணு
**வீரப்பன் தேடுதல் வேட்டை - அவலத்திற்குத் தீர்வு என்ன?**
ச. பாலமுருகன்
**தமிழர் மருத்துவமே வர்மக் கலை - சித்த மருத்துவர் நேர்காணல்**
அசுரன்
**ராட்சசக் குழந்தை - சிறுகதை**
பிரபஞ்சன்
**தினகரன் கிறிஸ்தவர்களைச் சுரண்டுகிறார்**
பெருவழுதி
**மற்றும்**
**அமெரிக்க சொர்க்கத்தில் ஆசிய அடிமைகள்**
**மனிதர்களைவிட விலங்குகள் மேலானவை**

•

**சந்தா மற்றும் படைப்புகள் அனுப்பவும்**
**இதழ் தேவைக்கும் அனைத்துத் தொடர்புக்கும்**
**கு. காமராஜ் - விழிப்புணர்வு**
**62, மாடக்குளம் முதன்மைச் சாலை, பழங்காநத்தம்**
**மதுரை - 625 003, தொலைபேசி எண் : 9443423638**



படிப்பகம்

www.padippakam.com

# இளைஞர்களுக்கான சமூக விழிப்புணர்வு மையம்

## Social Awarenss Society for Youth (SASY)

தலைமை அலுவலகம் : 56/52, விவேகானந்தா நகர், மரக்காணம் ரோடு, திண்டிவனம் - 604 002, விழுப்புரம் மாவட்டம்

கிளை அலுவலகம் : 1, அகரம், புதுப்பேட்டை மெயின் ரோடு, பரங்கிப்பேட்டை

---

சமூகக் கட்டமைப்பின்
வழிகாட்டுதலில்
ஆதிக்க சாதிய வேரோட்டம்.
ஆதிக்க சார்பு நிலை
விழுதுகளாய்
அதிகார வர்க்கம்.
வாழ்வின் இயக்கத்தில்
சாதிய வஞ்சனை.
சாதிய இறுமாப்பில்
சமத்துவமின்மை.
சாதியச் சிதைவுகளை
எதிர்க்கும் சமூக மீட்பில்
இழப்புகளனைத்தும்
இலக்கை நோக்கிய
ஈர்ப்பு விசைகளாய்...

தமிழன்புடன்,

வே. அ. இரமேசுநாதன்
இயக்குநர்



**தலித் உரிமையும் மனித உரிமையே!**
**சவால்களை எதிர்கொள்வோம்! சாதனைகளை மேற்கொள்வோம்!**
**தலித் வாக்குரிமை தலித்துகளை அதிகாரப்படுத்தவே!**

படிப்பகம்

www.padippakam.com

# “அம்பேத்கர் சிந்தனையில் முகிழ்ப்பதே தலித் இலக்கியம்”



சரண்குமார் லிம்பாலே (48) : மகாராட்டிர மாநிலத்தின் தலித் எழுத்தாளர்களில் முன்னோடியாகத் திகழ்பவர். ‘தலித் சிறுத்தைகள்’ (Dalit Panthers of India) இயக்கத்தின் கலை - இலக்கியப் போராளி. கடந்த 25 ஆண்டுகளாக மகாராட்டிர மாநில தலித் இயக்கங்களின் செயல்பாடுகளையும், தலித் இலக்கியங்களின் எழுச்சியையும் விமர்சனப் பார்வையுடன் எழுதி வருபவர். இதுவரை 25-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவருடைய சுயசரிதைகள், மராத்திய வாசகர்களிடம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றவை. 1984இல் வெளியான ‘அக்கர் மாஷி’ (அரை சாதிக்காரன்) என்கிற சுயசரிதை, வேதனைகள் நிறைந்த அவரது இளமைக்கால வாழ்க்கையின் தலித் அடையாள அனுபவங்களை விவரிக்கின்றது. அப்பா தலித் அல்லாதவராகவும் - அம்மா தலித்தாகவும் இருக்கும் போது, அவர்களுக்குப் பிறந்த தான் மட்டும் எப்படி சாதியற்றவனாக வாழ்ந்து காட்ட முடியும் என்பதை, தலித் சமூகத்துக்குச் சவாலாக வைக்கின்ற ஒரு நாவல். அதேபோன்று அவருடைய ‘உபால்யா’ சுயசரிதை - மராட்டிய தலித் இயக்கங்களின் எழுச்சியையும், அதன் வேகத்தையும், திசை மாற்றத்தையும் தலித் பார்வையில் விமர்சனமாக முன் வைக்கின்றது.

மார்க்சியம், பெண்ணியம், அம்பேத்கரியம் ஆகியவற்றில் மிக ஆழமான சமூகப் பகுப்பாய்வை முன் நிறுத்துகின்ற சமகால விமர்சகர்களில் குறிப்பிட்டுச் சொல்லும்படியானவர்களில் ஒருவராக விளங்கும் சரண்குமார் லிம்பாலே எழுதிய ‘தலித் சாகித்யச்சே சவுந்தர்ய சாஸ்திரா’ (தலித் இலக்கியங்களின் அழகியல் நோக்கு) என்ற நூல், மகாராட்டிர தலித் இலக்கிய - இயக்கப் போக்கை அசைபோட வைத்துள்ளது. தலித் இலக்கியங்களின் அழகியல் மீதும், தலித் இயக்கங்களின் செயல்பாடுகள் மீதும் அம்பேத்கரின் சிந்தனைகளும், மார்க்சிய சிந்தனைகளும் எங்கு ஒன்று சேர்கின்றன, எங்கு முரண்படுகின்றன என்பதை மிக விரிவாக விவரிக்கின்ற நூல். இதே காலகட்டத்தில், மகாராட்டிராவில் அம்பேத்கரிய, புதிய பவுத்த, தலித்திய, மார்க்சிய, பார்ப்பனர் அல்லாத குழுக்களின் இலக்கிய மோதலும், தலித் அடையாளமும் தலித் எழுச்சியை மெல்ல கூறுபோட்டு வருவதை இவரின் எழுத்துகள் வெளிப்படுத்தியுள்ளன. அந்த சமயத்தில் அதாவது மார்ச் 2002இல் கனடாவில் உள்ள யார்க் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் அலோக் முகர்ஜி அவருடன் செய்த நேர்காணல், மராட்டிய இதழ்களில் பரவலாக வெளிவந்தன. அதன் ஒரு பகுதியை இங்கே சமகால தமிழகச் சூழலின் தலித் இலக்கிய - இயக்கச் செயல்பாடுகளின் உரசலுக்குப் பொருத்தப்பாடாக வெளியிடுகின்றோம். ‘தலித் இலக்கியம் : விடுதலையின் திசைகள்’ என்ற தலைப்பில் ‘புத்தா வெளியீட்டகம்’ வெளியிட இருக்கும் நூலில், இப்பேட்டியின் முழு பகுதியைக் காணலாம். இந்நூலை அன்பு செல்வம் தமிழில் மொழிபெயர்த்திருக்கிறார்.

சரண்குமார் லிம்பாலே, தற்பொழுது நாசிக்கில் உள்ள யஷ்வந்த்ராவ் சவான் திறந்த வெளிப் பல்கலைக் கழகத்தின் மண்டல இயக்குநராகப் பணிபுரிந்து வருகிறார்.

**இது வரையிலும் இரு சாரருக்கும் நடந்த சண்டைதான் வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது தனியாகப் பிரிவதற்கான சண்டை. இப்போது நடக்கும் சண்டை ஒன்று சேர்வதற்கானது. இது. ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான சண்டை. புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் சண்டையில் எப்படி சமரசம் வர முடியும்? இதுதான் தலித் இயக்கங்களின் உண்மையான குறிக்கோள். நாங்கள் தனித்து வாழ விரும்பியிருந்தால், போராட்டத்திற்கே இடமில்லை. ஆதிக்க சாதிக்காரர்களோடு நாங்கள் வாழ வேண்டும்; அதனால்தான் அவர்களுடன் போராடுகின்றோம். அவர்களுடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லை என்கிற முடிவு எடுத்து விட்டால், சண்டைக்கே இடம் இல்லை.**



படிப்பகம்

www.padippakam.com

**உங்களுடைய 'உபால்யா' நாவல் பற்றிச் சொல்லுங்கள். இந்தத் தலைப்பு ஒரு குரங்கு வர்க்கத்தோடு தொடர்புடையதாகக் கேள்விப்பட்டேன். இந்தப் பெயர் எங்கிருந்து வந்தது?**

1956-க்குப் பிறகு, அதாவது பாபாசாகேப் அம்பேத்கரின் மறைவுக்குப் பிறகு, தலித் சமூகத்துக்கென்று சொல்லும்படியான ஒரு தலைவர் கிடைக்கவில்லை. அவருடைய மறைவுக்குப் பிறகு மிகப் பெரிய வெற்றிடம் உருவானதால் - தலித் சமூகத்துக்கும், தலித் இயக்கத்துக்கும் ஒரு மகத்தான தலைவர் தேவைப்பட்டார். பாபாசாகேப்பின் போராளிகள் ஒன்று கூடி, ஒரு குழு தலைமையை உருவாக்க வேண்டும் என முடிவு செய்தார்கள். இந்திய குடியரசுக் கட்சியை தலித்துகளின் அரசியல் பாசறையாக்க நினைத்தார்கள். அம்பேத்கருடைய கனவும் அதுதான். ஆனால், தலைமைத்துவ மோதலில் ஏற்பட்ட உட்பூசலால் குழு தலைமை தோல்வியடைந்தது. பிறகு இக்கட்சி பல பிரிவுகளாக உடைந்தது. ஒரு பகுதியினர் காங்கிரசுடன் இணைந்தனர். மற்றவர்கள் இந்திய குடியரசுக் கட்சியிலேயே இருந்து விட்டார்கள். சமூகத்தில் உள்ள அநீதிகளைக் களைவதற்காகப் போராடாமல், தலைவர்கள் தங்கள் சுய விருப்பங்களுக்கு ஆட்படுவதை மக்கள் உணர்ந்தார்கள். பாபாசாகேப் அம்பேத்கரின் கனவு நிறைவேறாமல் கிடப்பில் கிடந்தது.

**ஒரு தலித்திடம் உள்ள சுயமரியாதை உணர்வை சுடர்விட்டு எரிய வைக்க வேண்டும். சுயமரியாதை என்பதைத்தான் முதல் கருத்தாகவும் முன் வைக்க வேண்டும். அடுத்து, வர்ணாசிரம வாசகர்களிடம் தலித் உணர்வைத் தூண்ட வேண்டும். இந்த இரண்டு குறிக்கோளுக்கும் ஏற்ற கருப்பொருளை, தலித் எழுத்தாளர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும்.**

இந்தக் காலகட்டத்தில்தான் ஒரு புதிய, இளையதலைமுறையினர் ஒன்று கூடி 'தலித் சிறுத்தைகள்' எனும் அமைப்பை உருவாக்கினார்கள். 1956இல் அம்பேத்கர் மறையும்போது படித்துக் கொண்டிருந்த இந்த இளைய தலைமுறையினர், 1960இல் தங்கள் படிப்பை முடித்தார்கள். பாபாசாகேப்பின் மறைவுக்குப் பிறகு தலித் மக்களை வழிநடத்த ஒரு சரியான தலைமை இல்லை என்பதை உணர்ந்தார்கள். சாதி - தீண்டாமைப் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடவும், தலித் சமூகத்துக்குச் சிறந்த வழிகாட்டவும் ஒப்படைப்பான ஓர் அமைப்பை உருவாக்குகின்ற பொறுப்பை அவர்களே மனமுவந்து எடுத்துக் கொண்டார்கள். அமெரிக்காவில் வீறுகொண்டு எழுந்த 'கருஞ்சிறுத்தைகள்' என்கிற அமைப்பைப் பற்றிப் படித்து, கேள்விப்பட்டு, அதைப் போன்றே ஒரு புரட்சிகரமான, போராட்டக் களத்தை நோக்கிய 'தலித் சிறுத்தைகள்' எனும் அமைப்பை 1972 சூலை 9இல் ஏற்படுத்தினார்கள். அதன் பின்னர் மிகப் பெரிய இயக்கமாக வளர்ந்ததை முன்னின்று நடத்தினார்கள். நான் எடுத்துக் கொண்ட 'உபால்யா' என்கிற நாவல் இந்த இயக்கத்தைப் பற்றியது.

பாபாசாகேப்பின் மறைவுக்குப் பிறகு தோன்றிய தலித் இயக்கங்களின் வரலாற்றை இந்த நாவல் அசை போடுகின்றது. இந்த நாவல் ஒரு தலித் இளைஞரைப் பற்றியது. படிப்பை முடித்த அந்த இளைஞன், தன்னைத் தானே செழுமைப்படுத்திக் கொண்டு இயக்கப் போராட்டங்களில் களம் இறங்குகிறான். சமூகத்தின் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரச்சனைக்காகத் தீவிரமாகப் போராடும் ஒரு போராளியாக மாறுகிறான். ஆனால், மக்களுக்காகப் போராடும் இப்போராளியைப் பாரம்பரிய அமைப்புகள் விலை கொடுத்து வாங்க முயல்கின்றன. முடியவில்லை என்றால் பொய் வழக்குகளைப் போட்டு சிறையில் தள்ள முயல்கின்றன. அதுவும் முடியாதபோது பொய்யான மோதலை இட்டுக்கட்டிக் கொல்லவும் சதி செய்கின்றன.



மராத்வடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்ட வேண்டும் என இளைய தலித் சிறுத்தைகள் போராட்டங்களை முன்னெடுத்தார்கள். ஏனென்றால், தலித் கல்விக்காக முதன் முதலில் மராத்வடா பகுதியில்தான் பாபாசாகேப் அம்பேத்கர் மிலிண்ட் கல்லூரியைத் தொடங்கினார். மராத்வடா பகுதியில் தலித் கல்விக்காக புதிய பாதையைக் காண்பித்தவர் பாபாசாகேப். எனவே, பல்கலைக் கழகம் அம்பேத்கர் பெயரில்தான் இருக்க வேண்டும் என்கிற கோரிக்கையை முன்வைத்துப் பெரிய போராட்ட இயக்கத்தைக் கட்டமைத்தார்கள். ஒரு கட்டத்தில் போராட்டம் வலுப்பெற்றது. இப்போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட போராளிகள், மிகப் பெரிய போராட்டத் தலைவர்கள் ஆனார்கள். இதைக் கண்டு பல அரசியல் இயக்கங்கள் அவர்களைத் தங்கள் பக்கம் அழைத்தன. மய்ய நீரோட்ட அரசியலில் கூட்டணி வகிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். மக்களுக்காகத் தீவிரமாகப் போராடிய பல தலைவர்கள் தொடர்ந்து அரசியலுக்கு ஈடுபடுத்தப்பட்டார்கள்.

**இவர்கள் காங்கிரசுக்குள் சென்றவர்களா அல்லது...**

இல்லை, இல்லை. தலித் கட்சியாகிய இந்திய குடியரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்களுக்குத் தலைவராக இருந்த ராம்தாஸ் அத்வாலேவுக்கு அமைச்சர் பதவி கொடுத்தார்கள். நானும், அத்வாலேவும் ஒன்றாக இயக்க வாழ்வில் நுழைந்தோம்; போராட்டங்களில் ஈடுபட்டோம். அவர் அமைச்சர் ஆன பிறகும் அவருடன் சேர்ந்து உழைத்தேன். அதனடிப்படையில் எப்படி இந்த இயக்கம் உருவானது என்பதிலிருந்து, எங்கே போய் முடிந்தது என்பது வரை நான் நன்கறிவேன். இந்தக் கசப்பான அனுபவத்திற்குப் பிறகுதான் 'உபால்யா' நாவலை எழுதினேன். இந்த நாவல் 1956க்கும் 1996க்கும் இடையே நடந்த நாற்பதாண்டு கால சமூக அரசியல் நிகழ்வுகளின் வரலாற்றைக் கொண்ட ஒரு நாவல். எனினும், 'உபால்யா' என்கிற சொல் குரங்கைப் பற்றியது. இது ஒரு வகையான குரங்கு. இந்த வகைக் குரங்கில் ஆண் குரங்கு, பெண் குரங்கைச் சுரண்டி, ஏமாற்றி வாழ்ந்து வருகின்றது. பெண் குரங்குக்கு ஓர் ஆண் குரங்கு பிறந்தால் பெரிய ஆண் குரங்கு அதைக் கொன்றுவிடும். எங்கே நம்முடைய இடத்தை அது பிடித்து விடுமோ என்கிற பயத்தில் புதிதாகப் பிறக்கின்ற ஆண் குரங்குகளை அது அனுமதிப்பதில்லை. இன்றைக்கு நாம் பார்க்கின்ற அரசியல் அமைப்பும் 'உபால்யா'வைப் போன்றதுதான். ஒவ்வொரு தலைவரும் தான் பிடித்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, அதை யாருக்கும் விட்டுக் கொடுக்காமல், வேறு தலைவர்கள் வருவதை அனுமதிப்பதில்லை. தன்னைப் புகழ்பவர்களைக் கொண்டு, தனக்கென்று ஒரு



படிப்பகம்

www.padippakam.com

கூட்டத்தை வைத்துக் கொள்கிறார்கள். பிற தலைவர்களை ஏற்பதில்லை. புதிய தலைமுறையில் இருந்து யாராவது ஒரு இளைஞன் தலைவராக முயன்றால், உடனே அவனை ஊழலில் ஈடுபடுத்தி அழித்து விடுகின்றார்கள். இந்த அனுபவம் எனக்குள் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது. எனவேதான் இந்தப் பெயரை என் நாவலுக்குத் தலைப்பாக்கினேன்.

**'உபால்யா' நாவலின் ஒரு பகுதியை நான் வாசித்தேன். புரட்சிகர இயக்கத்தில் எழுத்தாளர்களின் பங்கு என்னவாக இருக்க வேண்டும் என்று விரிவாக எழுதப்பட்டுள்ளது. இதில் உள்ள பிரச்சனைக்கு நீங்கள் அதிக கவனம் செலுத்துவதாகத் தோன்றுகின்றது?**

உண்மையிலேயே எழுத்தாளர்கள் மிக முக்கிய பங்கு வகிக்கிறார்கள். ஒவ்வொரு புரட்சிக்குப் பின்னும் எழுத்தாளர்களின் கொள்கைகள் மூலாம்பரமாக அமைந்திருக்கின்றன. பிரெஞ்சுப் புரட்சியாக இருந்தாலும் சரி, ரஷ்யப் புரட்சியாக இருந்தாலும் சரி - ஏன் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் பின்புலத்தில்கூட, இயக்கம் புரட்சியை நோக்கி வீறு கொள்ள இலக்கியமே முன்னின்று வழி நடத்தி இருக்கின்றது. பாபாசாகேப் அம்பேத்கர் நம்மிடையே போராடினார்; நிறைய எழுதினார். மகாத்மா புலேவும் அப்படித்தான். ஆக, நம்முடைய எழுத்தாளர் கூட்டமும், போராளிக் கூட்டமும் வெவ்வேறானவர்கள் அல்ல. ஒரே மனிதர்தான் போராளியாகவும், கலைஞராகவும், கவிஞராகவும் எழுந்து நிற்கிறார். எளிய, பாமர மக்கள் இவர்களுடன் அணி வகுத்து நிற்கின்றனர். புலே, அம்பேத்கர் ஆகியோரின் சிந்தனைகளில் இருந்தும், கொள்கைகளில் இருந்தும் ஓர் இயக்கம் தடம் மாறிப் போகாமல் செய்ய வைப்பதே ஒரு எழுத்தாளரின் கடமை. இந்த உணர்வை இலக்கியத்தின் வழியாக மக்களுக்கு எடுத்துச் செல்வதும் எழுத்தாளரின் பணியாக இருக்கின்றது.

**மக்களிடையே இலக்கியத்தை எடுத்துச் செல்வதுதான் ஓர் எழுத்தாளரின் பணி என்கிறீர்கள். அப்படியானால் எழுதுவதின் நோக்கம் என்ன? நீங்கள் சொல்கிற கருத்து எழுதுவதை பாதிக்கும் அல்லவா? பிறகு நீங்கள் கூறும் மக்கள் யார்? தலித் மக்கள் மட்டுமா அல்லது அவர்களையும் கடந்ததா?**

இல்லை. தலித் இயக்கம் தலித் மக்களுக்காக மட்டுமல்ல. ஏனெனில், தலித் பிரச்சனைகள் சாதியோடு தொடர்புடையவை. சாதி ஒழியும்வரை நமது பிரச்சனைகள் தீராது. 1960லிருந்து தலித்துகள் இயக்கமாக மாறினார்கள் அல்லது தலித்துகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்காகப் பிரச்சனைகள் தீர்ந்து விடாது. இந்தக் கேள்விகளுக்கெல்லாம் வர்ணாசிரமவாதிகளிடத்தில்தான் பதில் உள்ளது. இந்தப் பிரச்சனைகளை ஆயுதங்களைக் கொண்டு தீர்க்க முடியாது. எங்களுக்கு வன்முறையில் நம்பிக்கை இல்லை. நாங்கள் வன்முறையை ஒருபோதும் ஆதரிக்க மாட்டோம். இதுவரை அறப்போராட்ட வழிமுறைகளையே கடைப்பிடித்து வருகின்றோம். எங்களுடைய போர் கருத்துப் போர். இந்தப் போரின் மூலம் தலித் இலக்கியமானது, வர்ணாசிரம சமுதாயத்தையே மாற்ற முயன்று வருகிறது. ஒவ்வொரு தனிப்பட்ட வர்ணாசிரமவாதியின் மனதிலும் மனமாற்றம் கொண்டுவரப் போராடுகின்றது. தலித் இலக்கியத்துக்கு இரண்டு பரிமாணங்கள் உண்டு.



ஒன்று, தலித்துகள் தங்களுடைய கடந்த கால வரலாற்றில் அடிமைப்படுத்தப்பட்டார்கள் என்பதை உணரச் செய்து, அவர்களும் மனிதர்கள்தான் என எடுத்துக்காட்டி, அவர்களுடைய மனித உரிமைகளுக்காகப் போராட வேண்டியது அவர்களின் கடமை என்று உணர்த்த வேண்டும். மற்றொன்று, வர்ணாசிரம சமூகத்தின் இதயத்தைத் தொட்டு அவர்களின் மனதை மாற்ற முயன்று, தலித்துகளின் உரிமைகளைப் பண்புடன் எடுத்துக் கூறி, தலித்துகளும் மனிதர்கள்தான் என்பதை உணரச் செய்து, காலம் காலமாக அவர்கள் அடக்கி, ஒடுக்கி வைக்கப்பட்டார்கள் என்பதை விளக்கி, தலித்துகளின் நடப்பு நிலையை வர்ணாசிரமத்தார் புரிந்து ஏற்க வைத்து, அவர்கள் மாற வேண்டும் என உணர்த்த வேண்டும்.

**இது இன்னொரு கேள்வியை எழுப்புகிறதே! அதாவது, ஒரே இலக்கியப் படைப்பு இந்த இரண்டு குறிக்கோள்களையும் அடையப் போதுமானதா?**

ஆமாம், போதும். இந்தியாவில் பல மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்ட 'அக்கர்மாஷி' என்கிற என்னுடைய தன் வரலாற்று நாவலை, இந்தியா முழுவதிலும் உள்ள தலித் வாசகர்கள் படித்துவிட்டுப் புகழ்ந்து எழுதினார்கள். ''நாங்கள் வாழும் இழிவான வாழ்நிலையை எங்கள் கண் முன் கொண்டு வந்து நிறுத்தி விட்டீர்கள். ஆம், நம்முடைய விடுதலையை நோக்கிப் போராடுவதற்காக நாம் ஒருங்கிணைய வேண்டும் என்பதை உணர்த்தி விட்டீர்கள்'' என்று எழுதினார்கள். அதே சமயம் வர்ணாசிரம வாசகர்கள்கூட, இந்த நாவலைப் படித்து விட்டுத் தங்கள் கருத்துகளை எழுதினார்கள். ''லிம்பாலேஜி எங்கள் முன்னோர்கள் உங்கள் தலித் சமூகத்தின் மீது இவ்வளவு கொடுமைகள் இழைத்ததற்காக நாங்கள் வெட்கித் தலை குனிகின்றோம். இது மிகவும் அவமானத்திற்குரிய செயல் என்பதை உண்மையாக உணர்கிறோம்'' என்று எழுதினார்கள். வர்ணாசிரம வாசகர்களிடம் இப்படியான எண்ணங்களும் உணர்வுகளும் ஏற்படுவது வரவேற்கக் கூடிய நல்ல செய்தி. இது, வர்ணாசிரம வாசகர்களிடம் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துகின்றது. அதுமட்டுமல்ல, இனி தலித்துகள் மீது அநீதியான, அத்துமீறலான கொடுமைகள் ஏவப்படக் கூடாது என்கிற உள்ளுணர்வையும் தூண்டுகிறது. ஆக, ஒரே இலக்கியப் படைப்பு இரண்டு விதமான தாக்கங்களை நிச்சயம் ஏற்படுத்த முடியும்.

**முற்போக்குவாதிகளும் ஆதிவாசிகளிடம் ஊழியம் செய்யச் சென்ற கிறித்துவ அருட்தொண்டர்கள் போலவே தலித்துகளிடம் நடந்து கொண்டார்கள். 'நீங்கள்தான் எங்கள் தலைவர்கள். நாங்கள் உங்களின் போராளிகள்' என்று சொல்லியிருக்க வேண்டும். அதைச் செய்யாமல், அவர்கள் நமக்குத் தலைவர்களாக இருக்கவே விரும்பினார்கள். அதனால் மீண்டும் நாம் அவர்களுக்கு வேலையாட்களாக இருக்க வேண்டியிருந்தது.**



**உங்களுடைய படைப்பின் குறிக்கோள் இதுதான் என்றால், அது எவ்வாறு நீங்கள் எழுதுவதை பாதிக்கின்றது? எடுத்துக்காட்டாக, 'உபால்யா'வில் ஓர் இயக்கம் வளர்ந்ததைப் பார்க்கிறீர்கள். அந்த இயக்கத்துக்கு என்ன நேர்ந்தது, எங்கே போய் முடிந்தது என்பதையும் கவனிக்கின்றீர்கள். இன்றைய நடுத்தர வர்க்கப் படைப்புகள் ஒரு குடும்பத்தையோ அல்லது தனி மனிதரைப் பற்றியோ பேசுகிறது. அதில் உறவு, காதல், தனி மனித உளவியல்**



படிப்பகம்


திருக்குர்ஆன்
முஸ்லிம்களின் குலச்சொத்தல்ல!
உலக மக்கள் அனைவருக்கும் இது ஒரு நல்லுரை
நெஞ்சுக்கு நிம்மதி அளித்து நேர்வழி காட்டும் அருளுரை
மூலம் ● தமிழாக்கம் ● விளக்கவுரை
பல்வகைப் பாயிரங்களுடன் கூடிய
அகல் பெரும் பதிப்பு
1232 பக்கங்கள் விலை ரூ. 290/-
அஞ்சல் செலவு ரூ. 33/-
மூலம் ● தமிழாக்கம்
எளிய தமிழில்; இனிய நடையில்!
கையடக்கப் பிரதி
1264 பக்கங்கள் விலை ரூ.125/-
அஞ்சல் செலவு ரூ. 23/-
இன்னும்... நபிமொழி தமிழாக்கங்களும்,
இஸ்லாமிய வாழ்வியல் குறித்த
150-க்கும் அதிகமான தலைப்புகளில்
நூல்கள் கிடைக்கும்...!
எல்லாத் தரப்பினரும் விரும்பிப் படிக்கும்
ஒரு முழுமையான இஸ்லாமிய இதழ்!
சமரசம்
ஆண்டுச் சந்தா ரூ. 220/-
ஆறு மாதச் சந்தா ரூ. 110/-
(வெளிநாடு) ரூ. 820/-
வெளியூர் செக அனுப்புபவர்கள் ரூ. 10 சேர்த்து அனுப்பவும்.
பணவிடை, காசோலை, வரைவோலை அனுப்புவோர்
Creative Communication Chennai
எனும் பெயருக்கு அனுப்ப வேண்டும்.
புதன், வியாழன் தோறும் இரவு 10 மணிக்கு தமிழன் டி.வி.யில் மானுட வசந்தம்
இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட் (IFT)
138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை - 600 012.
போன் : 91-44-2662 4401, 2662 0091 ஃபேக்ஸ் : 91-44-2662 0682
E-mail : iftchennai12@gmail.com Website : www.iftchennai.org

www.padippakam.com



**சிக்கல், துன்ப முடிவு இவைகளும் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது உங்களுடைய எழுத்தின் கருப்பொருள் என்ன? எந்தவிதமான இலக்கியத்தை நீங்கள் படைக்கின்றீகள்?**

நான் ஒரு தலித் என்கிற முறையில் சொல்கிறேன். ஒரு தலித்திடம் உள்ள சுயமரியாதை உணர்வை சுடர்விட்டு எரிய வைக்க வேண்டும். சுயமரியாதை என்பதைத்தான் முதல் கருத்தாகவும் முன் வைக்க வேண்டும். அடுத்து, வர்ணாசிரம வாசகர்களிடம் தலித் உணர்வைத் தூண்ட வேண்டும். இந்த இரண்டு குறிக்கோளுக்கும் ஏற்ற கருப்பொருளை தலித் எழுத்தாளர்கள் எடுத்துக் கொள்ள வேண்டும். இதன் வழியாக தலித் உரிமைகள், தலித் இயக்கங்கள், இவற்றைப் பற்றிய வரலாறு, கதைகள், நாவல், கவிதைகள் மட்டும் தான் தலித் இலக்கியத்தின் அங்கமாக இருக்கும். துப்பறியும் கதைகள், மர்ம நாவல், கற்பனைக் கவிதைகள் - தலித் எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருந்தால்கூட, அவை தலித் இலக்கியமாகாது. நான் பல்வேறு வகையான எழுத்துகளை, பல தளங்களில் எழுதியுள்ளேன். அவற்றை எல்லாம் மக்கள் தலித் இலக்கியமாக ஏற்றுக் கொண்டதில்லை. தலித் மக்களைப் பற்றி, தலித் இயக்கங்களால் தூண்டப்பட்டு, தலித் எழுத்தாளர்களால் பாபாசாகேப் அம்பேத்கர், புலே ஆகியோரின் சிந்தனையின் கீழ் எழுதப்படுவதுதான் தலித் இலக்கியமாகும்.

**ஆக, ஓர் இலக்கியப் படைப்பு, தலித் இலக்கியமாக ஏற்கப்பட வேண்டுமானால், அது தலித்தால் எழுதப்பட்டிருந்தால் மட்டும் போதாது என நீங்கள் கூறுகிறீர்கள்?**

ஓர் எழுத்தின் கருப்பொருள், அதில் அடங்கியுள்ள உள்ளுணர்வு ஆகியவை மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. தலித் கருப்பொருளைப் பற்றி கீழ்த்தரமாகவும், தரமற்றதாகவும் - ஒரு தலித் எழுத்தாளர் எழுதினால்கூட, அதை தலித் இலக்கியம் எனக் கூற முடியாது. அதில் அம்பேத்கரின் சிந்தனைகள் இழையோடியிருக்க வேண்டும். அது சுயமரியாதை உணர்வை ஊட்ட வேண்டும். அதன் மொழி, உரிமை பேசும் மொழியாக இருக்க வேண்டும்.

**நீங்கள் சொல்கிற இந்தக் கருத்தை மற்ற தலித் எழுத்தாளர்கள் ஏற்கிறார்களா? அல்லது இதைப் பற்றி ஏதாவது விவாதம் இருக்கிறதா?**

இல்லை, இல்லை. ஒவ்வொரு தலித் எழுத்தாளரும் இதே பார்வையில் பாதிப்படைந்துள்ளனர். ஒவ்வொரு எழுத்தாளரின் நூலின் முகப்பிலும், எழுத்திலும் ''என் எழுத்து பாபாசாகேப் அவர்களின் சிந்தனையால் தூண்டப்பட்டது'' என ஒரு வரியாவது எழுதாமல் இலக்கியத்தை உருவாக்க மாட்டார்கள்.

**சில நாளுக்கு முன்பு தரம் வீர் எழுதிய ஒரு கட்டுரையைப் படித்தேன். ஓராண்டுக்கு முன் படித்ததாக ஞாபகம். அதில் அவர், 'நாம் பாபாசாகேப்பிடமிருந்து கற்றதற்கு ஒரு படி மேலே செல்ல வேண்டும்' என்கிறார். 'பாபாசாகேப் நமக்கெல்லாம் வழிகாட்டியுள்ளார். உண்மைதான். ஆனால், நாம் அதிலே ஒட்டிக் கொண்டு நின்றால் முன்னேற முடியாது' என்கிறார். பார்ப்பனியத்தை நாம் எழுதுவது சரிதான். ஆனால் அதை நாம் பின்னுக்குத் தள்ளி விட்டு முன்னேற வேண்டுமே!**

தரம் வீர் கூறுகின்ற கருத்துகள், நடுத்தர வர்க்கத்து தன்மையை காட்டுகின்ற ஒன்று. மகாராட்டிராவில் இந்த மாதிரி பலர் இதே கருத்தைக் கொண்டுள்ளார்கள். புலேவுக்கு ஒரு அம்பேத்கர் சீடராக இருந்தார். இருக்க முடிந்தது. ஆனால், பாபாசாகேப்புக்குப் பிறகு அவரைப்போல ஒரு சீடரையும் பார்க்க முடியவில்லையே. இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், அம்பேத்கருக்குப் பிறகு அவருடைய இயக்கம் தொடர்ந்து இயங்கவில்லை. ஒரு தனி புரவலர் அல்லது காப்பாளர் மீதோ, தனி இறை அவதாரத்தின் மீதோ நம்பிக்கை கொள்வது தவறு. பாபாசாகேப் உண்டாக்கிய பாதை நம்மை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால், சூரிய வெளிச்சம் எவ்வளவு தூரம் பாய்ந்தாலும், எவ்வளவு தொலைவில் இருந்தாலும், வெளிச்சம் சூரியனைச் சார்ந்ததுதான். அதுபோல எத்தனை காலங்கள் கடந்து நின்றாலும் அந்தப் பாதை பாபாசாகேப் பாதையாகத்தான் இருக்கும். அதைக் கடந்துதான் செல்ல வேண்டும் என்பதில்லை. சிலருக்கு எப்போதுமே நொட்டணம் சொல்லி கண்டிக்கின்ற புத்தி உண்டு. தரம் வீர் அந்த வேலையைச் செய்யாமல் ஏன் மாற்று வழிக்குச் செல்லக் கூடாது.

**அதாவது அவர் என்ன சொல்கிறார் என்றால், பார்ப்பனியத்தைப் பற்றி பேசுவதை தலித்துகள் நிறுத்திக் கொள்ள வேண்டும்; பார்ப்பனர்களைப் பற்றி அவர்கள் கவலைப்படாமல் தங்கள் நலனைப் பற்றி சிந்திக்கட்டும் என்கிறார்!**

ஓர் இயக்கத்தில் எல்லாவிதப் பார்வையும் கொண்ட கருத்துகள் இருக்கின்றன. காரணம், மக்கள் பலவிதமாக சிந்திக்கிறார்கள். ஆனால், ஓர் இயக்கத்தை விட்டு விலகிச் செல்லும் கருத்தை இயக்கங்களின் பொதுக் கருத்தாக ஏற்க முடியாது. கற்பனையின் உச்சாணிக் கொம்பைப் பிடித்துக் கொண்டிருக்கின்றவர்கள்தான், இன்றைய உலகமயமாக்கலின் போக்கில், அம்பேத்கரின் சிந்தனைகள் நீர்த்துப் போய்விட்டதென்று கேள்விக்குட்படுத்துகின்றார்கள். அப்படிப் பார்த்தால் புத்தர், கிறிஸ்து, முகம்மது எல்லோருமே பழங்காலத்தைச் சார்ந்தவர்கள்தான். ஒரு காலகட்டத்தில் பிறந்து இவர்களும் இறக்க வேண்டியிருந்தது. அதற்காக அவர்களுடைய சிந்தனைகளும் செத்துவிட்டது என்று சொல்ல முடியுமா? அம்பேத்கரின் சிந்தனைகள் இன்றைய காலத்துக்கும் பொருந்தக் கூடியவை.



படிப்பகம்

www.padippakam.com

சாதி, அமைப்பு ஒழியும் வரை, அவருடைய கருத்துகள் பயனுள்ள தாகவே இருக்கும். அவரின் கருத்து ஒரு தனி மனிதருடைய கருத்தாக இருந்திருந்தால், அது என்றைக்கோ மறைந்து போயிருக்கும். அம்பேத்கரின் கருத்துகள் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட ஒவ்வொரு மனிதரின் கருத்தாகும். சாதியப் படிநிலை இருக்கும் வரை ஏற்றத்தாழ்வுகள் இருக்கும் வரை, இக்கருத்து வலுவானதாக இருக்கும். இது தொடரும் வரை பலவிதமான கருத்துகள், பல விதமான பார்வையில் வளர்ந்து கொண்டேயிருக்கும். அம்பேத்கரின் கருத்து ஒட்டுமொத்த தலித் சமூகத்தின் எழுத்தாகவும், வெளியீடாகவும் இருக்கின்றது. அம்பேத்கருடைய சிந்தனையின் தாக்கத்தால் தலித் இலக்கியம் வெளியாகிக் கொண்டேயிருக்கின்றது. கவிதைத் தொகுப்புகள், நாவல்கள், விமர்சனங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கூடிக்கொண்டே போகின்றதே தவிர எதுவும் கழித்துக் கட்டப்படவில்லை. பாதை நெடுகிலும் பல கருத்துகள், எழுத்துகள் காலப்போக்கில் வந்து கொண்டேயிருக்கும். அம்பேத்கரின் கருத்துகள் என்றைக்குமே முடிவு பெறாது.

**இத்தகைய மாற்றம் எப்படி தலித் இலக்கியத்தைப் பாதித்துள்ளது?**

தலித் இலக்கியத்தை தலித்துகள்தான் உருவாக்கினார்கள் என்பது உண்மை. ஆனால், அதை ஆதரித்து வளர்ச்சியை நோக்கித் தள்ளியவர்கள் வர்ணாசிரமத்தினர். ஒரு காலத்தில் வர்ணாசிரமத்தினர் தலித் இலக்கியங்களை அச்சிட்டு வெளியிட மறுத்தனர். ஆனால் தலித்துகள் தாங்களாகவே எழுதி, சொந்த அச்சகங்களையும், வெளியீட்டகங்களையும் ஏற்படுத்தி, தங்களுக்கான இதழ்கள், பத்திரிகைகளை வெளியிட்டுத் தங்களின் அடையாளத்தை மீட்டுருவாக்கிய நிகழ்வு, வர்ணாசிரமத்தினரின் கவனத்தை திசை திருப்பியது. நாம் அவர்களுடன் இணைந்த ஒரு பகுதியினராக இருக்கும்போது, ஆதிக்கச் சாதியினர் நம்மைக் கண்டுகொள்வதில்லை. இது, இந்தியாவில் உள்ள ஒரு வித்தியாசமான குணாம்சம். அவர்களை விட்டு வெளியே வந்த பிறகுதான் நம்மைப் பற்றி ஊன்றிக் கவனிக்கிறார்கள்.

இன்றைக்கு தலித் இலக்கியம் தனக்கென்று ஒரு தனி அடையாளத்தை உருவாக்கியுள்ளது. தலித் அல்லாத விமர்சகர்களும், வெளியீட்டாளர்களும், வாசகர்களும் தற்போது தலித் அடையாளத்தை ஏற்பதில் முன்னணி வகித்து வருகிறார்கள். தலித் இலக்கியத்தைக் கொண்டு வருவதிலும் தன்முனைப்புக் காட்டி வருகிறார்கள். ஏனென்றால் பாரம்பரியத்தில் வர்ணாசிரம இலக்கியம் உண்மையற்றதாகவும், கற்பனையானதாகவுமே இருந்தது. புராண காலத்திலிருந்து இன்று வரை அவர்களுக்குப் படிக்கக் கிடைத்ததெல்லாம் வெறும் கற்பனைகளும், புதிர்களும்தான். ஒரு பாமர மனிதனின் உண்மையான முகம் இலக்கியத்தில் வெளிப்பட்டதில்லை. தலித் இலக்கிய எழுச்சிக்குப் பிறகு தலித்துகளின் துயரம், போராட்டம், உரிமைகளைக் கொண்ட ஒரு புது மனிதரை வாசகர்கள் சந்திக்கிறார்கள். எனவேதான் எல்லோரும் இதை ஆதரித்து ஏற்றார்கள். முற்போக்குச் சிந்தனை கொண்ட வர்ணாசிரமவாதிகளின் ஆதரவால் தலித் இலக்கியம் இன்னும் வளர்ந்தது. அவர்கள் மட்டும் தலித் இலக்கியத்தை ஏற்காமல் இருந்திருந்தால், இந்த அளவுக்கு தலித் இலக்கியம் வளர்ந்திருக்க முடியாது.

**நீங்கள் தலித் என்கிற ஒரு மனிதரைப் பற்றிப் பேசுகிறீர்கள். நான் சொல்வது 40 ஆண்டுகளுக்கு முன்பு தலித் மக்கள் எப்படி இருந்தார்களோ, அதே போலத்தானே இன்றைக்கும் இருக்கிறார்கள். அப்புறம் எப்படி இதை மாற்றம் என்று சொல்கிறீர்கள்?**

நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. 40 ஆண்டுகளுக்கு முன்பு தலித்துகள் தங்கள் கிராமத்திற்கு எதிராகப் போராட முடியாமல் இருந்தார்கள். அன்றைய சமூக அமைப்புக்கு கட்டுப்பட்டுக் கிடந்தார்கள். ஆனால், இன்றைக்கு தலித்துகள் கிராமங்களில் இருந்தாலும்கூட, தங்கள் பிரச்சனைகளுக்காக நடைபெறும் போராட்டங்களுக்காக குரல் கொடுக்கின்றார்கள். அநீதிக்கு எதிராகப் போராளிகளிடம் ஓர் இயக்க குணம் உருவாகியுள்ளது. பிரச்சனை அன்றும் இருந்தது, இன்றைக்கும் இருக்கின்றது. அநீதிக்கு எதிராக அன்றைக்குப் போராட முடியவில்லை. ஆனால், இன்றைக்கு அநீதி நடக்கிறது என்பதை உணர்வதோடு மட்டுமல்லாமல் அதற்கெதிராகப் போராடவும் தயாராகி வருகிறார்கள். தங்கள் மீதான அடக்குமுறைகளை நன்கு உணர்ந்திருக்கின்றார்கள்.

**அர்ஜுன் டாங்ளேயின் ஆங்கிலத் தொகுப்பான 'நஞ்சுள்ள ரொட்டி'யில் வருகின்ற பெரும்பாலான கதைகளும், நிகழ்வுகளும், தன் வரலாறும் கிராமங்களின் வாழ்க்கையைப் பற்றியது. சிறுவயதில் பேசப்படும் பல நினைவுக் கதைகளில் எழுத்தாளர்கள் தாங்கள் எப்படி பலவீனமாக ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தார்கள் என்பதை விவாதிக்கின்றார்கள். மிக மோசமாக நடத்தப்பட்டும் அதற்கெதிராக ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தார்கள். டாங்ளேயின் 'நஞ்சுள்ள ரொட்டி' இன்றைக்குப் பல்கலைக் கழகங்களில் இலக்கியப் பாடமாக்கப்பட்டுள்ளது. டொராண்டோவில் உள்ள யார்க் பல்கலைக் கழகத்தில் நான்கூட பாடமாக நடத்தியுள்ளேன். அப்படி இருக்கும்போது இத்தொகுப்பில் கூறப்பட்டுள்ள தலித்துகளின் வாழ்வும், நினைவுகளும் இன்றைக்கு சரியில்லை என்பீர்களா? அல்லது அப்படி ஒன்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது இல்லை என்பீர்களா?**

அப்படியல்ல. தலித்துகளின் உள்ளத்திலும், மனதிலும்தான் இந்த மாற்றம் வந்துள்ளது. சமூக அமைப்பு முறையில் அல்ல. கிராமங்களும் அதைச் சுற்றியிருக்கின்ற சேரிகளும், காலனி வீடுகளும் அப்படியேதான் இருக்கின்றன. தலித்துகள் ஒரு சொட்டு தண்ணீருக்காக இன்றும் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு பிரச்சனைக்கும் போராட்டங்கள் நடக்கின்றன. முன்பெல்லாம் போராட்டம் தீண்டத்தகாதவன் என்பதை மய்யமாகக் கொண்டிருந்தது. ஆனால், இன்று அதற்கு அரசியல் சாயம் பூசப்பட்டுள்ளது. இன்று இரண்டு எதிரிகள் மோதுகின்றனர். முன்பு ஒரு கிராமம் ஒரு தனி மனிதரைத் தாக்கியது. 'பிறப்பறியாதவன் பெரிய மாற்ற அலையைக் கொண்டு வருகிறான். அவனை அடக்கி விட்டால் எல்லோரும் அடங்கி விடுவார்கள்.' ஆனால் இன்று ஒரு தனி மனிதன் அழிக்கப்படுவதில்லை. சேரிகளே எரிக்கப்படுகின்றன. ஒரு சமூகமே படுகொலை செய்யப்படுகின்றது. இதன்

**ஓர் இலக்கியம் என்பது தொலை நோக்குடையதாக இருக்க வேண்டும் என்றால், பாமர மக்களை முன்நோக்கி அழைத்துச் சொல்லக் கூடியதாக இருக்க வேண்டும். இன்றையச் சூழலில் தங்களின் நிலை என்னவென்று உணரச் செய்ய வேண்டும். இந்தச் செயல்பாடு நடக்காவிட்டால், தலித் இலக்கியம் தேக்க நிலையை அடையும்.**



படிப்பகம்

www.padippakam.com

அர்த்தம் என்னவென்றால், புரட்சிக்கனல் ஒரு தனி மனிதரின் உள்ளத்தில் இருந்து பீறிட்டெழுந்தது. ஆனால், இன்று ஒரு சமூகமே பற்றி எரிகின்றது. வர்ணாசிரமத் தாருக்கும், தலித்துகளுக்கும் இடையே நடக்கும் மாபெரும் போர் இது.

**சரி. அப்படியானால் எழுத்தில் என்ன பாதிப்பு ஏற்பட்டுள்ளது?**

மாபெரும் போர் எழுத்தின் மேல் நிச்சயம் ஒரு பாதிப்பை ஏற்படுத்தும். 40 ஆண்டுகளுக்கு முன்பு எழுதத் தொடங்கியவர்களின் வர்க்கம், இன்று முடிவுக்கு வந்து கொண்டிருக்கின்றது. அவர்கள் இப்போது எழுதுவதில்லை. அந்தக் காலத்து மக்களின் இலக்கியம் மிகப் பழைய நினைவுகளையும், காலத்தையும், வரலாற்றுச் சூழலையும் கொண்டிருந்தது. இன்றைய தலித் இலக்கியம் நிகழ் காலத்தையும், எதிர்காலத்தையும் பற்றி சிந்திக்க வேண்டும். ஆனால், தலித் எழுத்தாளர்கள் இன்று நடக்கும் அநீதிகளைப் பற்றி சிந்திப்பதில்லை. காரணம், இனி மேல் நிகழப்போவது என்ன என்று தெரியாமல் இருக்கிறார்கள். இது குறித்து சிந்திக்க தொலைநோக்குப் பார்வையுடைய தலித் உருவாக வேண்டும். கடந்த கால வரலாற்றை எந்தப் பாமர மனிதனும் எழுதலாம். ''நான் பிறந்தேன், வர்ணாசிரமத்தினர் தாக்கினார்கள், நான் பிச்சைக்காரனானேன்'' என்று எழுதுவதில் கெட்டிக்காரத்தனம் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படி எழுதுவது பெரிய இலக்கியமும் அல்ல. இது வேறொரு வகையான அனுபவப் பதிவாக இருப்பதால் வாசகர்கள் விரும்பிப் படிக்கின்றனர். ஆனால், ஓர் இலக்கியம் என்பது தொலைநோக்குடையதாக இருக்க வேண்டும் என்றால், பாமர மக்களை முன் நோக்கி அழைத்துச் சொல்லக் கூடியதாக இருக்க வேண்டும். இன்றையச் சூழலில் தங்களின் நிலை என்ன என்று உணரச் செய்ய வேண்டும். இந்த செயல்பாடு நடக்காவிட்டால், தலித் இலக்கியம் தேக்க நிலையை அடையும். அதற்காக நான் பெரிதும் கவலைப்படுகிறேன்.

**அம்பேத்கரின் சிந்தனைகள் இன்றைய காலத்துக்கும் பொருந்தக் கூடியவை. சாதி அமைப்பு ஒழியும்வரை, அவருடைய கருத்துகள் பயனுள்ளதாகவே இருக்கும். அவருடைய கருத்து, ஒரு தனி மனிதருடைய கருத்தாக இருந்திருந்தால் என்றைக்கோ மறைந்து போயிருக்கும். அம்பேத்கரின் கருத்துகள் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட ஒவ்வொரு மனிதருடைய கருத்தாகும்.**

**நீங்கள் ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?**

அப்படி நினைப்பதற்குக் காரணம் உண்டு. தலித் இயக்கங்களில் இதுவரை தலித்துகள்தான் போராளிகளாகவும், உறுப்பினர்களாகவும் இருந்தார்கள். உருப்படியான வேலைகளைத் தொடங்கினார்கள். இயக்கத்தில் இருந்த தலைவர்கள், வரலாற்றில் தலித்துகளின் பிரச்சனைகள் எப்படி இருந்தன என்பதை விளக்கிக் கொண்டே இருந்தார்கள். அவர்களுடைய பேச்சில் வேகம் இருந்தது. மநுஸ்மிருதியை கடுமையாக விமர்சித்தார்கள். மகான்களின் காலம் என்று சொல்லப்படுகின்ற மகாபாரதம் அல்லது பகவான் ராமச்சந்திரன் காலத்தைய சமூக அமைப்பைச் சாடினார்கள். இதையேதான் தற்போதைய அநீதிகளுக்கும் விளக்கமாக



இன்னும் சொல்லப்பட்டு வருகின்றன. ''ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நம் மீது சுமத்தப்பட்ட கொடுமைகளை சந்தித்து வருகின்றோம்'' என்று சொல்லிக் கொண்டிருப்பது என்றைக்குதான் முடிவு பெறும்? இன்னும் எத்தனை நாளுக்குத்தான் இதையே சொல்லிக் கொண்டிருக்க முடியும்? இன்றைக்கு சமகாலத்தில் உலகத்தில் நடைபெறுகின்ற பிரச்சனைகளோடு, மக்கள் இயக்கங்களோடு நம்முடைய பிரச்சனைகள், அநீதியான செயல்கள் விளக்கப்பட்டிருந்தால் - நாம் இன்னும் இந்த நிலைக்கு வந்திருக்க மாட்டோம். அதற்குக் காரணம் நம்முடைய இயக்கத் தலைவர்கள், போராளிகள் ஆகியோரின் சிந்தனைகளும், கருத்துகளும், விளக்கங்களும் ஒரு குறுகிய கண்ணோட்டம் உடையதாகப் பார்க்கிறேன்.

ஏனென்றால், தலித்துகளுக்கு எதிராக வன்கொடுமைகள் நிகழ்ந்தால், ஒரு தலித்தின் கண் பிடுங்கப்பட்டால், சேரிகள் எரிக்கப்பட்டால் மட்டுமே இவர்கள் போராடுகிறார்கள். காஷ்மீரில் தொடர்ந்து கொண்டிருக்கும் வன்முறைகளைப் பற்றியோ அல்லது ஹர்சத் மேத்தாவின் ஊழலைப் பற்றியோ அல்லது பஞ்சாபில் நடந்து கொண்டிருக்கின்ற பிரச்சனைகளைப் பற்றியோ இவர்கள் கவலைப்படுவதில்லை, அதைக் குறித்துச் சிந்திப்பதும் இல்லை. உலகமயமாக்கல் நம்மை நெருக்கி வருகின்றது. அது நமது இலக்கியத்தையும், இயக்கத்தையும், சமூகத்தையும் எவ்வாறு பாதிக்கின்றது என்பதைப் பற்றி சிந்திப்பதில்லை. இன்றைய கல்விமுறையால் எவ்வாறு பின் தள்ளப்பட்டு வருகின்றோம்; பொதுத் துறை நிறுவனங்களிலும், வேலைவாய்ப்புகளிலும் எப்படி சூட்சுமமாக ஏமாற்றப்பட்டு வருகிறோம் என்பதை அலசி ஆராய்வதில்லை. இவ்வாறு நாம் செயல்படாமல், சிந்திக்காமல் இருப்பதற்குக் காரணம் - நம்முடைய குறுகிய சிந்தனைதான் நம்மை இந்த அளவுக்கு கொண்டு வந்திருப்பதாக நினைக்கிறேன்.

**அது இருக்கட்டும். எப்படி இந்த குறுகிய சிந்தனை எழுந்ததாகப் பார்க்கிறீர்கள்?**

நான் இளைஞனாக இருந்தபோது என் சிந்தனை கூர்மைப்பட்டது. சிந்தனை வளர்ச்சியும் தேவைப்பட்டது. நம்முடைய பிரச்சனைகளை எதிர்கொண்டு போராடும் போது கவனச் சிதறல் இல்லை. ஒரு தேவதையையே என் முன் கொண்டு வந்து நிறுத்தினாலும், என் சமூகத்துப் பெண்கள் பட்ட வேதனைகளும், அநீதிகளின் கொடுமைகளும்தான் என் கண்முன் வருகின்றன. தலித் பெண்கள் மீதான அநீதிகள் அதிகரித்தன. துன்பங்களால், வேதனைகளால் நம்மைப் பெற்ற பெற்றோர்களும் நசுக்கப்பட்டார்கள். அந்த நேரத்தில் நம் மீதான துன்பங்கள் அனைத்தும் புராணங்களாலும், இந்து மதக் கருத்துகளாலும் வந்தது என நினைத்தோம். எனவே, இந்து அடித்தளத்தைத் தகர்க்க வேண்டுமெனத் திட்டமிட்டோம். அன்றைக்கு நமது தேவை பல்லாயிரம் ஆண்டுகளாகப் புனிதம் எனப் போற்றி வந்த இந்து பாரம்பரியத்தைத் தீட்டாக்கி, அதன் புதிர்களைக் கண்டித்து, இந்து மதம் நம்முடைய பாரம்பரிய மதம் அல்ல என்று முழக்கமிடுவது அன்றைய வேலையாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில் அப்படி ஒரு முயற்சி தேவைப்



படிப்பகம்

www.padippakam.com

புதுச்சேரி அரசு



பாரதப் பிரதமர் மன்மோகன் சிங்



திருமதி சோனியா காந்தி
தலைவி, தேசிய ஆலோசனைக் குழு



ம.தெ.ரா. இராமச்சந்திரன்
சட்டப்பேரவைத் தலைவர்



மு. சந்திரகாசு
தொழில்கள் மற்றும் நல அமைச்சர்



இ. வல்சராஜ்
நலவழி அமைச்சர்



ஆ. ஏழுமலை
உள்ளாட்சி அமைச்சர்



ஆ. நமச்சிவாயம்
வேளாண் அமைச்சர்



ஏ.வி. சுப்ரமணியன்
சட்டப்பேரவைத் துணைத் தலைவர்



லெப். ஜெனரல் (ஓய்வு) எம்.எம். லகேரா
துணைநிலை ஆளுநர்



ந. ரங்கசாமி
முதலமைச்சர்



## மகளிர் நலன்

- பெண்கள் பெயரில் பதிவு செய்யப்படும் அசையாச் சொத்துக்கள் மீதான முத்திரைத்தாள் கட்டணத்தில் 50 விழுக்காடு சலுகை.
- மகளிர் நலன் காக்க புதுவை மகளிர் ஆணையம் தொடக்கம்.
- அரசு மருத்துவமனை, மகப்பேறு மருத்துவமனை பொதுப்பிரிவில் பிறக்கும் ஆண், பெண் குழந்தைகளுக்கு இலவச ஆடைகள், துண்டு மற்றும் சோப்பு வழங்கும் திட்டம்.
- சுமார் ரூ. 43 கோடி செலவில் மகளிர் மற்றும் குழந்தைகள் மருத்துவமனை.
- முதிர் கன்னிகள், அரவாணிகள், கணவரால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள் ஆகியோருக்கு மாதம் ரூ. 300/- நிதியுதவி வழங்கும் புதிய திட்டம்.
- வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்பு, அதற்குரிய சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் அடுப்பு வழங்கும் திட்டம்.
- கிராமப்புறப் பெண்களின் புகார்களை விசாரிப்பதற்காக வில்லியனூர் மற்றும் காரைக்காலில் அனைத்து மகளிர் காவல் நிலையம்.
- பெண்களின் புகார்களை விசாரிப்பதற்கென்று ஒவ்வொரு காவல் நிலையத்திலும் தனிப்பிரிவு (Mahila Desk)
- மாங்கல்யத்திற்கு மானியம் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ. 1,000 இல் இருந்து ரூ. 2,000—ஆக உயர்வு.
- விதவை மறுமணத்திற்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை ரூ. 10,000 இல் இருந்து ரூ. 15,000—ஆக உயர்வு.

## மீனவர் நலன்

- ஆண்டுதோறும் 15,000 கடல் மீனவக் குடும்பங்களுக்கு மீன்பிடித் தடைக்காலங்களில் நிவாரண உதவியாகத் தலா 90 கிலோ அரிசியும் ரூ. 300 பணமும் வழங்கப்பட்டன. தற்போது இது 100 கிலோ அரிசியாகவும் ரூ. 500 ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.
- காரைக்காலில் ரூ. 34.08 கோடி செலவில் புதிய மீன்பிடித் துறைமுகம்.
- மாகிப் பகுதியில் ரூ. 22.60 கோடி செலவில் சிறிய மீன்பிடித் துறைமுகம்.
- ஏனாம் பகுதியில் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க ஆரம்பக்கட்டப் பணிகள் தொடக்கம்.
- 60 வயது நிரம்பிய மீனவர்கள் மாதம் ரூ. 500 பெறும் வகையில் புதிய ஓய்வூதியத் திட்டம்.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்காக பாதுகாப்பான நிரந்தர வீடுகள் கட்ட அரசு நடவடிக்கை.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட 6 கிராமங்களில் பள்ளிகள் மற்றும் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட உள்ளன.
- சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மறுசீரமைக்கவும் உள்கட்டமைப்பு வசதிகளை மீட்டுருவாக்கம் செய்யவும் நடப்பு நிதியாண்டில் ரூ. 100 கோடி ஒதுக்கீடு.





## ஊனமுற்றோர் நலன்

- ஊனமுற்றோர் திருமண உதவித்தொகை ரூ. 10,000-இல் இருந்து ரூ. 20,000-ஆக உயர்வு.
- ஊனமுற்றவர்களுக்கு அளிக்கப்படும் நிதி உதவி உயர்த்தப்பட்டு கீழ்கண்டவாறு அளிக்கப்படுகிறது.
  - ☆ ஊனத்தின் தன்மை 40% - 74% வரை இருந்தால் - மாதம் ரூ. 750.
  - ☆ ஊனத்தின் தன்மை 75% - 99% வரை இருந்தால் - மாதம் ரூ. 1000.
  - ☆ ஊனத்தின் தன்மை 100% இருந்தால் - மாதம் ரூ. 1,250.
- பார்வை இழந்தோருக்கு வானொலிப்பெட்டி வழங்கும் புதிய திட்டம்.
- ஊனமுற்றவர்களுக்கு மாதம் 10 கிலோ இலவச அரிசி வழங்கும் திட்டம்.
- ஊனமுற்றவர்களின் வேலைவாய்ப்பு உச்ச வயதுவரம்பு 10 ஆண்டுகள் வரை தளர்ச்சி.
- ஊனமுற்றவர்களுக்கு கல்வி வேலைவாய்ப்பில் மூன்று விழுக்காடு இடஒதுக்கீடு.
- ஊனமுற்றவர்களின் இறுதிச் சடங்கிற்கு வழங்கப்பட்டு வந்த நிதியுதவி ரூ. 1000-ல் இருந்து ரூ. 2000-ஆக உயர்வு.
- இயந்திரம் பொருத்திய ஊனமுற்றோர் வாகனம் வழங்கும் திட்டம்.

## தொழிலாளர் நலன்

- பஞ்சாலைத் தொழிலாளர் நலன் காக்க பாரதி மற்றும் சுதேசி பஞ்சாலைகளை புதுவை அரசு ஏற்பு.
- அமைப்புசாரா தொழிலாளர் சங்கம் தொடக்கம்.
- புதுச்சேரி கட்டட மற்றும் இதர கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் உருவாக்கம்.
- கூலித்தொழிலாளர்களின் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயம்.
- கைவினைஞர்கள் மற்றும் கொத்தனார்களுக்கு குறைந்த செலவில் கட்டுமானப்பணித் தொழில்நுட்பப் பயிற்சி.
- கைத்தறி நெசவாளர்களின் வீட்டு வசதியைப் பெருக்கிட அதன் உறுப்பினர்களுக்கு மனை வாங்க ரூ. 10,000 வரை மானியம் மற்றும் ரூ. 15,000 வரை வங்கிக் கடன்.
- நெசவாளர்களின் ஆண்டு ஊதிய விகிதத்திற்கு ஏற்றவாறு மாதம் ரூ. 500 மற்றும் ரூ. 1,000 ஓய்வூதியம்.
- நெசவாளர்கள் வாங்கிய கடன்கள் ரூ. 145 இலட்சம் அளவிற்குத் தள்ளுபடி.
- கிராமப்புறங்களில் வசிக்கும் நிலமற்ற ஏழைத் தொழிலாளர்களுக்கு இலவச மனைப்பட்டா.
- இலவச மனைப்பட்டா பெற்ற பயனாளிகளுக்கு வீடு கட்ட மானியம்.



# சேவையில் நேர்மை - அர்ப்பணிப்பில் தாய்மை

No. 773 / DIP / PRA / Press / 2005 - 06 / S-59

வெளியீடு : செய்தி மற்றும் விளம்பரத் துறை, புதுச்சேரி அரசு.

படிப்பகம்

www.padippakam.com

பட்டது. அதைச் செய்தோம். அதே நேரத்தில் எதிர்காலத்தை யும் தொலைநோக்கோடு பார்க்க வேண்டிய ஒரு அவசியம் இருந்தது. ஆனால், அது திட்டமிட்டபடி நடக்கவில்லை.



இன்னொரு காரணம், தலித் இயக்க வளர்ச்சியில் பங்கேற்ற முற்போக்குச் சிந்தனையாளர்கள், இப்போது தலித் இயக்கங்களில் இல்லை. ஆரம்பக் கட்டத்தில் தலித் இயக்கம் தொடங்கிய எல்லா போராட்டங்களிலும் அவர்கள் பங்கேற்றார்கள். தலித் பிரச்சனைகளில் ஈடுபட்டு வேலை செய்தார்கள். ஏனென்றால், தலித் பிரச்சனைகளில் அன்று ஈடுபட அதிக தலித்துகள் இல்லை. ஆனால், தலித் பிரச்சனைகளால் ஈடுபட்டு வேலை செய்ய நிறைய தலைவர்களும், போராளிகளும் இருக்கின்றார்கள். தலித்துகள் மட்டுமே தங்கள் சொந்தப் போராட்டங்களை முன் நின்று நடத்துகின்றார்கள். இதில் பங்கேற்க முற்போக்குவாதிகளை அவர்கள் அழைப்பதில்லை. இதைச் செய்வதற்கு நிறைய தலித் அமைப்புகள் வந்து விட்டன.

முற்போக்குவாதிகளும் மேம்போக்கான வேலைகளையே செய்தார்கள். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஆதிவாசிகளிடம் ஊழியம் செய்யச் சென்ற கிறித்துவ அருட்தொண்டர்கள் போலவே அவர்களும் தலித்துகளிடம் நடந்து கொண்டார்கள். கிறித்துவ அருட்தொண்டர்கள் ஆதிவாசிகளைப் பார்த்து, ‘நான் உங்களை உயர்த்தவே வந்தேன்’ என்று சொல்வதைப் போல் அல்லாமல் - ‘நாங்கள் உங்களோடு இணைந்து பணிசெய்ய வருகிறோம். நீங்கள்தான் எங்கள் தலைவர்கள். நாங்கள் உங்களின் போராளிகள்’ என்று சொல்லியிருக்க வேண்டும். அதைச் செய்யாமல் அவர்கள் நமக்குத் தலைவர்களாக இருக்கவே ஆசைப்பட்டார்கள். அதனால் மீண்டும் நாம் அவர்களுக்கு வேலையாட்களாக இருக்க வேண்டியிருந்தது. சிறப்பாக உரையாற்றினார்கள். நாம் உட்கார்ந்து கேட்டுக் கொண்டிருந்தோம். நம்முடைய வாழ்க்கை அனுபவங்களைத்தான் பேசினார்கள், பேசட்டும். அதை ஏன் எங்களிடம் பேசுகிறார்கள்? அவர்களுடைய மக்களிடத்தில் அல்லவா பேசவேண்டும்? வர்ணாசிரம மக்களிடத்தில் அல்லவா தலித் பற்றிய விழிப்பு நிலையை உண்டாக்கியிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை. எனவே, முற்போக்குவாதிகளை, பாதி வேலையைச் செய்த முற்போக்குவாதிகள் என்றுதான் கருத முடியும். மீதமுள்ள பாதி வேலையை அவர்கள் செய்யாததால், தலித் ஆதரவு நிலையைப் புரிந்துகொண்ட வர்ணாசிரமவாதிகள் முற்போக்குவாதிகளை ஓரம் கட்டினார்கள். ‘தலித்துகளோடு சேர்ந்து கொண்டு நம்மைக் காட்டிக் கொடுக்கின்றார்கள்’ என்று விமர்சிக்கப்பட்டார்கள்.

இந்தச் சூழலில் அவர்கள் தங்கள் சொந்த மக்களை விட்டு நம் பக்கம் வந்ததால், தலித்துகள் அவர்களை வரவேற்றிருக்க வேண்டும். ஆனால், தலித்துகள் அவர்களை சந்தேகத்தோடு பார்த்தார்கள். இவர்கள் நம் சமூகத்தைச் சார்ந்த மக்கள் இல்லையே, அந்த சமூகத்தைச் சார்ந்தவர்களாயிற்றே; எப்படி அவர்கள் நமக்குத் தலைவர்களாக வர முடியும்? நம்முடைய முன்னேற்றத்துக்காக அவர்கள் ஏன் போராட வேண்டும்? நமக்காக அவர்கள் போராட வேண்டிய அவசியம் ஒன்றுமில்லையே! என்று கூறி, முற்போக்குவாதிகளைப் புறக்கணித்துவிட்டு ‘நாமே நமக்குத் தலைவர்களாக இருப்போம்’ என்கிற முடிவை எடுத்தார்கள். ஆக, வர்ணாசிரம மக்களாலும், தலித் மக்களாலும் புறக்கணிக்கப்பட்ட முற்போக்கு வர்ணாசிரமவாதிகள் தோல்வியைச் சந்தித்தனர். முற்போக்குச் சிந்தனையின் தோல்விக்கும், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தலை தூக்கிய பிற்போக்குச் சிந்தனையின் வளர்ச்சிக்கும் ஒரு காரணம், முற்போக்குச் சிந்தனையாளர்கள் வர்ணாசிரம மக்களிடம் தங்கள் விழிப்பு நிலையை ஏற்படுத்தாததுதான். இன்னொரு காரணம், தலித் சமூகம் முற்போக்குச் சிந்தனையாளர்களை ஏற்காதது. இதன் விளைவாக, மறுமலர்ச்சி அமைப்புகள் தலை தூக்கின. தலித் இயக்கங்களும் தங்கள் சொந்தக் காலில் நிற்கத் தயாரானார்கள்.

**நான் இந்தியில் படித்த புதிய எழுத்துகள், நடுத்தர வர்க்க தலித்தைப் பற்றியது. இதில் தலித் இலக்கியம் தொடர்பான உங்கள் கருத்து ஒத்துப் போகிறதா?**

தலித் இலக்கியம் என்பது பின்னுக்குத் தள்ளப்பட்ட, ஒடுக்கப்பட்ட, பலமற்ற மக்களின் அனுபவங்கள் மட்டுமல்ல. ஒரு தலித், அய்.ஏ.எஸ். அதிகாரியாக இருக்கலாம். அவருடைய அனுபவங்களும் இதில் இருக்கிறது. அண்மையில் ஒரு தலித் அய்.ஏ.எஸ் அதிகாரி தன்னுடைய ‘தன் வரலாற்று’ நாவலை வெளியிட்டார். நாங்கள் அதை ‘ஒரு தலித்தின் தன் வரலாறு’ என்றே பெயரிட்டோம். ஏனென்றால் ஒரு சாதாரண போராளியும், அய்.ஏ.எஸ். அதிகாரியும் இந்த சாதிய அமைப்பின் உளவியலுக்கு எதிராக நாள்தோறும் போராட வேண்டியுள்ளது. அது ஒரு போராளியின் போராட்டம்தான். ஆளுங்கட்சி அரசில் ஒரு தலித் அமைச்சராக இருந்தாலும், அதே சாதியமைப்புக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது. இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன்கூட இதற்காகப் போராட வேண்டியிருந்தது. தலித் இலக்கியத்தின் வரையறைக்குள் - ஒரு பாமர தலித்தின் போராட்டத்தையும் அல்லது இந்த நாட்டின் குடியரசுத் தலைவரின் சாதிக்கெதிரானப் போராட்டத்தையும் நாம் பார்க்க வேண்டும்.

**ஒரே மனிதர்தான் போராளியாகவும், கலைஞராகவும், கவிஞராகவும் எழுந்து நிற்கிறார். எளிய, பாமர மக்கள் இவர்களுடன் அணிவகுத்து நிற்கின்றனர். புலே, அம்பேத்கர் ஆகியோரின் சிந்தனைகளில் இருந்தும், கொள்கைகளில் இருந்தும் ஓர் இயக்கம் தடம் மாறிப் போகாமல் செய்ய வைப்பதே ஒரு எழுத்தாளரின் கடமை.**

**நீங்கள் உங்கள் எழுத்துகளில் ‘யார் தலித்’ என விளக்கியுள்ளீர்களா?**

தலித் என்பவன் தீண்டப்படாதவன். இதுதான் சரியான விளக்கம். என் எழுத்து தீண்டப்படாதவர்களுக்காகத் தான் எழுதப்படுகின்றது. தீண்டப்படாதவர்கள் தங்கள் விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். என் எழுத்துகள் அவர்களின் மனித உரிமைகளைப் பற்றிய விழிப்பு நிலையைக் கொடுக்கின்றன. இதுதான் எங்கள் இயக்கப் போராட்டங்களுக்கான எல்லை, சூழ்நிலை. ஆனால், இந்த நோக்கம் குறுகிய எல்லைக்குள் மட்டும் இருந்தால் அது இலக்கியத்திற்குப் பயன் அளிக்காது. தாழ்த்தப்பட்ட அனைத்து மக்களையும் இதில் சேர்க்க வேண்டும். இந்த அகண்ட சமூகத்தின் போராட்டங்களில் அனைவரும் பங்கேற்கின்ற ஒரு



படிப்பகம்

www.padippakam.com

**ஒரு சாதாரண தலித் போராளியும், ஒரு தலித் அய்.ஏ.எஸ். அதிகாரியும் இந்த சாதிய அமைப்பின் உளவியலுக்கு எதிராக நாள்தோறும் போராட வேண்டியுள்ளது. அது ஒரு போராளியின் போராட்டம்தான். ஆளுங்கட்சி அரசில் ஒரு தலித் அமைச்சராக இருந்தாலும், அதே சாதியமைப்புக்கு எதிராகப் போராட வேண்டியுள்ளது.**

முழக்கத்தை நாம் பயன்படுத்த வேண்டும். அவர்கள் இயக்கக் கட்டமைப்பின் பங்காளர்களாக மாற வேண்டும். நமது எழுத்துக்கு வாசகர்கள் அவர்கள்தான். இவர்களுடைய விழிப்பு நிலையைத்தான் நாம் ஊட்டி வருகின்றோம். பங்காளருக்கான ஒரு தனி முழக்கத்தைக் கண்டுபிடிக்காவிட்டால் நாம் தனிமைப் படுத்தப்படுவோம். நமது போராட்டங்கள் சிறு, சிறு குழுக்களாக உடையும். பிரித்தாளும் வகையில் ஒவ்வொருவரும் தனித்தனியாகக் களையெடுக்கப்பட்டுத் தோற்கடிக்கப்படுவார்கள். எனவே, உரிமை மறுக்கப்பட்ட - சுரண்டப்பட்ட மக்கள் எங்கு இருந்தாலும், எந்த நாடாக இருந்தாலும், எந்தச் சமூகமாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு மொழி நடையில் எழுத வேண்டும். அவர்கள் வர்ணா சிரமத்தாராக, வெள்ளையராக, வெள்ளையர் அல்லாதவராக இருந்தாலும் ஒடுக்கப்படும்போதும், சுரண்டப்படும் போதும் அவர்களும் நம்மில் ஒருவர்தான். இந்தக் கருத்துகளை முன்வைக்க வேண்டியது, தலித் வரையறைக்கு அவசியமான தாகும். அப்போதுதான் தலித் தோழமை உறுதிப்படும்.

**உங்களுடைய கருத்துக்கு இன்னொரு பக்கமும் இருக்கின்றது. அதாவது, தலித் இலக்கியம் ஒடுக்கப்பட்ட மக்களின் இலக்கியம் என்றால், தலித்துகளின் பிரச்சனை பொருளாதாரச் சுரண்டல் கொண்ட சமூகத்தின் பிரச்சனை என்றால், உங்களுடைய கருத்துக்கும், இதே நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்ற மார்க்சியத்துக்கும் என்ன வேறுபாடு இருப்பதாகப் பார்க்கிறீர்கள். மார்க்சியமும் பொருளாதாரச் சுரண்டல் கொண்ட சமூகத்தின் பிரச்சனைகளைத்தானே பேசுகின்றது?**

மார்க்சியம் சுரண்டப்பட்ட மக்களின் பிரச்சனைகளைத்தான் பேசுகின்றது. உண்மைதான். ஆனால், இந்தியாவைப் பொறுத்தவரை, மார்க்சியம் வர்ணாசிரமத்தாரின் கையில்தான் உள்ளது. அதாவது பார்ப்பனர்கள் தொடங்கி வைத்த போராட்டங்கள் - ஒரு முதலாளிக்கும், ஏழைக்கும் இடையில்தான். இந்திய மார்க்சிஸ்டுகள் மீதுள்ள வருந்தத்தக்க விசயம் என்னவென்றால், அவர்கள் இங்கே உள்ள சாதியப் பிரச்சனைகளைப் புரிந்து கொள்ள எந்த முயற்சியும் செய்யவில்லை. இந்தியச் சூழலில் சாதிய அமைப்புக்கும் நிலப்பிரபுத்துவ அடிமைத்தனத்துக்கும் எதிராகப் போராட வேண்டிய அவசியத்தை மார்க்சியம் ஏற்கவில்லை. பொருளாதார அமைப்புக்கு எதிராகப் போராடினோம். ஒரு ஆலையில் நடக்கும் பிரச்சனைக்காக, தலித்துகளும், வர்ணாசிரமத்தினரும் இணைந்து போராடினார்கள்; வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். பொருளாதாரப் பிரச்சனைகளுக்காக, ஊதிய உயர்வுக்காக, ஆண்டு சம்பளத்துக்காக எல்லோரும் ஒன்றாகக் கூடி ஆலையை மூடச் செய்கின்றார்கள். ஆலைக்கு ஒன்றாகப் போராடுபவர்கள், ஆலையை விட்டு வெளியே வந்ததும் - தங்கள், தங்கள் சாதிக் குடியிருப்புகளை நோக்கிச் சென்று விடுகின்றார்கள். சாதிய மோதல் நடக்கும் போது இதே தொழிலாளர்கள், ஒருவரை ஒருவர் கல்லால் அடித்துத் தாக்கிக் கொள்கிறார்கள். மார்க்சிஸ்டுகள் தொழிலாளர்களை ஆலைக்குள் ஒன்றுபடுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால், அதே தொழிலாளர்கள் தாங்கள் வாழும் இடங்களில் ஒன்றுபடுத்தப்படவில்லை. தொழிலாளர்கள், ஆலையில் மட்டும் சமத்துவ எண்ணம் கொண்டவர்களாக இருந்தால் போதாது; வாழும் இடங்களிலும் சமத்துவத்துடன் வாழ வேண்டும். எப்படி நான் தலித்துகளின் பிரச்சனைகளை அதைவிடப் பெரிதான பொருளாதாரச் சுரண்டல் பிரச்சனையோடு இணைத்துப் பார்க்கிறேனோ, அதுபோல மார்க்சியவாதிகளும் என்னுடைய பிரச்சனையைப் பார்த்திருக்க வேண்டும். ஆலைக்குள் போராடியவர்கள், மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளில் சமத்துவத்துக்காகப் போராடியிருக்க வேண்டும். ஆனால், இங்கு அப்படி நடக்கவில்லை. ஆலைக்குள்ளே போராடியவர்கள், ஆலையை விட்டு வெளியே வந்ததும் ஒருவருக்கு ஒருவர் எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

**அப்படியானால் மார்க்சிஸ்டுகள், ஆலையிலும் மக்கள் குடியிருப்புப் பகுதிகளிலும் போராடியிருந்தால், நாம் கூறுகின்ற மார்க்சியத்துக்கும், அம்பேத்கரியத்துக்கும் பெரிய அளவில் வேறுபாடு வந்திருக்காது என்கிறீர்களா?**

நிச்சயம் வந்திருக்காது. இன்னொன்று, ஏன் வேறுபாடு இருக்க வேண்டும்? இன்றைக்கும்கூட மார்க்சியத்தை நாம் எதிரிகளின் கொள்கையாகப் பார்ப்பதில்லை. அம்பேத்கரியத்தைப் போல, மார்க்சியமும் சமூக ஏற்றத்தாழ்வை எதிர்த்துப் போராடுகின்றது. மார்க்சியமும் நம்முடைய தோழமைப் பாசறையின் சிந்தனைதான். கறுப்பர்கள் மீது வெள்ளையர்கள் நிகழ்த்துகின்ற இனவெறிப் பாகுபாட்டையும் மார்க்சியம் எதிர்க்கின்றது. உலகம் முழுவதிலும் ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகப் போராடுகின்ற கொள்கைகள் எதுவாக இருந்தாலும் அது அம்பேத்கரின் சிந்தனைதான். அது ஆலைக்குள் வெளிப்படும்போது மார்க்சியமாகவும், வெள்ளை இனப் பாகுபாட்டுக்கு எதிராகப் போராடும்போது, கறுப்பர் புரட்சியாகவும் பொருள்படும். இதற்கான விளக்கங்கள் வேண்டுமானால் மாறுபடலாம். அதன் உள்ளீடு அனைத்தும் ஒன்றுதான். உலகில் அடிமை எங்கேயாவது இருந்தால், அவர் நம்மில் ஒருவர் என்கிற உணர்வு மேலோங்கி எழ வேண்டும். இங்குதான் என்னுடைய பொறுப்பும், பங்களிப்பும் வெளிப்படுகின்றது. இதுதான் தலித் எழுத்தாளர்களுடைய, தலித் இலக்கியத்தினுடைய முழக்கமாகவும் இருக்கின்றது.

**நீங்கள் தலித் கவிதைத் தொகுப்பு ஒன்றை எழுதியிருக்கிறீர்களே! அவை எப்போது எழுதப்பட்டன?**

அது ரொம்பவும் பழசு. 20 ஆண்டுகளுக்கு முன்பு எழுதினேன். ஆனால், அதில் உள்ள தலித் காதல் கவிதைகள் நடுத்தர வர்க்கத்தின் காதல் கவிதைகளைவிட வேறுபட்டது. ஏனென்றால், தலித் எழுத்தாளர்களின் காதல் கவிதைகள் தனித்தன்மை வாய்ந்தவை என்பதற்காக அப்படிச் சொல்கிறேன்.

**இன்னும் சற்று விரிவாகச் சொல்லுங்கள்.**

என்னுடைய கவிதைகளில் இரண்டு விதமான காதலியைப் பார்க்கலாம். ஒரு காதலி தலித் பெண். அவள் தன் காதலுடன்



படிப்பகம்

www.padippakam.com



கூடவே தோள் கொடுத்து நிற்கின்ற பெண் போராளி. தேவை ஏற்படும் என்றால் அவனுடன் களத்தில் சாகவும் தயாரானவள். அவளுடைய முகம் நிலாவைப் போன்றதல்ல; அவளுடைய கன்னங்கள் சொக்க வைக்கும் சொர்க்கம் அல்ல. அவளைப் போலவே அவளின் காதலும் மிக எளிமையானது. நன்றாக உழைப்பாள். அவள் ஒரு தொழிலாளி. நன்றாகப் போராடுவாள். போராட்டங்கள் வரும்போது அவனுக்கு உற்சாகத்துடன் தெம்பு கொடுப்பாள். இது ஒரு வகை. இன்னொரு கவிதையில் வேறு விதமான காதலி. அவள் தலித்தை காதலிப்பாள். அவனுடைய சாதி என்ன என்று தெரிந்ததும் அவனை உதறிவிடுவாள். இவள் ஒரு வர்ணாசிரமக் காதலி. இப்படியாக, தலித் இளைஞர்கள் இரண்டு விதமான காதலைச் சந்திக்கிறார்கள். முதல் காதலில் தங்கள் சொந்த சமூகத்துப் பெண்களிடம் சமத்துவ அடிப்படையில் ஏற்பட்ட ஓர் உண்மையான காதல். இரண்டாவது காதல், வர்ணாசிரமப் பெண்களிடம் காணப்படும் பண்பு வெளிப்படுத்தும் காதல். அவன் யாரெனத் தெரிந்ததும் 'நீ ஒரு தீண்டத்தகாதவன், நான் உன்னை விட்டுப் பிரிந்து விடுகிறேன்' என்கிறாள். தலித் பெண்கள் காணுகின்ற காதல் முற்போக்கானது. அதில் ஊடலும், பிரிவும் இல்லை. ஆனால், வர்ணாசிரமப் பெண்களின் காதல், உறவுகளை முறிக்கின்றது. இவற்றைப் பார்க்கும்போது, வர்ணாசிரமப் பெண்களிடம் இருக்கின்ற கசப்பான உணர்வுகளை அறிய முடிகின்றது.

**பெண்களும் காதல் கவிதைகள் எழுதுகின்றார்களே...**

பெண்களும் நிறைய காதல் கவிதைகள் எழுதி இருக்கின்றார்கள். அவர்களின் கவிதையிலும் காதலன் சமத்துவப் பார்வை கொண்ட ஒரு போராளியாக வெளிப்படுகிறான். தலித் காதல் கவிதைகள் - காதலனையும், காதலியையும் வெறுமனே உடலின்பப் பொம்மைகளாகக் காட்டுவதில்லை. காதலர்கள் இருவரும் இயக்கப் போராளிகள். இருவருமே களத்தில் போராடக் கூடியவர்கள். அந்தப்புரத்திலும், கடற்கரையிலும் காற்றுக்கு உலாவும் காதலர்களின் கவிதை வரிகள் அவர்களுடையதல்ல. 'என்னோடு வா! நீயும் அமைப்பைக் கட்டியெழுப்பு. நான் உன்னோடு இருக்கிறேன். வா! நீயும் அமைப்பைக் கட்டியெழுப்பு. நான் உன்னோடு இருக்கிறேன். வா! நாம் இணைந்து போராடுவோம்' என அழைப்பு விடுக்கின்றது. அவர்கள் உட்கார்ந்து பேசினால் சமூகத்தில் நடக்கும் அநீதிகளையும், அடக்குமுறைகளையும் பற்றிப் பேசுகிறார்கள். இதுதான் தலித் காதல் கவிதையின் சிறப்பு.

**இன்னும் இரண்டு முக்கிய கேள்விகள். ஒன்று, பல்கலைக் கழகப் பேராசிரியர் ஒருவர் தன்னுடைய கட்டுரை ஒன்றில் சில விவாதங்களை முன்வைக்கிறார். அதாவது, தலித்துகள் தங்களுடைய சொந்த வாழ்க்கை அனுபவங்களை எழுதும்போது கற்பனையுடன்கூடிய காதல் காவியமாக எழுதுகிறார்கள். அதில் சாதி இல்லாதிருந்த ஒரு காலச் சூழல் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதாவது, தலித்துகள் மீது யாரும் ஆதிக்கம் செலுத்தாத ஒரு காலம் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். அது இப்போதுள்ள சமுதாயத்தைக் காட்டிலும் மாறுபட்ட ஒரு சமுதாயமாக இருந்துள்ளது. தலித் அல்லாத வர்ணாசிரம எழுத்தாளர்கள்தான் தலித்துகளின் வாழ்க்கையைப் பற்றி இப்படி எழுதியுள்ளார்கள். இதை ஒரு தலித் எழுத்தாளரின் எழுத்தோடு ஒப்பிட்டு எழுதுகின்றார். இவர் முன்வைக்கின்ற தலித் எழுத்தாளர், தன்னுடைய பாரம்பரியத்தை இழந்ததற்காக வருத்தப்பட்டாலும், கடந்த காலத்தில் வாழ விரும்பவில்லை. இப்போதுள்ள புதிய சமுதாயத்தில் வாழ விரும்புகிறார். இதற்காக செய்ய வேண்டிய சமரசங்களைப் பற்றி பேசுகிறார். தலித் எழுத்து சமரசம் செய்யும் தன்மை உடையது என்று சொல்கிறார்கள். அப்படியானால், பழமையைப் பற்றி சிந்திப்பது கற்பனை வளத்தில் உழல்வதற்குச் சமமா? அல்லது நவீனத்துவத்தைப் பற்றி சிந்திப்பது, சமூக அமைப்புடன் சமரசம் செய்வதாகுமா?**

எனக்குப் புரியவில்லை. இதில் எங்கு சமரசம் வருகின்றது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக தலித்துகள் அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். இன்னும் ஆயிரம் ஆண்டுகள் அடிமைகளாக வாழ்ந்தாலும் அல்லது தனியாகப் பிரிந்து வாழ்ந்தாலும், அவர்கள் சமரசம் செய்யாமல் வாழ்ந்தார்கள் என்று சொல்வது தவறு. உண்மையில் அவர்கள் திரும்பத் திரும்பப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள். இது வரையிலும் இருசாரருக்கும் நடந்த சண்டை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது தனியாகப் பிரிவதற்கான சண்டை.

**தொழிற்சாலைப் பிரச்சினைக்கு ஒன்றாகப் போராடுபவர்கள், ஆலையை விட்டு வெளியே வந்ததும் - தங்கள், தங்கள் சாதிக் குடியிருப்புகளை நோக்கிச் சென்று விடுகிறார்கள். மார்க்சிஸ்டுகள், தொழிலாளர்களை ஆலைக்குள் ஒன்றுபடுத்தி வைத்திருக்கிறார்கள். ஆனால், அதே தொழிலாளர்கள் தாங்கள் வாழும் இடங்களில் ஒன்றுபடுத்தப்படவில்லை.**



படிப்பகம்

www.padippakam.com

இப்போது நடக்கும் சண்டை ஒன்று சேர்வதற்கானது. ஒரு புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்புவதற்கான சண்டை. புதிய சமுதாயத்தைக் கட்டி எழுப்பும் சண்டையில் எப்படி சமரசம் வர முடியும்? இதுதான் தலித் இயக்கங்களின் உண்மையான குறிக்கோள். நாங்கள் தனித்து வாழ விரும்பி யிருந்தால் போராட்டத்திற்கே இடமில்லை. ஒரு புதிய சமூகத்தை உருவாக்கும் சண்டையில் சமரசம் வர முடியாது. ஆதிக்க சாதிக்காரர்களோடு நாங்கள் வாழ வேண்டும். அதனால்தான் அவர்களுடன் போராடுகின்றோம். அவர்களுடன் சேர்ந்து வாழ விருப் பம் இல்லை என்கிற முடிவு எடுத்து விட்டால், சண்டைக்கே இடம் இல்லை. போராட்டம் என்பது எல் லோரையும் உள்ளடக்கியது. தலித்து களும், வர்ணாசிரமத்தினரும் ஒரு புதிய சமூக அமைப்பைக் கட்டு வதில் நாம் முனைப்புடன் ஈடுபட வேண்டும். அப்படி ஈடுபடும் போது, இரு சாரரும் புதியவர்களாக இருப்பார்கள். இதுவரை நடந்து கொண்டிருக்கின்ற போராட்டம் இதற்கானது.

**உரிமை மறுக்கப்பட்ட - சுரண்டப்பட்ட மக்கள் எங்கிருந்தாலும், எந்த நாடாக இருந்தாலும், எந்தச் சமூக மாக இருந்தாலும் அவர்கள் அனைவரும் புரிந்து கொள்ளக் கூடிய ஒரு மொழி நடையில் எழுத வேண்டும். அவர்கள் வர்ணாசிரமத் தாராக, வெள்ளையராக, வெள்ளையர் அல்லாதவராக இருந்தாலும் - ஒடுக்கப்படும் போதும், சுரண்டப்படும் போதும் அவர்களும் நம்மில் ஒருவர்தான். இந்தக் கருத்துகளை முன்வைக்க வேண்டியது, தலித் வரையறைக்கு அவசிய மானதாகும். அப்போது தான் தலித் தோழமை உறுதிப்படும்.**

**அண்மையில் சில இந்தி சிறு கதைகளைப் படித்தேன். இப்போது பலர் அய்.ஏ.எஸ். அதிகாரிகளாகி விட்டதாலும், கொஞ்சம் முன்னே றிய சமூகமாக மாறிவிட்டதாலும், தலித்துகள் எந்த மாதிரியான பிரச் சனைகளை சந்திக்கிறார்கள் என் பதைத் தெரிந்து கொள்ள முயன்று வருகிறார்கள். இந்த மாதிரி நிறைய கதைகள் இல்லை. ஒரு சில கதைகள் தான் இருக்கின்றன. இருப்பினும் அதில் கூறப்பட்டுள்ள கதைகளின் சூழல், தீண்டாமை நிறைந்ததாக இருக் கின்றது. ஆனால் இன்றைய சூழல் மாறிவருவதாக நீங்கள் சொல்கிறீர்கள். எப்படி?**

போர் முறை இருக்கும்போது, படைத் தலைவன் எப்போதுமே குறிபார்த்தவனாக இருக்க வேண்டும். இலக் கியம் என்பது வாழ்க்கையை அப்படியே வரிக்கு வரி சொல் லிக் கொண்டு போவதல்ல. ''நீங்கள் அடிமைகள். எனவே நீங்கள் உங்கள் மீதான அடிமைத்தனத்துக்கு எதிராகப் போராட வேண்டும்.'' இதுதான் முக்கியச் செய்தி. எப்படி இருந்தாலும் தலித் இலக்கியத்தின் குறிக்கோள் சாதி அமைப்புக்கு எதிராகப் போராடுவதுதான். மோனலிசா பட மாக இருந்தாலும் இந்தப் பின்னணியில்தான் தீட்டப்பட வேண்டும். எந்த மூலையில் இருந்தாலும், எந்த வழியில் நின்றாலும், சாதி அமைப்புக்கு எதிராகப் போராடும் கருத் தைக் கொண்டு வரவேண்டும். அது அய்.ஏ.எஸ். அதிகாரி யாக இருந்தாலும் இந்த நாட்டின் குடியரசுத் தலைவராக இருந்தாலும், நம் எழுத்துகளில் உள்ள மனிதர்களைப் பார்த்தால், அவர்களை சமூகப் பார்வையில்தான் பார்ப் போம். அதுதான் தலித் இலக்கியத்தின் முதல் குறிக்கோள். நாம் இதை மறந்தால் அது காணாமல் போய்விடும். சாதி முறை உயிரோடிருக்கும் வரை, நாம் நம்முடைய குறிக் கோளை உயிரோடு வைத்திருக்க வேண்டும். அதனால்தான் நாம் எழுத்தாளர்களாக இருக்கின்றோம். நாம் நடு நிலை வகிப்பவர்கள் அல்ல. தலித் எழுத்தாளர்கள் எது எழு தினாலும் அவர்களுக்கு ஒரு குறிக்கோள் உண்டு; கருத்து உண்டு. அதன் விளைவாக சமூகத்தைப் பற்றி எழுதும் போது சமுதாயத்தை மட்டும் காட்டுவதில்லை. அவர் களுடைய பங்களிப்பு அதில் இருக்கிறது. அது எது என்றால் சாதிய முறையை ஒழிப்பது.



**இது என்னுடைய கடைசிக் கேள்வி. நீங்கள் நடுநிலை யைப் பற்றி பேசினீர்கள். சில நாட்களுக்கு முன் அய்தரா பாத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் யு.ஆர். அனந்த மூர்த்தி, நவீனத்துவத்தைப் பற்றி பேசினார். நவீன இலக்கியத்தில் எழுத்தாளர் ஒரு சாட்சிதான் என்றார். அந்த எழுத்தாளர் கொள் கைப் பிடிப்போடு இருக்க முடியாது என்றார். தலித் எழுத்து களை நவீன இலக்கியம் என்றார். இதில் தலித் எழுத்தாளர் கள் நடுநிலை சாட்சி என நீங்கள் நினைக்கிறீர்களா?**

இல்லை. இல்லை. தலித் எழுத்தாளர் நடுநிலையாக இருக்க முடியாது. என் தாய்க்கும், தங்கைக்கும் அநீதி நடக் கும்போது நான் சும்மாயிருக்க முடியாது. ஒரு வீடு பற்றி எரியும்போது நான் அமைதியாக இருக்க முடியாது. இலக் கியத்திலும் இதுதான் நடக்கிறது. தனக்கும், தன்னுடைய அனுபவத்துக்கும் தொடர்பு இல்லாதபோது, கற்பனை யிலிருந்து புது அனுபவங்களை உண்டாக்கும்போது, ஒரு எழுத்தாளர் நடுநிலை வகிக்க முடியும். தலித் இலக்கியத்தில் எழுத்தாளர்கள் தங்கள் சொந்த அனுபவங்களை எழுது கிறார்கள். இந்த இலக்கியத்தில் உள்ள எல்லாமே அவர் களுடையது. அவர்கள் நடுநிலையாக இருக்க முடியாது. நடுநிலையாக இருப்பது, தலித் இலக்கியத்துக்கும், இயக் கத்துக்கும் மிகுந்த விளைவை ஏற்படுத்தும், தலித் எழுத் தாளர்கள் நடுநிலையாக இருந்தால், அவர்கள் துன்பியல் கொண்டவர்கள். அவர்கள் ஒரு பக்கம் சாய்ந்துதான் ஆக வேண்டும். பதிவு செய்தும், எடுத்துக் கூறியும் மட்டுமே கலைப் பொறுப்பை நிறைவேற்ற முடியாது. தலித் இலக் கியம் என்பது செயல்பாடு. அவர்கள் செயல்களில் ஈடுபட வேண்டும். எழுத்தாளர்கள், போராளிகளாக இருந்தால் தான் தலித் இலக்கியம் உயிரோடு நிலைத்து நிற்கும். லட்சுமண் கெய்க்வாட் ஒரு போராளி. அதனால்தான் அவருடைய எழுத்துகளை அவ்வளவு ஆர்வமாகப் படிக் கின்றோம். ஒரு எழுத்தாளரிடம் குடிகொண்டுள்ள போராளியை விரட்டி விட்டால், அவர் தலித் எழுத்தாளராக இருக்க முடியாது. தலித் எழுத்தாளருக்கு ஒரு குறிப்பிட்ட உள்ளுணர்வு இருக்க வேண்டும். அவர் கடமை உணர்வு உடையவராக இருக்க வேண்டும். உள்ளுணர்வையும், கடமையுணர்வையும் நீக்கி விட்டால் - அவர் தலித் எழுத் தாளராக இருக்க முடியாது. எனவே, ஒரு தலித் எழுத் தாளருக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி, அவர் இச் சமூகத்திற்கு கடமையுணர்வு உள்ளவராக இருக்க வேண்டும். இதயத்திலும், மனதிலும் தலித் உணர்வு உள்ள வராக இருக்க வேண்டும். ஆதிக்கச் சாதியினர்தான் அழி யாத இலக்கியம், நடு நிலையாக இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள். இந்தத் தவறானப் பாதையிலிருந்து நாம் நம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ●



படிப்பகம்

www.padippakam.com

# விதை

உங்களுக்கும், உங்கள் குழந்தைகளுக்குமான ஒரே மாத இதழ்!




அன்பானவரே,

கடந்த இரண்டாண்டுகளாக 'விதை' தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது.

படக் கதைகள், போட்டிகள், பொது அறிவுக் கட்டுரைகள், ஓவியம் வரைய, மேஜிக் செய்யப் பயிற்சிகள், மூடநம்பிக்கையிலிருந்து விடுபட அறிவியல் கட்டுரைகள் இன்னும் பலப்பல – ஒவ்வொரு மாதமும்.

நீங்கள் இதழைத் தொடர்ந்து வாசித்திருப்பீர்கள். நிச்சயம் உங்களுக்கும், உங்கள் குழந்தைகளுக்கும் இதழ் பிடித்திருக்கும் என்று நம்புகிறோம்.

அப்புறம் என்ன?

இதழுக்கான ஆண்டு சந்தா வெறும் 50 ரூபாய் தானே! அதை உங்களால் அனுப்பிவிட முடியாதா? அனுப்புவதாக இருந்தால், 'மணியார்டர்' முறையில் மட்டுமே அனுப்பவும்.

காசோலையாகவோ / வரைவோலையாகவோ அனுப்ப வேண்டாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சமூக செயல்பாட்டு இயக்கம், தேசிய நெடுஞ்சாலை,
மாமண்டூர் – 603 111, காஞ்சிபுரம் மாவட்டம்
பேசி : 2756 5215

படிப்பகம்

www.padippakam.com

**வலி**

சாணிப்பால் ஊற்றி
சவுக்கால் அடித்தான்
என் பூட்டனை உன் பூட்டன்

காலில் செருப்பணிந்ததால்
கட்டி வைத்து உதைத்தான்
என் பாட்டனை உன் பாட்டன்

பறைக்கு எதுக்குடா படிப்பு? - என
பகடி செய்து ஏசினான்
என் அப்பனை உன் அப்பன்

உங்களுக்கென்னப்பா
சர்க்காரு வேலையெல்லாம்
உங்க சாதிக்குத்தானே! - என
சாமர்த்தியம் பேசுகிறாய் நீ

ஒன்று செய்!

உன்னையறியாத ஒரு ஊரில்
உன்னைப் பறையனென்று
சொல்லிப்பார்!

என் வலி
உனக்குப் புரியும்

**ராசை. கண்மணிராசா**



**எம் மண்**

கோவில் நுழை
தேரிழு
உங்கள் கோவில்
உங்கள் தேர்
ஏன் நாங்கள் நுழைய வேண்டும்
ஏன் நாங்கள் இழுக்க வேண்டும்
உங்களை வணங்குதலுக்கும்
உங்களின் சாமியை
வணங்குதலுக்கும்
வித்தியாசமில்லை
உங்களை சுமப்பதற்கும்
உங்களின் தேரை இழுப்பதற்கும்
வித்தியாசமில்லை
ஆனால் ஒன்றே ஒன்றுதான்
உங்கள் கோவிலும் தேரும்
நிற்பது எம்மண்ணில்
அதை அகற்றத் தேவைப்படுகிறது
கோவில் நுழைவும், தேரிழுப்பும்


**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**



படிப்பகம்

www.padippakam.com

## அழகிய பெரியவன்




மூத்த தலித் எழுத்தாளர் கே. டானியல் அவர்களின் ஆறு நாவல்களையும் ஒரே தொகுப்பாக 'அடையாளம்' பதிப்பகம் வெளியிட்டுள்ளது. பெரிய, தடிமனான புத்தகம். நேர்த்தியான பதிப்பு. இந்த ஆறு நாவல்களில் 'அடிமைகள்', 'கோவிந்தன்' ஆகிய இரு நாவல்களும் அடிமைகளின் வாழ்வைச் சொல்வதால் மிகவும் குறிப்பிடத் தகுந்ததாகின்றன.

சாதியக் கொடுமைகளுடன் அடிமை முறையும் இணைந்தேதான் தொடக்க கால இந்தியச் சமூகம் இருந்து வந்திருக்கிறது. ஆண்டை அடிமை முறை என்பது, நேற்று வரை இருந்த, இன்றளவும் வேறு வடிவங்களில் தொடருகின்ற ஓர் அடிமை முறையே. காளைக்குப் பதிலாக அடிமையான கீழ்ச் சாதிக்காரரை நுகத்தில் வைத்துப் பூட்டி உழுத கதைகளை - கேரளத்தின் வரலாற்றில் படிக்க முடிகிறது. தமிழகத்தில் நிலவிய அடிமை முறைகளைப் பற்றி ஆ. சிவசுப்பிரமணியத்தின் ('தமிழகத்தில் அடிமை முறை') நூலின் வாயிலாக விரிவாக நாம் அறியலாம்.

கருப்பர்களின் அடிமைத்தனத்தை விடவும் இந்திய சாதிமுறை மிகக் கொடூரமானதென்கிறார் அம்பேத்கர். சாதியக் கொடுமைகளோடு, அடிமை முறையின் துன்பங்களும் இணைந்து, இந்திய தலித் ஒருவரின் வாழ்வு கற்பனைக்கெட்டாத நரக வாழ்வாக நிலைப்பெற்று இருந்திருக்கிறது. இந்த வாழ்வை தமிழகத்தில் எழுதப்பட்ட எந்த தொடக்கக் கால நாவலும், கதையும் பதிவு செய்யவில்லை. இன்றளவிலும்கூட வெளிவந்திருக்கும் படைப்புகள், தலித் அடிமை முறையின் வலுவான வரலாற்றுப் பின்னணியையும், கதைக்களனையும் கொண்டு எழுதப்பட்டதாக இல்லை. ஆனால், கே. டானியலின் நாவல்கள் இதைச் செய்திருக்கின்றன.

'அடிமைகள்' நாவல் 1890 முதல் 1956 வரைக்குமான அரை நூற்றாண்டுக்கும் அதிகமான காலவெளியில் நடைபெறும் நிகழ்வுகளைச் சொல்கிறது. யாழ்ப்பாணம், அதன் கிராமப் பகுதிகள் ஆகியவற்றில் நிகழும் சமூக மாற்றங்களை விரிவாகப் பதிவு செய்கிறது இந்நாவல்.

'சாதிப் பிரச்சனைகளோடு பின்னிப் பிணைந்திருக்காத தமிழர்களின் வாழ்க்கை என்பது இல்லவே இல்லை என்பது, எனது துணிவான முடிவு. இது சரியானதே. அதனாலேயே நான் இந்த இயல்பான தமிழனின் வாழ்க்கையை இலக்கியம் ஆக்குகிறேன்' என்று கருதும் டானியல், அதற்கு ஏற்ற மாதிரியே சாதியின் அத்தனை சலுகைகளையும், மேன்மைகளையும், அதிகாரங்களையும் அனுபவிக்கிற ஆதிக்க சாதித் தமிழர்களின் வாழ்வை மிக நெருக்கமாக நின்று பார்க்கும்படி செய்கிறார்.

வேலுப்பிள்ளை, சீதேவி நாச்சியார் ஆகியோரின் வாழ்வை முன்வைத்துக் கொண்டு கிளை கிளையாகப் பிரிந்து பரவுகிறது நாவல். சீதேவியின் அப்பா - யாழ்ப்பாணம் மட்டுமின்றி, நாடு முழுவதும் புகழ்ப் பெற்ற புத்தூர் பல்லக்கு முதலித் தம்பி. வேலுப்பிள்ளையின் தந்தையோ யாழ்ப்பாணம் கோட்டையில் வேலை செய்தவர். இந்த வகையான செல்வாக்கு மிகுந்த குடும்பங்களுக்கிடையிலே நடக்கும் திருமணத்துக்கு, ஓர் அடிமைக் குடும்பமும் சீர்வரிசையாகத் தரப்படுகிறது. அடிமைக் குடும்பங்களை மணப்பெண் சார்பாக சீர்வரிசையாகத் தருவது என்பது, அப்போது இருந்த வழக்கம். அப்படி - சீதேவி நாச்சியாருக்குத் தரப்படும் அடிமைகளான இத்தினி, எல்லுப் போலை ஆகியோரிடமிருந்து தொடங்கி சுமார் 12 கிளைக் கதைகளாக இருக்கிறது நாவல்.

இந்த நாவலை இரு பகுதிகளாகப் பிரித்து புரிந்து கொள்ளலாம். அக்காலத்திலேயே ஈழத்தில் இருந்த சாதிய நடைமுறைகள் கட்டுப்பாடுகள் மற்றும் தீண்டாமைக் கொடுமைகள் - இது ஒரு பகுதி. இந்தக் கொடுமைகளை எதிர்த்திடும் தலித்துகளின் செயல்பாடுகள் - இது மற்றொரு பகுதி. வெறுமனே தலித்துகளின் அவலங்களை மட்டுமே சொல்லிவிட்டு நிற்கவில்லை கே. டானியலின் நாவல்கள். அவலங்களின் சித்தரிப்புக்கும் இணையாக தலித் மக்கள் காட்டிய எதிர்ப்புகளையும் அது பதிவு செய்கிறது. இது டானியலின் குறிப்பிடத்தகுந்த சிறப்பம்சம் ஆகும். இந்நாவலில் வரும் பெண்கள் ஆண்களைக் காட்டிலும் வலுவாக தமது எதிர்ப்புணர்வைக் காட்டுகின்றவர்களாக இருக்கின்றனர். தமது கணவர்களை எதிர்த்துப் பேசி, சாதிய இழிவிலிருந்து அவனை தப்பும்படி - தூண்டுகிறவர்களாக இருக்கின்றனர்.

ஆதிக்க சாதியர்க்குத் தொண்டூழியம் புரிபவர்களாக கோவியக்குடிகள், மாராயக் குடிகள், பள்ளக்குடிகள், நளக்குடிகள் பண்டாரம், கட்டாடி, பரியாரி என்று வகை வகையான அடிமைச் சாதிகள் - நாவலில் குறிக்கப்படுகின்றன. இவர்களிடமிருந்து

> **'டானியலின் நாவல்கள் படம் பிடிக்கும் மிகச் சிக்கலான, கடுமையான சாதிய முறையைக் கொண்ட ஈழம், இன்று சாதியற்றதாக மாறிவிட்டிருக்கிறது என்பதைக் கேட்கிறபோது மகிழ்ச்சியாக இருக்கிறது. நிசமாகவே அங்கு சாதி ஒழிக்கப் பட்டு விட்டிருந்தால், அதை விடப் பேரானந்தம் வேறில்லை.'**



படிப்பகம்

www.padippakam.com

வேலையை, உழைப்பைச் சுரண்டும் ஆதிக்க சாதியினர், அவர்கள் தடைகளை மீறுகையில் கொல்லவும் செய்கின்றனர். சுய நலம் கருதி சாதியக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி காரியம் சாதித்துக் கொள்கிறவர்கள், வகை வகையான கட்டுப்பாடுகளைப் போட்டு இறுக்கியும் வைக்கின்றனர்.

சாதி இந்துவான தன் ஆண்டையுடன் 'கோச்' வண்டியில் உட்கார்ந்து போகும் அடிமை எல்லுப்போலை வெட்டிக் கொல்லப்படுகிறான். கோச் வண்டியில் சாதிக்காரர்கள் மட்டும்தான் ஏறலாம். யாழ்ப்பாணத்துக்கு ரயில் வருகிறபோது, அதில் எல்லா சாதியினரும் உட்கார்ந்து பயணம் செய்வார்கள் என்பதற்காகவே - சாதி இந்துக்களால் மறியல் செய்யப்படுகிறது. தலித்துகள் கோவிலில் நுழையவும், தண்ணீர் எடுக்கவும், தெருவைப் பயன்படுத்தவும் தடை இருக்கிறது. மருத்துவர்கள் அவர்களைத் தீண்டி நாடி அறிவதில்லை. சாதி இந்துக் களின் தெருவில் நடக்கிறபோது காவோலை பிடித்திழுத்தபடிதான் நடக்க வேண்டும். இப்படி எண்ணற்ற சாதியக் கட்டுமானங்கள். இதைத் தமது திறத்தாலும், திறமையாலும் தலித்துகள் மீறுகிறபோது கும்பிடுகிறார்கள் சாதி இந்துக்கள்.

நாவலில் வரும் ஆட்டிறைச்சிப் பரியாரியும், கயித்தான் துரும்பனும், இத்தினியும், பண்டாரியன், அண்ணாவி செல்லன் போன்ற தலித் பாத்திரங்கள் வலுவான எதிர்ப்புகளை - நேரடியாகவோ, மறைமுகமாகவோ சாதிக்கு எதிராகக் காட்டுகின்றவர்களாக இருக்கின்றனர்.

தலித்துகளின் களிப்பு, எதிர்ப்புணர்வு ஆகியவற்றை மிக இயல்பாக எழுதிப் போகிறார் டானியல். ஈழத்தைப் புரிந்து கொள்ள மிகவும் ஏதுவாக இந்த நாவல் இருக்கிறதென்று கருதுகிறேன். இந்த நாவலை வாசிக்கும் முன்பாக தொலைக்காட்சியில் பணியாற்றும் ஈழத் தமிழர் ஒருவரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அவர் தமிழகத்தின் கிராமங்களுக்குப் போகிறபோது, சேரியும், ஊருமாகப் பிரிந்திருப்பதைப் பார்த்து அதிர்ந்ததாகச் சொன்னார். ஈழத்தில் சாதி ஒழிக்கப்பட்டுவிட்டதென்றார். டானியலின் நாவல்கள் படம் பிடிக்கும் மிகச் சிக்கலான, கடுமையான சாதிய முறையைக் கொண்ட ஈழம் இன்று சாதியற்றதாக மாறிவிட்டிருக்கிறது என்பதைக் கேட்கிறபோது மகிழ்ச்சியாக இருக்கிறது. நிசமாகவே அங்கு சாதி ஒழிக்கப்பட்டு விட்டிருந்தால், அதைவிடப் பேரானந்தம் வேறில்லை.

> **“வெறுமனே தலித்துகளின் அவலங்களை மட்டுமே சொல்லிவிட்டு நிற்கவில்லை கே. டானியலின் நாவல்கள். அவலங்களின் சித்தரிப்புக்கும் இணையாக, தலித் மக்கள் காட்டிய எதிர்ப்புகளையும் அது பதிவு செய்கிறது.”**

•

வெளியாகின்ற நூல்களைக் காட்டிலும், வெளியீட்டு விழாக்கள் சர்ச்சைகளைக் கிளப்புவதாக அமைந்து விடுகின்ற காலமாக இருக்கிறது இப்போது. 'அம்ருதா' பதிப்பகத்திற்காக, திலகவதி அவர்களால் தலித் படைப்புகள் சில தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. நூலின் பெயர் 'கோடை உமிழும் கானல்'. அந்த நூல் சுந்தர ராமசாமிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது. அந்த நூலை வெளியிட்டுப் பேசிய சுஜாதா, தன்னையும் தலித் எழுத்தாளராகக் கருத வேண்டும் என்றிருக்கிறார்... தமிழக இலக்கியச் சூழல் இறுக்கமாகவும், கோபமாகவும் இருந்தால் நன்றாயிருக்காது என்பதற்காக, அவ்வப்போது இப்படியான சில நகைச்சுவைமிக்க தருணங்களும் வந்து போகின்றன.

சுஜாதாவிற்கு அறிவுஜீவி என்கிற பட்டத்தை யார் வழங்கினார்களோ தெரியவில்லை. உண்மையாகவே மனிதர் மிகவும் சிரமப்படுகிறார். கதை, கவிதை, நாவல், குழந்தை இலக்கியம், திரைப்படம் என்று அவர் 'தடம்' பதித்த துறைகளில் கடைசியாக பாக்கியாக இருந்தது தலித் எழுத்தாளர் என்பதுதான்! அதையும் எப்படியாவது பெற்றுவிட்டால், மனிதரின் சிரமம் ஓய்ந்து விடும் என்று நினைக்கிறார். அந்தப் புலம்பல்தான் அங்கு வெளியாகியிருக்கிறது.

இலக்கியத்தின் 'தண்டத்தை' நாங்களா பிடித்துக்கொண்டு 'பெரியவாளாக' உலவுகிறோம்? இல்லையே. யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் எழுதலாம் தானே! என்ன, தலித் இலக்கியம் எழுத கொஞ்சம் மெனக்கிட வேண்டும்! இணையத் தளத்தில் மானாவாரியாய் கொட்டிக் கிடப்பதையும், ஓசியில் கிடைக்கும் ஆங்கில நூல்களையும் மேய்ந்து புதுசாக ஒன்றை எழுதி, அறிஞர் பட்டம் போட்டுக் கொள்வதைப் போன்று - அவ்வளவு எளிதானதொன்றும் இல்லை தலித் இலக்கியம் எழுதுவது!

பிற இலக்கியத்தைப் போல, தலித் இலக்கியத்துக்கு நோக்கம் எதுவும் இல்லை என்று சுஜாதா நினைத்துக் கொண்டிருக்கிறார். வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் கதாநாயகிகளின் பின்புறத்துக்கும், முன்புறத்துக்கும் ஏற்ப உடைகளைத் தைப்பதுபோல் வசனத்தைத் தைப்பதல்ல - தலித் கதை எழுதுவது. நவீன சென்னையின் எந்தெந்தப் பகுதிகளில் எந்தெந்தப் பெண்கள் வருவார்கள்; எப்படி அவர்களைச் சீண்டலாம் என்ற ஆலோசனை சொல்வதல்ல - தலித் கதை எழுதுவது. தலித் படைப்புகள் நிசமாகவே, மெய்யாகவே, உண்மையாகவே தம் மக்கள் விடிவு பெற வேண்டும் என்ற உணர்வின் வெறியில் எழுதப்படுவது. இந்த தாத்பரியத்தைக் கொஞ்சம் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்த உணர்வு இருக்கும் ஒருவரால் நிச்சயம் தன்னை ஒரு சாதியாளனாக அடையாளப்படுத்திக் கொள்ள முடியாது.

ஆனால், சுஜாதா அதைச் செய்கிறார். தமிழ் நாடு பார்ப்பனச் சங்கத்தின் வெள்ளி விழா மாநாட்டில், 'எனக்கு வாழ்நாள் சாதனை விருது' கொடுத்தார்கள். பல மிகப் பெரிய பார்ப்பன சாதனையாளர்கள் திருநாமங்களின் வரிசையில் அடியேனையும் சேர்த்த தற்குத் தன்யனானேன்' ('ஆனந்த விகடன்', 15.1.06) என்று சொல்லும் சுஜாதாவிற்கு -




கே. டானியல்



படிப்பகம்

www.padippakam.com



புகைப்படம் : ஜெயச்சந்திரன்

எங்கள் சேரியில்
அஞ்சல்காரர்கள் குழம்பிப் போவார்கள்
அறிவுரைகள் குழம்பிப் போகும்
நாகரிகம் தடுமாறும்
சூரியன் கூட கறுத்துப் போவான்
சகதியில் பதிந்திருக்கும் கால்நடைகளின்
குளம்படிகள் போலிருக்கின்றன
எங்கள் வீடுகள்.
இவைகளின் நடுவிலே
நீரோட்டத்தின் திசையில் நீந்த விரும்பும்
ஓர் ஆன்மா இருக்கிறது.

எங்கள் சேரி
மண்ணில் புதைந்திருக்கும்
பூஞ்சைப் பிடித்த பாரம்பரியத்திலிருந்து
உதறி எழும்
கருப்பு உடல்களின், கருத்த முடிகளின்
கர்ச்சிக்கிற, பொங்குகிற, கலகம் செய்கிற கடல்

இங்கிருக்கும் மக்கள்
மென்மையான பஞ்சுப் பொதிகளை
தோள்களில் சுமக்கிறார்கள்
அவர்களின் கரங்கள் முரடானவை; ஆனால் பலமற்றவை
வளையல்கள் வளைந்த வானத்திடம் மினுக்குகின்றன

தகிக்கும் வெப்பத்தில் வியர்வைப் பெருக்கெடுக்க
சுற்றுகிறார்கள் குழந்தைகள்
சிலர் சரக்கு வண்டிகளில் வேலை செய்கிறார்கள்
அவர்களின் நாளங்கள் புடைத்திருக்கின்றன
அரைகுறையாய் மூடியிருக்கின்றன கண்கள்.

எங்கள் சேரி
நாட்டுச் சாராயத்தில் மூழ்கியிருக்கிறது.
மிளகாய் வைத்து செய்த, காரமான குழம்பில் மிதக்கும்
கறியில் உயிர் வாழ்கிறது
அரை வயிறாய் உண்டு, நாள் முழுதும் உழைத்தும்
ஒவ்வொரு புதிய நாளையும்
விளக்கின் மெல்லிய ஒளியில்
உன்னிப்பாய்த் தேடுகிறது
அஞ்சல்காரரின் காலடி ஓசையைக் கேட்கும்போது
கலங்குகிறது எங்கள் சேரி

அஞ்சல்காரர்
எச்சில் ஊறிய பென்சில் முனையைக் கொண்டு
பழுப்பு உறைகளின் மீது கிறுக்கப்பட்டிருக்கும்
பெயரையும், முகவரியையும் கண்டுபிடிப்பதற்குள்
களைத்துப் போகிறார்
அம்மணமான வழிகாட்டிகள் சூழ
ராணு நாராயணனைத் தேடுவதில் ஏமாற்றம் அடைந்தாலும்
சந்துகளில் இடிப்பட்டுக் கொண்டே
உச்சுக் கொட்டியபடி வேதனையோடு - மவுனமாக
ராணு நாராயணனைத் தேடித் திரிகிறார்
மோசமான சீருடையில் வியர்த்துக் கொட்டியபடி
சேற்றிலும், சொத சொதக்கும் தரையிலும்
குனிந்தும், நகர்ந்தும்...
தேடுதல் முடிந்துவிட்டது
'ராணுவின் பாட்டி இறந்துவிட்டாள்'
சேரி அந்தச் சேதியை
ஒரு பருந்து தன் இரையின் மீது
பாய்ந்து பிடித்துக் கொள்வது போல்
பிடித்துக் கொள்கிறது.

எங்கள் சேரியில்
சீர்திருத்தங்கள் குழம்பிப் போகின்றன
பாதைகள் சிதிலமடைகின்றன.
திட்டங்கள் தடுமாறுகின்றன
இப்போதுதான் - அதுவும் இப்போதுதான்
பையன்கள் படிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்
அவர்கள் கவிதைகளை, கதைகளை, இந்திய இலக்கியத்தை
எழுதுகிறார்கள்
இதமாக மழையைப் போல்
புதிய அனுபவங்களின் உண்மைகள்
இலக்கியத்தின் கனவுகள் மீது பொழிகின்றன
வார்த்தைக் கோடரிகள் மரபின் மரத்தின் மீது விழுகின்றன.

காவல்காரர்களின், அஞ்சல்காரர்களின்
ஊர் சுற்றல் மீண்டும் தொடங்குகிறது.
சூரியனை விழுங்கிப் பெருக்கிறது இருள்
எங்கள் சேரியில் இப்போதுகூட
அலைக்கழிக்கப்படுகிறார்
அஞ்சல்காரர்.

●

தமிழில் : அழகிய பெரியவன்



படிப்பகம்

www.padippakam.com

தலித் இலக்கியத்தை எழுதியிருப்பதாகச் சொல்வதற்கு எந்தத் தகுதியும் இல்லை.

அறிவுஜீவி என்கிற அளவிலும்கூட தன்னை ஒரு பார்ப்பனராகத்தான் எப்போதும் சுஜாதா அடையாளப்படுத்திக் கொண்டுள்ளார். கீதையைப் பற்றியோ, பார்ப்பனர்களைப் பற்றியோ, யாராவது விமர்சனக் கருத்துகளைச் சொன்னால் போதும். உடனே தான் எழுதும் 'கற்றதும், பெற்றதும்' போன்ற பத்திகளில் வரிந்து கட்டிக் கொண்டு மறுப்பு எழுதுகிறார்.

இப்போது திடீரென்று சுஜாதா தன்னையும் இந்த மாபெரும் மானுட சமூகத்தின் அங்கமாக உணர்ந்து விட்டார் போலிருக்கிறது. எங்கு போய் தவமிருந்து இந்த ஞானத்தைப் பெற்றாரோ தெரியவில்லை. எல்லா மனிதர்களும் 'ஒய்' குரோமோசோமின் தொடர்ச்சியிலிருந்து வரும் ஆப்பிரிக்க 'டுட்சி' இனத்திலிருந்து வந்தவர்கள் என்கிறார். பார்ப்பனர்கள் தமிழர்கள்தான் என்கிறார். தலித்துகளையும், பார்ப்பனர்களையும் சில பொதுவான சிக்கல்களைக் கொண்ட ஒத்த இனம் என்கிறார்.

மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. குதூகலம் பொங்குகிறது. இதைத் தானே நாங்கள் எதிர்பார்ப்பது. இனியென்ன சுஜாதாவினரும், தலித்துகளும் உறவின் முறையினர்தான்! இனிமேல் அவர்கள் 'பீ' அள்ளவும், சாக்கடையைச் சுத்தம் செய்யவும், தொண்டூழியம் புரியவும், உழவும், செத்தமாடு தூக்கவும், பிணம் எரிக்கவும், சிரட்டையில் தேநீர் குடித்துவிட்டு வெற்றுடம்புடன் செருப்பில்லா காலில் நடக்கவும், இன்ன பிறவுமான வேலைகளுக்கு கோவில்களையும், நீதிமன்றங்களையும் விட்டுக் கீழிறங்கி வருவார்கள்!

வருக சுஜாதாவினரே வருக! மாடறுத்த கையின் ரத்தப் பிசுபிசுப்போடும், பீ வாளி பிடித்த கையின் நாற்றத்தோடும் கதைகளையும் எழுதுக!

●

**மராத்தி** தலித் இலக்கியத் தொகுப்பான 'நஞ்சுள்ள ரொட்டி'யில் (Poisoned Bread) 'சேரி' என்றொரு கவிதை இருக்கிறது. கேசவ் மேஷ்ராமின் கவிதையான இதை வி.ஜி. நந்து, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்திருக்கிறார். நகைச்சுவையும், உணர்வெழுச்சியும் கொண்ட அக்கவிதையைப் படிக்கும் யாருக்கும், சேரிக்குள் நுழைந்து அலையும் அனுபவம் கிட்டும். அக்கவிதையைப் படிக்கின்ற சேரியில் வாழ்பவரும், ஊரில் வாழ்பவருமான எல்லாரும் சேரிக்குள் நுழைந்து அலையலாம். ●




கேரளாவிலிருந்து வெளிவரும் 'மாத்யமம்' - வார இதழில் (சனவரி 2006), தோழர் அழகிய பெரியவன் அவர்களின் சிறப்புப் பேட்டி விரிவாக இடம் பெற்றுள்ளது. சிறப்பு வாய்ந்த இப்பேட்டி, 'தலித் முரசில்' விரைவில் வெளிவருகிறது.




'கீற்று' என்றொரு இணையத்தளத்தை நாங்கள் தொடங்கி இருக்கிறோம்.

தமிழ் மொழி, மனித உரிமைகள், சூழலியல், பெண்ணியம், தலித்தியம், தேசியம் மற்றும் காரல் மார்க்ஸ், புலே, தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் போன்ற சமூக மாற்றத்திற்காகப் போராடிய சிந்தனையாளர்களின் கருத்துகளைத் தாங்கி வரும் இதழ்கள், நூல்கள் - பெருமளவில் மக்களை சென்றடைவதில்லை. அதிலும், குறிப்பாக, இணையத் தளங்களில் மாற்றுக் கருத்தியல்களுக்கான இடம் அறவே இல்லாததொரு சூழலில், இதைச் சமன் செய்ய நாங்கள் புதியதோர் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.

உண்மையான சமூக மாற்றத்திற்கான கருத்தியல்களைத் தாங்கி வரும் ஏடுகளை இணையத்தளத்தில் அறிமுகப்படுத்தி, தங்கள் இதழை ஒவ்வொரு மாதமும் அப்படியே வெளியிடுவது - உலகளவில் பிரச்சாரத்திற்கு வழிவகுக்கும். மேலும், தற்பொழுது இணையத்தளத்தில் பார்ப்பனர்களின் ஆதிக்கம் மற்றும் மதவாதிகளின் பிரச்சாரத்தை முறியடிப்பதாகவும் இருக்கும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். தற்பொழுது, புதுவிசை, தலித் முரசு, புதிய காற்று, புரட்சிப் பெரியார் முழக்கம், கூட்டாஞ்சோறு, அநிச்ச ஆகிய இதழ்கள் எமது இணையத் தளத்தில் வெளிவருகின்றன.

எனவே, எங்கள் இணையத்தளத்தில் இணைய விரும்புகிறவர்கள், இதற்கான ஒப்புதலை எங்களுக்குத் தெரிவியுங்கள். இத்திட்டத்திற்கான ஒப்புதலை எழுத்து மூலம் அளித்த பிறகு, நீங்கள் ஒவ்வொரு மாதமும் தங்கள் இதழை குறுந்தகடு (சி.டி.) வடிவில் எங்களுக்கு எப்படி அனுப்ப வேண்டும் என்ற முறையைத் தெரிவிக்கிறோம்.

*தொடர்புக்கு : ரா. ரமேஷ், 11/7, தங்கவேலு தெரு, திருமலைப் பிள்ளை சாலை, தியாகராயர் நகர், சென்னை - 17, கைபேசி : 98408 - 97994*




படிப்பகம்

www.padippakam.com



## சமயங்களின் அரசியல்

விலை ரூ.25

"இயற்கை நிகழ்வுகளின் மீது மனிதனுக்கு ஏற்படும் பயம், பல நம்பிக்கைகளைக் கைக்கொள்ள வேண்டிய தேவையை உருவாக்குகிறது. இதை அடிப்படையாகக் கொண்டு சமயம் என்பது உருவாகியது. இதனை நிறுவனமாக்கியுள்ளார்கள். இந்நிறுவனம் பெரும் அதிகாரச் சக்தியாகியுள்ளது. சுரண்டுபவர்களின் கருவியாகவும், சுரண்டப்படுபவர்களின் நம்பிக்கையாகவும் சமயம் செயல்படுகிறது. இந்த அரசியலைப் புரிந்துகொள்வது அவசியம். வரலாற்றுக்கு முற்பட்ட காலம் தொடங்கி, இன்றும் தொடர்கிறது இந்த அரசியல்."




■ ஆசிரியர் : தொ. பரமசிவன் ■ வெளியீடு : பரிசல், 1, இந்தியன் வங்கி குடியிருப்பு, வள்ளலார் தெரு, பத்மநாபா நகர், சூளைமேடு, சென்னை - 94 ■ பக்கங்கள் : 64

●●

## பொது விசாரணை அறிக்கை

"மாவட்ட நிர்வாகம் சட்டம், ஒழுங்கை நிலை நாட்டாததின் விளைவாக, ஊராட்சிகளில் தலித்துகளுக்கு எதிராக, ஆதிக்க சாதியினர், சமூகப் புறக்கணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பைத் தவிர, வேறு எந்த அரசியல் கட்சியும் இப்பிரச்சினையில் தலையிட்டு தீர்வு காண முன்வரவில்லை. தனது குடிமக்களைப் பாதுகாத்து, அரசியல் சட்ட உரிமைகளான சமத்துவத்தையும், தேர்தலில் போட்டியிடும் உரிமையையும் வழங்க தமிழக அரசு தவறிவிட்டது. நாட்டில் பெருமளவில் வசிக்கும் தலித் சமூகத்தினரை அரசின் பல்வேறு கட்டமைப்புகளில் பங்கேற்க அனுமதி மறுப்பதன் மூலம், இந்தியாவும், பங்கேற்பு சனநாயகக் கோட்பாட்டை மீறி வருகிறது.



■ வெளியீடு : தலித் மனித உரிமைகளுக்கான தேசியப் பிரச்சாரம், 56/52, விவேகானந்தா நகர், மரக்காணம் சாலை, திண்டிவனம் - 604 002 ■ பக்கங்கள்: 40

●●

## தமிழர் கண்ணோட்டம் - பொங்கல் மலர்

"சிலர், தமிழர் இனப் பெருமை பேசும் அதே நாக்கால், சாதிப் பெருமை பேசிக் கொண்டிருப்பர். கடந்த காலத்தில் தமிழ்ச் சாதிகளில் எந்தச் சாதியைச் சேர்ந்தவர் சாதனை செய்திருந்தாலும், அதைத் தமிழர் இனச் சாதனையாக அடையாளம் காட்ட வேண்டிய தேவையை இவர்கள் புறக்கணிக்கின்றனர். இவர்களின் இந்த அணுகுமுறை, தமிழர் ஒற்றுமையை கெடுக்கிறது. தேர்தல் கட்சிகளுக்கு, சாதி என்பது வாக்கு வங்கியாக இருக்கிறது. எனவே, அக்கட்சிகள் சாதியை பலவகையிலும் பயன்படுத்தும். ஆனால், தமிழ்த் தேசியப் புரட்சியாளர்களுக்கு தமிழர் ஒற்றுமைதான் முதன்மையாக இருக்க வேண்டும்.




■ ஆசிரியர் : பெ. மணியரசன் ■ வெளியீடு : தமிழர் கண்ணோட்டம், 2ஆம் தளம், 20/7, முத்துரங்கம் சாலை, தியாகராயர் நகர், சென்னை - 17 ■ பக்கங்கள் : 224

## சோதனைத் தீயில் விளைந்த சாதனைக் கதிர் அம்பேத்கர்



விலை ரூ.50

"அம்பேத்கரை அறியாத, படியாத யாரெவரும் இந்திய மண்ணில் சமூக மாற்றத்தையோ, சமூகச் சமத்துவத்தையோ கொண்டுவர இயலாது. ஆனாலோ, இந்த நாட்டில் அண்ணலின் நூற்றாண்டுவரை அவர் வாழ்க்கையையும், வரலாற்றையும், படைப்புகளையும் இருட்டடிப்பு செய்த சதிக் கொடுமைதான் அரங்கேறிற்று. பள்ளிப்பாடங்களிலோ, கல்லூரி நூல்களிலோ, நூலகங்களிலோ அம்பேத்கர் சிந்தனைகளும், வற்றாமல் ஊற்றெடுக்கும் படைப்புகளும் காட்டாறாக வந்து கொண்டிருக்கின்றன என்பது, சமூக விடிவை விரைவுபடுத்தும் எக்காளமாக இருக்கிறது."

■ ஆசிரியர் : அ. ஜெய்சன் ■ அன்னை ராமாபாய் அம்பேத்கர் பதிப்பகம், 43/214, கிருஷ்ணா நகர், பெரியகுப்பம், திருவள்ளூர் - 602 001 ■ பக்கங்கள்: 104

●●




## பெரியார் களஞ்சியம் - தொகுதி: 13

சாதி - தீண்டாமை; விலை ரூ.50

"எங்களுடைய வேலை கீழே இருந்து மலை மேலே பாறாங்கல் குண்டுக் கல்லை ஏற்றும்படியான பணியாகும். நாம், நமது கடவுள், மதம், சாதி, சாத்திரங்கள் ஆகியவைகளை ஒழிப்பதுடன், நமது கலைகள், இலக்கியங்கள், பாட்டுகள், கச்சேரிகள், நாடகங்கள், சினிமாக்கள் அனைத்தையும் ஒழித்தாக வேண்டும். இவை நம்மை மடையர்களாகவும், இழி மக்களாகவும், காட்டுமிராண்டிகளாகவும் வைத்திருக்கப் பயன்படுகின்றனவே அல்லாமல் - நம் அறிவு வளரவோ, நமது இழிவு நீங்கவோ, நமது வளர்ச்சிக்கு வழிவகை செய்யவோ உதவவில்லை."

■ தொகுப்பாசிரியர் : கி. வீரமணி ■ வெளியீடு : பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, பெரியார் திடல், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, வேப்பேரி, சென்னை - 7 ■ பக்கங்கள் : 320

●●



## திராவிடர் இயக்கப் பார்வையில் பாரதியார்

விலை ரூ.40

"நம் முன்னோர்கள் அவர்களைப் பின்பற்றி நாமுங்கூடப் புண்ணிய பாஷையாகக் கொண்டாடி வரும் ஸம்ஸ்கிருத பாஷை மிகவும் அற்புதமானது. அதைத் தெய்வ பாஷையென்று சொல்வது விளையாட்டன்று. மற்ற சாதாரண பாஷைகளை எல்லாம் மனித பாஷையென்று சொல்லுவோமானால், இவை அனைத்திலும் சிறப்புடைய பாஷைக்குத் தனிப்பெயர் ஒன்று வேண்டுமல்லவா. அதன் பொருட்டே அதைத் தெய்வ பாஷை என்கிறோம்." - பாரதி

■ ஆசிரியர் : வாலாசா வல்லவன் ■ தமிழ்க் குடியரசுப் பதிப்பகம், 14/12, மியான் முதல் தெரு, சென்னை - 5 ■ பக்கங்கள் : 112



படிப்பகம்

www.padippakam.com

மனிதர் கழிவை மனிதர் அகற்றும் அவலம் போக்கிட
2006 சூன் மாதம் ஆறு மாநகராட்சிகள் முன்பு

# முற்றுகைப் போர்



1993 ஆம் ஆண்டு, மனிதர் கழிவை மனிதர் அகற்றும் முறையை இந்திய அரசு தடை செய்தது. ஆனால், இத்தடைச் சட்டத்தை அரசாங்கமே மீறும் வகையில், மாநகராட்சிகளில் உள்ள உலர் கழிப்பிடங்களில், தூய்மைத் தொழிலாளர்களை கையால் மலமள்ளத் தூண்டும் செயலைக் கண்டித்து, தமிழகத்தில் உள்ள ஆறு மாநகராட்சி அலுவலகங்களை முற்றுகையிடும் போராட்டம் நடைபெறுகிறது. மனித உரிமைகளில் அக்கறையுள்ள அனைவரும் பெருந்திரளாக இம்முற்றுகைப் போரில் பங்கேற்க அழைக்கிறோம்.

## ஆதித்தமிழர் பேரவை

படிப்பகம்

www.padippakam.com

# ரகசியத்தில் பாயும் நதி

■ ஆதவன் தீட்சண்யா



பருவங்கெட்டு பெய்து கொண்டிருந்தது மழை. முனிமலை மேலிருந்து பாறாங்கல் உருண்டு வருவதைப் போல, அடர்ந்தடர்ந்து கிடுகிடுக்கும் இடியோசைக்கு குலை நடுங்கியது. சாளைக்குள்ளேயே முடங்கிக் கிடந்தாலும் ரோமக்கால் சிலிர்ப்பில் மண்டியிருந்தது குளிர். பழஞ்சீலையை மேலுக்குப் போர்த்தி சாக்குப் பைக்குள் கழுத்து வரைக்கும் நுழைத்துக் கொண்டாலும் வெடவெடப்பு குறையவில்லை. விளையாட்டுக்கு ஒரு மோதுமோதினாலும் இற்று விழுந்துவிடுமளவுக்கு சாளையின் சுவர்களில் ஓதமேறிவிட்டது. கூரையிலிருந்து விழும் மரவட்டைகள் காதுக்குள் நுழைந்துவிடுமோ என்கிற பயத்தில், அரைமயக்கத் தூக்கமும் அவ்வப்போது தடைபட்டது.

காடுகரையெல்லாம் ஊறி ஊற்றெழும்பித் தளும்பியது. கிணறுகளில் நீர் மட்டம் பிடுவைத் தாண்டி தொலைக்குழி வழியே கோடி போனது. புடையெடுக்கும் நெல்லங்காட்டில் தெப்பக்குளமாட்டம் முழங்காலமுட்டுத் தண்ணி நின்றது. மேட்டு அணைப்புகளில் நட்டிருந்த குச்சிக்கிழங்கு அழுகி நொதிக்கும் நாற்றம் குமட்டியெடுத்தது காற்றை.

'எம்மக்க பட்டப்பாடெல்லாம் இப்பிடி பதராப் போச்சே... ஒரு போகத்து வெள்ளாமையழிஞ்சா தாங்குமா குடும்பம்...' என்ற மழையிறக்கம் கண்ட நாளிலிருந்து சாக்குப் பைக்குள் முடங்கிக் கொண்டு அங்கலாய்த்துக் கிடக்கிறாள் பொன்னுருகிப் பாட்டி. 'நான் கொமரியாவறதுக்கு முன்னாடி சின்னப்பிள்ளையா இருந்தப்ப ஒருதபா இப்படித்தான் பேஞ்சது. இப்ப என்னை அடிச்சினு போறதுக்குத்தான் திரும்ப வந்துனுக்கிதாட்டங்கிது.....' என்று ஊதக்காற்றுக்குத் தாங்காமல் நடுங்கும் குரலில் தனக்குத்தானே தன் பிராயத்தை சொல்லிக் கொள்வதைப் போல் முனகிக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு இப்போதும் எல்லாமே ஞாபகத்தில் இருக்கிறது. பேயாத மழை பேய்ந்து பெரிய நத்தம் ஏரி உடைந்து ஊரும் காடும் வெள்ளத்தில் முழுகியது அப்போதுதான். ஏரிக்கு கீழ்க்கரையில் இருந்த பூங்கரடு, பவளனூத்து, வேட்டக்குடி, வெள்ளிமுறி நாலு ஊருக்கும் சென்மத்தில் காணாத சேதாரம். சுவர் இடிந்தும் கூரை அமுங்கியும் நாலைந்து பேர் செத்துப் போனார்கள். வெள்ளாமை முழுசுக்கும் அழிமானம். விவரந்தெரிந்த நாளிலிருந்து வெளேரென்ற மணல்தட்டிக் கிடந்த மணியாற்றில் கரையைத் திமுத்து ஓடியது தண்ணி. செங்காமுட்டுப் பனையில் பாதி தண்ணிக்குள்ளிருந்தது. அப்படியொரு கோலத்தில் ஆற்றைப் பார்க்கிற ஆசை யாருக்குத்தான் இருக்காது? ஊரேதிரண்டு குமிந்தது கரையில். இவளும் சவ்வுக் காகிதத்தை தலையில் கொங்காடையாக மாட்டிக் கொண்டு, சித்தப்பனோடு பார்க்கப் போயிருந்தாள். காணியம்மன் தேருக்குக்கூட இப்படியொரு ஜனம் குமிந்து அவள் பார்த்ததில்லை. கரை முழுக்க ஜனமான ஜனம். பண்ணாடிகளும்கூட குடைபிடித்து வந்து வெப்பால மரத்தைத் தாண்டி கருங்கண்ணன் காட்டோரம் இருந்த பாறைகளில் ஏறி நின்று பார்த்தார்கள். இவள் உயரத்துக்கு தெரியாததால் சித்தப்பன் தோளேற்றிக் கொண்டான். ரண்டுப்பக்கமும் தாண்டுகால் போட்டு உட்கார்ந்து கொண்டு இவளும் பராக்கு பார்த்தாள்.

முனிமலை உச்சியிலிருந்து வகிடு மாதிரி தாழ இறங்குகிறது மணியாறு. எப்போதோ ஒரு காலத்தில் அது பொங்கிப் பெருகி பாய்ந்திருப்பதை இருமருங்கு கரையோரப் பாறைகளில் படிந்திருக்கும் நீர்த்தாரையைப் பார்த்தாலே தெரியும். 'இப்படி அனாமத்தாய் ஓடி சமுத்திரத்தில் எதுக்கு கலக்கணும்...' என்று ஒரு வெள்ளைக்காரன் நடுவாந்தரத்தில் வளைத்து நொய்யங்குழி அணைகட்டின பிற்பாடு, நிலைமை தலைகீழாகி விட்டது. மழைக் காலத்தில் மட்டும் முடி உதிர்ந்தவள் சடையாட்டம் சன்னமாய் கொடிவாய்க்கால் அளவுக்கு மணலை நனைத்துக் கொண்டு ஈரம் தெரியும். அப்படி இருந்த ஆறா இது... என்று அரட்டிக் கொண்டு ஓடியது இப்போது.

பாறைகளில் வெள்ளம் மோதித் தெறிக்கும் திவலைகள், புகையாட்டம் ஆற்றுக்கு மேல் மிதந்து நகர்ந்தது. செங்கரட்டிலிருந்து வடியும் தண்ணீரும் பாலக்குட்டை கணவாயில் ஆற்றோடு சேர்ந்து புது வெள்ளத்தின் நிறத்தை செம்மண் குழம்பு போலாக்கியிருந்தது. நேரமாக ஆக தண்ணி மட்டம் ஏறியது மேலுக்கு. அதுவரை பயமும் திகிலும் பரவசமுமாய் கரையிலிருந்தக் கூட்டம் தன்னையறியாது அடியடியாய் பின் வாங்கி நின்றது. மணல் மூட்டைகளை அடுக்கி முட்டுக்கொடுத்திருந்த வண்ணம்



படிப்பகம்

www.padippakam.com

பாளையம் ஏரியும் உடைந்து விட்டிருக் கலாம் என்று பேசிக் கொண்டனர். அது உடைந்திருந்தால் பத்திருவது ஊர்கள் ஜலசமாதிதான் என்றும் ஒரு குஞ்சுகுளு வான்கூட மிஞ்சாது என்றம் தனக்குத் தானே சொல்லிக் கொண்டான் சித்தப் பன். ஜவுரிக்கு முடி வாங்கிக் கொண்டு பட்டாணியும் பலூனும் தருகிற கப்பக் காலிக்கு வண்ணம்பாளையம்தான் ஊர். அவள் இனி வருவாளோ, மாட்டாளோ என்ற கவலை இவளுக்கு. தாவாரத் தண்டையில் சொருகி வைத்திருக்கும் முடிச்சுருணையை இனி யார் வாங்கிக் கொள்வார்கள் என்று யோசித்தாள்.

பாறைகளில் வெள்ளம் விளாறிய டித்து ஓடும்போது ஏற்படும் சத்தம் ஓங் காரமாய்க் கேட்டது நெடுந்தூரத்துக்கு. பராக்குப் பார்க்கப்போன பிள்ளை இன்னும் திரும்பாத பதட்டத்தில் கூட் டிப்போன கொழுந்தனைக் கறுவிக் கொண்டே அவள் அம்மாவும் கரைக்கு வந்து விட்டிருந்தாள். மகளைத் தேடி வந்தவள் பெருக்கெடுத்துப் பாயும் செந் தண்ணியைக் கண்டதும் சின்னப் பிள்ளை மாதிரி மிரண்டு போனாள். அவளும் ஆயுசுக்கு இப்படிப் பார்த்த வளில்லையே...'ஆத்துக்குன்னு ஒரு வழியிருக்கு, அது நம்ம மேல வந்து ஏறாது'ன்னு கொழுந்தன் தைரியம் சொன்னான். 'பயத்துல புள்ளைக்கு காய்ச்சகுளுரு வந்தா ஒங்கொண்ணனுக்கு ஜவாப்பு சொல்றது யாரு...' என்று நொடித்துக்கொண்டே 'வா யம்மா சாளைக்குப் போலாம்' என்று மகளை அழைத்தாள். மறுத்து தலையாட்டிய படி சித்தப்பனின் உச்சிமுடியை கோர்த் துப் பிடித்தாள் இவள். 'சின்னப்பிள்ளை யாட்டம் தோள்மேல ஒக்காந்துனு ரெம்பவும்தான் செல்லங் கொஞ்சறே... ஏய் இறங்கி வாடி' என்று அம்மா அதட் டியதும் இவள் அடம் பிடித்து அழு ததும் எப்டியோ போய்த்தொலை என்று அவள் விட்டுவிட்டதும்கூட இவளுக்கு மறக்கவில்லை.

மரம் மட்டை செடி செத்தை இன்ன தென்றில்லாமல் எல்லாமே கண்ணி மைக்கும் நேரத்தில் மிதந்தோடிப் போய் மறைகிறதாயிருந்தது ஆறு. சாளையின் கூரைகள் பாதி மூழ்கியும் மூழ்காமலும் ரங்கவட்டம் சுற்றிக் கொண்டு ஓடுவதைப் பார்த்து கூட்டம் அரற்றியது. அடித்துக்கொண்டுபோன ஆடு மாடு உருப்படிகள் ஒண்ணா ரண்டா...? நாயொன்று கரையேற மாட்டாமல் தத்தளித்துக் கொண்டு அண்ணாந்து ஊளையிட்டபடி ஆற்றின் போக்கில் போய்க்கொண்டிருந்தது. தீத் தான்கொல்லை பக்கத்தில் கரையி லிருந்த வாகை மரமொன்று பெருஞ்சத் தத்தோடு ஆற்றின் குறுக்கே சாய்ந்தது. நல்லவேளையாய் அந்த மரத்துக்குக் கீழே நாய் நின்றிருக்கவில்லை. பெருங் கூட்டு மரம் என்பதால் வெள்ளத்தை கிடையாய் மறித்துக்கொண்டு நின்ற அவ்விடத்தில் சுழிபோல ஆறு பொங்கி எதுக்களித்து ஓடியது திசைதப்பி. மேங் காட்டிலிருந்து அடித்துக் கொண்டு வந்த ஒரு மாட்டின் கொம்பு, மரத்தின் கிளை களில் சிக்கிக் கொண்டது. அது மேற் கொண்டு நகரமுடியாதபடி செருமிக் கொண்டு தீனமாய் கத்தியது.

சித்தப்பனும் அவனது சேக்காளி களும் எதையோ குசுகுசுத்தார்கள். பின், உங்கம்மா கையைப் பிடிச்சுக்க கண்ணு என்று தோளிலிருந்த இவளை இறக்கி அவளிடம் விட்டுவிட்டு எங்கோ ஓடிய வன், இரண்டு கயித்துச் சுருணைகளை தூக்கிவந்தான். பெத்தய்ய நாய்க்கர் காட் டோரமிருந்த விளாமரத்தில் ஒண்ணுங் கீழ் ஒண்ணாய் கயிறுகளைக் கட்டி மறு முனையை இடுப்பில் கட்டிக் கொண் டான். இவளும் இவங்கம்மாளும் சனங் களும் போட்ட கூப்பாட்டை அவன் சீந்தவேயில்லை. கீழேரிப்பள்ளம் தெக் கத்தியான் காட்டில் பண்ணையத்தில் இருந்தபோது, பெண்ணையாற்றில் ஆற்றுநீச்சல் பழகிய தைரியம் அவனுக் குள் பொங்கிக் கொண்டிருந்தது. ஆனால், காட்டாற்றுக்கு கரையுமில்லை வரையுமில்லை என்பதால்தான் இந்தக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு இறங்கு கிறான். எதற்கு இவன் ஆற்றுக்குள் இறங்குகிறான் என்று தெரியாத கூட்டம், அவனது சேக்காளிகளைத் திட்டிக் கொண்டே சேற்றுக்கட்டிகளை எடுத்து வீசி கரைக்கு அழைத்தது.

அவன் ஆற்றின் போக்கில் கைகளை நீளநீளமாய் விளாவிப்போட்டு, ஒரு தக்கையைப்போல மிதந்து மரத்தை நெருங்கினான். இப்போது ஆற்றின் போக்கை மறித்துக் கொண்டு குறுக்கு வாட்டமாய் மரத்தை நோக்கி அவன் கடக்க வேண்டியிருந்தது. வெள்ளம் அவனை உந்தித்தள்ளி இழுத்தது. நீந்தவும் முடியாமல் கால்பாவவும் ஏலா

**❝ என்னைத் தொட்டுப் பிடிக்கிற தைரியம் வந்துருச் சாடா ஒங்களுக்கு என்று திமிறினான் சொக்கன். உன்னைத் தொட்டதால இப்ப நீ கருகிட்டியா இல்ல நாங்க தான் கருகிட்டமா... என்ற கணவதி, சொக்கன் கையிலிருந்த பேட்டரியை பிடுங்கிக் கொண்டு மாட்டை நோக்கிப் போனான். ❞**

மல் பிடிமானமற்றுத் தத்தளித்தவன் மரக்கிளையொன்றைப் பற்றிக் கொள் வதற்குள் போதும்போதுமென்றாகி விட்டது. தவ்வித்தவ்வி நகர்ந்து மாட்டின் கழுத்தில் ஒரு கயிற்றால் படிமுடிச்சிட் டான். இன்னொரு கயிற்றை பின்னங் கால் பக்கம் போட்டு, முதுகுப்பக்கம் இழுத் துக்கட்டி விட்டால் மாட்டை இழுப்பது சுளுவாயிருக்கும். ஆனால், தண்ணிக்குள் முழுகினால்தான் உண்டு. கலக்கங் கண்ட புதுத்தண்ணியாயிருப்பதால் முழுகினாலும் எதுவும் நெப்பு நிதானம் தெரியவில்லை. ஆனது ஆகட்டுமென்று சிக்கையடித்தான். கரையிலிருந்த அவனது சேக்காளிகள் கயிற்றை இழுக்க, பின்னா லிருந்து இவன் உந்தித் தள்ளினான். மாட்டை கரை சேர்ப்பது பெரும்பாடாகி விட்டது. அது உயிரோடிருந்தது.

கயிற்றோடு மீண்டும் ஆற்றில் இறங்கப் போனவனை 'மறுக்கா எதுக்குப் போறே காளீப்பா...' என்று இவளம்மா தடுத்தாள். ஒண்ணும் ஆகாது என்று சொல்லிக்கொண்டே அவன் போய் மரத்தின் ஒரு கிளையில் வாகாக உட்கார்ந்து கொண்டான் இப் போது. மிதந்துவந்த சீலையொன்றை இழுத்துச் சுருட்டி கரைக்கு வீசினான். அது பாதியிலேயே விழுந்து சாயத் தண்ணி மாதிரி ஓடியது. தலைகுப்புறக் கவிழ்ந்து தக்கையாட்டம் தேலிக்கொண்டு வந்து ஒரு பிணத்தைக் கண்டு திகீரென் றானவன் என்ன செய்ய என்ற யோசிப் பதற்குள் அது கடந்து போய்விட்டது. கரையிலிருந்து அதப்பிடிடா பிடிடா என்று கூப்பாடிட்டனர். பிணத்தை எடுத்து எதற்காகும்... ஆள் யார் ஊர் எது என்று இந்த மழையில் தேடிக் கண்டு பிடித்து கொடுக்கிற பாடும் தன் அண்ண னுக்குத்தான் சேர்ந்துத் தொலையும்



படிப்பகம்

www.padippakam.com

என்று நினைத்துக் கொண்டதும்கூட, அவன் அந்தப் பிணத்தை போட்டுமென்று விட்டதற்கு காரணமாயிருக்கும்.

'ஒரு பறப்பயனுக்கு இருக்கிற தகிரியம் நம்மள்ல ஒருத் தனுக்கும் கெடையாதா...' என்ற மீசை கடித்த வேங்கான் மகன் சொக்கனிடம் 'ஆத்தோட போற மாட்டை அறுத்துத் தின்னா எவன் கேக்கப் போறாங்கிற துணிச்சல்ல எறங்கிப் புடிச்சிட்டான். மாட்டுக்காரன் மாட்டுக்கு அழுதானாம் பறையன் கொழுப்புக்கு அழுதானம்கிற கதையா இருக்கு இவனுகங்க பண்றது... இதுல நீயும் நானும் போட்டிப் போடணுமா...' என்றான் வெள்ளை. நம்ம கண்ணு முன்னாடியே எத்தினி ஆடுங்க அடிச்சினு போச்சு... ஒண்ணையாவது மறிச்சு தூக்கணும்னு நமக்குத் தோணலியே... அவன் என்னடான்னா பராக்கு பாக்க வந்த எடத்துல வூட்டுக்கு ஒருகூறு கறிக்கு வழி பண்ணிட் டான் பாத்தியா...' என்று மறுபடி கொதித்தான் சொக்கன். 'அதுக்கு ஏண்டா மருகா ஆத்ரப்படறே... அவங்களுக்கு ஒரு மாட்டைப் பிடிச்சவன் நமக்குன்னு ஒரு ஆட்டைப் பிடிக்கா மலாப் போயிடுவான்... கரைக்கு வரட்டும் பாத்துக்கலாம்...' என்று சமாதானம் சொன்னான் வெள்ளை. அவன் வாய் முகூர்த்தம் பலித்த மாதிரியே அடுத்தடுத்து ஒரு செம்பிலி யாட்டையும் மான் ஒன்றையும் மடக்கி கரைக்கு ஏற்றிவிட்டு தானும் கரை திரும்பினான் இவள் சித்தப்பன்.



கரைக்கு வந்தவன் தான் மீட்ட உருப்படிகளை ஒரு நோட் டம் விட்டான். அவை தண்ணியிலிருந்து மீண்டு தப்பித்த உணர்வின்றி இன்னும் நடுங்கிக் கொண்டே இருந்தன. மாட் டின் உடல் சிலிர்த்து சிலிர்த்து அடங்கியது. அதன் வயிறு உப் பசம் கண்டது போலிருந்தது. அடிக்கடி வாலைத் தூக்கி மூத் திரம் பெய்து கொண்டேயிருந்தது. சும்மாவே செருமிக்கிடக் கும் ஆடு நிலைகொள்ளாமல் துள்ளித்துள்ளி செருமி குடித்து விட்டிருந்த ஆத்துத் தண்ணியை வெளித்தள்ள பாடாய் பட்டுக் கொண்டிருந்தது. பயத்தில் புழுக்கையிடுவதற்குப் பதில் கழிச்சலைப் பீய்ச்சியது. மனிதர்களைக் கண்ட மிரட்சி யில் மானின் காதுகள் விடைத்துக் கிடந்தன.

குடை பிடித்து நின்றிருந்த பண்ணாடிகள், அவர்களுக்குள் குசுகுசுத்துவிட்டு 'நல்ல காரியம் பண்ணிட்டடா காளிப்பா... என்று பாராட்டினார்கள். பேச்சு இங்குமிங்குமாய் சுற்றியடித்து உருப்படிகளைப் பங்கு பிரிப்பதில் வந்து நின்றது. மாட்டை நீங்க எடுத்துக்குங்க... ஆடும் மானும் எங்களுக்கிருக்கட்டும்' என்பதாயிருந்தது பண்ணாடிகள் விருப்பம். 'உசுரை தண்ணி மேல எழுதி வச்சிட்டு ஆத்துல இறங்கினது நான். கரையிலி ருந்து இழுத்துப் போட்டது எங்காளுங்க. இதுல பங்கு பாகம்னு கேட்கிறது பண்ணாடிமாருக்குத் தகுமா சாமி...' என்றான் காளியப்பன். 'அடே, உங்கிட்ட யாரும் பஞ்சாயத்து பேசல. நாங்க பிரிச்சியுடறோம். அவ்வளவுதான்...' என்றான் வெள்ளை.

'பாத்தாலே தெரியலீங்களா பண்ணாடி அது செனைமாடுன்னு. வளக்க வேண்டிய சிசு அது வயித்துல இருக்கும்போது அறுத்துத் திம்பாங்களா யாராச்சும்... இந்த மாட்டை வேணும்னா பிடிச் சுக்கிட்டுப் போய் உங்க பட்டியிலியோ கட்டாந்தரையிலியோ கட்டிக்குங்க. எங்க பொண்டு புள்ளைங்க வயித்துல ஈரங்கண்டு ரண்டு நாளாச்சு. ஆடும் மானும் எங்களுக்கு வேணும்.....' என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே குடையை வீசி யெறிந்துவிட்டு அவன் மீது பாய்ந்தான் சொக்கன். காளியப் பன் விலகிக் கொள்ளவும் நிலைகுலைந்து விழுந்த சொக்கன், அவமானம் தாங்காமல் எழும்பும் நினைப்பற்று சேற்றிலேயே கிடந்தான். கூட்டம் ரெண்டுத் தரப்பாய் கிழிந்து முறுக்கியது.

'செத்தமாட்டைத் திங்கற நாய்ங்க செனமாட்டுக்கு கருணை காட்டுதுங்களேன்னு பொருமாதீங்க பண்ணாடி... பாவம் ரட்டைச்சீவன். இந்த மாட்டுக்கு ஒரு நாம்பு புல்லறுத் துப்போட எங்களுக்குன்னு கோமணத்தமுட்டு நெலம் நீச்சுகூட கிடையாது. அதனால அதை நீங்களே பிடிச்சுக்குங்க' என்ற சொல்லிவிட்டு, ஆட்டையும் கேளையையும் பிடித்துக் கொண்டு சேக்காளிகளோடு சேரிக்குத் திரும்பினான். இவளும் இவள் அம்மாவும் பின்னாலேயே ஓடினார்கள். பண்ணாடிங்கள பகைச்சிக்கிட்டா அவங்க நம்மள சும்மா விடுவாங்களா...? என்று வழிநெடுக புலம்பிக் கொண்டே வந்தாள் அம்மா.

கரையில் நடந்த சண்டையே மிச்சப்பொழுதின் பேச்சா யிருந்தது. கறியாக்கித் தின்னும் ஆசை யாருக்கும் தோன்றவே யில்லை. அடுப்பு மூட்ட காய்ந்த ஒரு சிமிறுகூட சேரிக்குள் யார் வீட்டிலும் இல்லாத நிலையில், இப்போதைக்கு கறி யறுக்க வேண்டாம் என்று பெண்கள் சிலர் சொன்னதும் சரி யென்றே பட்டது. விபரீதமான சூழலுக்குப் பொருந்த முடி யாமலும் புரியாமலும் காளியாத்தா கோயில் நடையில் மேமே என்ற ஆடு கத்திக் கொண்டேயிருந்தது. இதுவரை யிலும் பார்த்தேயிராத மானைச் சுற்றிக் குமிந்து பசியை மறக்கத் தொடங்கியிருந்தனர் குழந்தைகள். குளிரில் சிலிர்க்கும் மேனியில் புள்ளிவட்டங்கள் வினோதமாய் மாறும்போது மான் இன்னும் வேடிக்கைக்குரியதாயிருந்தது.

அந்தி சரியும்போது மீண்டும் மின்னல் வெட்டிக் கொண்டு மழையடிக்கத் தொடங்கியது. காலையிலிருந்து சிணுங்கிக் கொண்டிருந்த தூறல், இப்போது சடசடவென்று பெருமழையாகி இறங்கியது. ரெண்டு பக்கமும் திண்ணை வைத்து தரைக்கு காரை பூசியதாயும் மங்களூர் ஓடு போர்த் தியதாயும் இருந்த கோயில் மட்டுமே சேரியில் ஒழுகாததாய் இருந்ததால், மொத்தசனமும் அங்கேதான் அடைக்கலமென வந்து அண்டியிருந்தனர்.

அன்றிரவும் பிள்ளைகள் சோளப்பொறியைக் கொறித்து வயிறுமுட்ட தண்ணீரைக் குடித்துவிட்டு மானைச் சுற்றி சுருண்டு கிடந்தனர். பண்ணாடிமாருக்கும் இவங்களுக்கும் காலங்காலமாய் நடந்த சண்டைச் சச்சரவுகள், பஞ்சாயத்து கள், தீர்ப்புகள், தண்டனைகள் பற்றி தங்களது ஞாபகத்தைக் கிளறி கிளறி பெரியவர்கள் ஆளாளுக்கு ஒன்றாய் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பழையவை உண்டாக்கின பயமும் கோபமும் இருட்டில் வினோத உருவங்களாகி அலைந்து, அவர்களின் தூக்கத்தைப் பறித்து விழுங்கின. பொன்னு ருகியும்கூட கண்ணை மூட பயந்து இருட்டையே பார்த்துக்



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்தாள். இந்நேரம் இவ்விடத்தில் அப்பன் இருந்திருந்தால், அணைத்துக் கொண்டு தூங்கியிருக்க முடியுமெனத் தோன்றியது அவளுக்கு. ஆனால், சர்க்கார் தோட்டியான அவள் அப்பன், உடைந்து விட்ட ஏரியைப் பார்க்கப்போன முன்சீப்பையருடன் நேற்று சாயங்காலமே போக வேண்டியதாயிற்று. தண்ணிக்குள் முழுகிச் செத்தவர்களின் பிணங்களை போலிஸ் வந்து எடுத்துப் போகும்வரை, அங்கேயே இருந்து பிணங்களுக்கு பந்தோபஸ்து கொடுக்க வேண்டிய சர்க்கார் தோட்டி தன் மகளைத் தூங்க வைப்பதற்காக எப்படி வரமுடியும்?

தங்ஙளையும் மீறி சிலருக்கு கண் சொக்கும் நேரத்தில் மாட்டின் பெருஞ் சத்தம் கேட்டது. திண்ணையிலிருந்து இறங்கிவந்து தாவாரத்தில் நின்று உற்றுக் கேட்டான் கசாப்பு கோயிந்தன். வெள்ளத்தின் பேரிரைச்சலையும் மீறி ஆற்றங் கரைப் பக்கமிருந்து பேரோலமாய் எழுந்தது மாட்டின் கத்தல். நெடுநேரம் ஆற்றுக்குள் நின்றிருந்ததால் உடம்பில் ஏறிய சில்லிப்பில் வெடவெடத்து முடங்கியிருந்த காளியப்பனை உசுப்பி எழுப்பினான் கோயிந்தன். மாடு கத்தன சத்தம் கேட்டுச்சாடா உனக்கு...? என்றான். 'அவனுங்க அங்கயே உட்டுட்டுப் போய்ட்டாங்களாட்டங்கிது. ஆத்தங் கரையிலயேத்தான் இருக்காட்டங்கிது' என்றான். 'நாம காப்பாத்தின உசுரை அவங்களை நம்பி உட்டுட்டு வந்தது தப்பாப்போச்சே...' என்று கலங்கிய காளியப்பன் 'போய் பாத்துட்டு வரலாமா' என்றான். சித்தப்பனை கூப்பிட நினைத்தவள் அமைதியானாள்.

அடித்த கூதலில் ராந்தல் நெடுந் தூரம் தாங்கவில்லை. அப்படியும் இப்படியுமாய் அளைந்து கடைசியில் அந்த கைவிளக்கும் அணைந்துவிட்டது. கையிருப்பிலிருக்கும் தீக்குச்சிகள் விரயமாவதில் அவர்களுக்கு சம்மதமில்லை. ஜம்பமாய் கூத்தாடி முருகன் கொண்டு வந்திருந்த மூனுகட்டை பேட்டரி மின்னாம்பூச்சியாட்டம் மங்கியடித்தது. பந்தமாவது கொளுத்தி வந்திருக்கலாமென்றான் கணவதி. அந்த எண்ணையிருந்தா ஒரு நாள் சாளையில் வெளக்கெரிக்க ஆவும் என்று வாயடைத்தான் கொணபாலன். வேறுவழியில்லாமல் நடந்து பழகிய நெப்பிலும் கொடியோடப் படரும் மின்னல் வெளிச்சத்திலும் கரையை நோக்கி உத்தேசமாய் நடந்தார்கள். மழைக்காலிருட்டில் பாதை வழுக்கியது. நிதானங்கெட்டு கால் வைத்தால் ஊறிக்கிடந்த பூமி உள்ளிழுத்தது. கவனம் கவனம் என்று கடக்க வேண்டியதாயிற்று ஒவ்வொரு அங்குலத்தையும்.

மாடு மறுபடி கத்தாமலிருப்பது கிறுத்து காளியப்பனுக்கு சற்றே ஆசுவாசம் வந்தது. கரையை நெருங்க நெருங்க மாட்டின் பெருமூச்சு சீரற்று இரைந்து கேட்டது. வெள்ளத்தில் சிக்கி இழுபட்டு வந்ததில் சினை தங்காமல் இறங்கியிருக்குமோ... பூச்சிப்பொட்டு எதாச்சும் கடித்திருக்குமோ... என்று பலவாறாய் தனக்குள் புலம்பி நடந்தான். வெள்ளத்தின் பேரிரைச்சல். இடி மின்னல். இருட்டு. தனியாக் கெடந்து என்ன தவுதாயம் பட்டதோ மாடு என்று நினைத்துக் கொண்டபோது, அவனுக்குத் தன் மீதே வெகாளம் பாய்ந்தது. ஆனது ஆகட்டுமென்று சாயங்காலமே அதையும் இழுத்து வந்து கோயிலடியில் கட்டியிருக்கணும் என்ற நினைப்பை அறுத்துக் கொண்டு யாரோ ஓடுவது கேட்டது.

யார்ரா அது என்ற கத்திக்கொண்டே காலடியோசையை விரட்டிப்ப பாய்ந்தார்கள் இருட்டுக்குள்ளேயே எல்லோரும். தாங்கள் விரட்டுவது மனிதனையா, விலங்கையா, எதுவுமற்ற நினைப்பையா என்று யோசிக்க அவகாசமில்லை அவர்களுக்கு. யாரோ விழுந்து அலறியதைப் பொருட்படுத்தாது ஓடிய உருவத்தின் மூச்சிரைப்பையே அவர்கள் துரத்த வேண்டியதாயிற்று. ஒரு மின்னல் வெட்டில் ஓடிக்கொண்டிருந்த சொக்கன் எல்லோருக்கும் பிடிபட்டுப் போனான்.

காளியப்பன் பிடி அவன் உடம்பில் ஈரக்கயிற்றைப் போல் இறுகிக் கொண்டிருந்தது. என்னைத் தொட்டுப் பிடிக்கிற தைரியம் வந்துருச்சாடா ஒங்களுக்கு என்று திமிறினான் சொக்கன். உன்னைத் தொட்டதால இப்ப நீ கருகிட்டியா இல்ல நாங்கதான் கருகிட்டமா... என்ற கணவதி, சொக்கன் கையிலிருந்த பேட்டரியை பிடுங்கிக் கொண்டு மாட்டை நோக்கிப் போனான். பிடியைத் தளர்த்தாமல் சொக்கனை இழுத்துக்கொண்டு காளியப்பனும் அவனுக்குப் பின்னே மற்றவர்களும் நடந்தனர். என்னை விடுடா தேவிடியா பெத்ததே என்று திமிறிக் கொண்டே இருந்தான் சொக்கன். 'பறையன் தானம் பண்ணித்தான் எங்க பண்ணையத்துல மாடுகன்னு பெருகணுமாடா' என்று பொருமினான். ஒருவரும் மறு வார்த்தை பேசவில்லை.

**“ உசுரை தண்ணி மேல எழுதி வச்சிட்டு ஆத்துல இறங்கினது நான். கரையிலிருந்து இழுத்துப் போட்டது எங்காளுங்க. இதுல பங்கு பாகம்னு கேட்கிறது பண்ணாடிமாருக்குத் தகுமா சாமி...' என்றான் காளியப்பன். ”**



மாடு சரிந்து கிடந்தது. அதன் வயிற்றில் கடப்பாறை மின்னியது. கடப்பாறை இறங்கிய இடத்திலிருந்து ரத்தம் கொப்பளித்து பெருகிக் கொண்டிருந்தது. எங்களுக்குன்னு கொடுத்த மாட்டை நாங்க எதுவுஞ் செய்வோம் என்றான் சொக்கன். யாருக்கும் எதுவும் பேசத் தோன்றவில்லை. ஆவேசம் வந்தவனாகி அவனை குண்டுக்கட்டாக தூக்கி ஆற்றின் திசையில் வீசினான் காளியப்பன்.

தெறித்து விழுந்தத் தண்ணீரை துடைத்துக் கொள்ளவும் நினைப்பில்லாமல் அங்கேயே கொஞ்சநேரம் நின்றிருந்தவர்கள் எதுவும் பேசிக் கொள்ளாமல் திரும்பினர்.

மாட்டைக் கொன்றுவிட்டு சொக்கன் எங்கோ ஓடிப் போய்விட்டான் என்றே இன்றும் பேச்சிருக்கிறது ஊருக்குள். இத்தனை வருஷங்கழித்து இப்படி பெருக்கெடுத்தோடும் மணியாற்றில் அவன் பிணம் மிதந்து வந்தால் எப்படியிருக்கும் என்று பொன்னுருகிக் கிழவி நினைத்துக் கொண்டபோது அவளுக்கு சிரிப்புதான் வந்தது. ஒழிஞ்சது பீடை என்று சொல்லிக்கொண்டே தூங்கடா பொண்ணு என்று மார் மீது கிடத்திக் கொண்ட சித்தப்பனின் நினைப்பு அவ்விடத்தில் கதகதவென்று பரவியது. மானின் புள்ளிவட்டங்களை கண்விரியப் பார்த்து வியந்த பொன்னுருகி என்னும் குட்டிப் பெண்ணாக தான் மாறிக் கொண்டிருப்பதாய் நினைத்துக் கொண்ட கிழவிக்கு இப்போது குளிரவில்லை. ●



படிப்பகம்

www.padippakam.com

## மடல்கள்




■ மேலவளவு வழக்கு பற்றிய விரிவான கட்டுரை, ஓர் ஆவணமாகப் பயன்படுத்த மிகவும் பயனுள்ளதாக இருந்தது. தலித் மக்களின் நீதிக்கானப் போராட்டத்தில் ஏற்படும் சட்ட ரீதியான இடர்ப்பாடுகளை வழக்கறிஞர் பொ. ரத்தினம் விவரித்திருப்பது, இனிவரும் வழக்குகளுக்கான ஒரு பாடமாக அமைந்துள்ளது. 'தலித் முரசு'க்கு விருது கிடத்தமைக்குப் பாராட்டுகள்.

*சி. பிரமிளா, ஈரோடு*

■ 'ஆதிக்க வேரறுப்போம்' தலையங்கத்தின் மூலம் பார்ப்பனிய எதிர்ப்பின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டேன். வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என்று ஏமாற்றி மக்களைச் சுரண்டிப் பிழைத்த பார்ப்பனக் கூட்டம், இன்று அரிவாளைத் தூக்கும் அளவுக்குத் துணிந்து விட்டதா? அம்பேத்கர் அறிவுறுத்தியது போல் புத்தர் வழி நின்று பார்ப்பனியத்தை வேரறுக்க வேண்டும்.

*பொ. சிவஞானராசா, பிரான்ஸ்*

■ சனவரி இதழில் தலித் சுப்பையாவின் பேட்டி, நெஞ்சை உருக்குவதாக இருந்தது. பார்ப்பனியம் அனைத்து சாதிகளிலும் வேர் பிடித்துப் பேயாட்டம் போடுவது, கள்ளர், கோனார் முதலிய இடைப்பட்ட சாதிகளின் வெளிச்சத்தில் தெரிகிறது. இவர்கள் பார்ப்பனர்களை எதிர்க்கும் உரிமையை இழந்து, அடிமைகளாக இன்றும் உழல்வதைப் பார்க்க முடிகிறது. த.மு.எ.ச.வின் முப்பெரும் விழாவின் சாதிக் கூத்தை நல்ல வண்ணம் அம்பலப்படுத்தி இருந்தீர்கள். கலிபோர்னியாவின் 'அம்பேத்கர் இன்டர்நேஷனல் மிஷன்' 'தலித் முரசு'க்கு விருது வழங்கியது, முற்றிலும் இயல்பான செயலே.

*சங்கமித்ரா, வண்டலூர் வாயல்*

■ மால்கம் எக்ஸ் தொடரை வெளியிட்ட 'தலித் முரசு' அவ்வப்போது அவர் குறித்த சிறப்புக் கட்டுரைகளையும் வெளியிடுவது - மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்துகிறது. 'இன இழிவுக்கு இஸ்லாமே நன்மருந்து' என்றார் பெரியார். அந்த வகையில் இனவெறிக்கு எதிராக இஸ்லாத்தை ஆயுதமாகப் பயன்படுத்திய அமெரிக்கப் பெரியாரே மால்கம் எக்ஸ். இந்துத்துவத்தை முறியடிக்க, நாமும் மால்கம் எக்ஸ் கொள்கையை இங்கு பிரச்சாரம் செய்வோம்.

*எச்.எஸ். முகம்மது ரபி*
*ராமேஸ்வரம்*

## எது முதல் மொழிப் போர் தியாகிகள் நாள்?

செம்மொழியாகிவிட்ட தமிழின் வரலாறுகூட இன்னும் சரியாக எழுதப்படவில்லை. மொழி வரலாற்றை எழுதுவதற்கு நம்பகமான ஆதாரமாகக் கருதப்படும் கல்வெட்டுகள், இந்தியாவிலேயே தமிழ் நாட்டில்தான் அதிகமாக சேகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை சேகரிக்கப்பட்டுள்ள சுமார் இருபத்தைந்தாயிரம் கல்வெட்டுகளில், அய்ந்தாயிரம் கல்வெட்டுகள் மட்டுமே பதிப்பிக்கப்பட்டுள்ளன. இப்படியான காரணங்களால் தமிழை உருவாக்கியவர்கள் யாரென்ற வினா, விடை காணப்படாமலே கிடக்கிறது. பூர்வ பவுத்தர்களே 'தமிழ் பிராமி' என்ற தமிழின் ஆதி வரிவடிவை அறிமுகப்படுத்தியவர்கள் என்ற கருதுகோள், அகழ்வாய்வுகளால் மென்மேலும் மெய்யாகி வருகிறது.



மொழியை யாத்த வரலாற்றை மட்டுமல்லாது, மொழியைக் காத்த வரலாற்றையும் இந்த சாதிக்காரர்கள் திரிக்கப் பார்க்கின்றனர். அதனால்தான் இப்போதும், முதலாம் மொழிப் போரில் முதலில் தனது உயிரை ஈகம் செய்த நடராசனின் தியாகம் புறந்தள்ளப்படுகிறது. அவன் சேரிக்காரன் என்பதால் அவனது உயிர்த்தியாகமும்கூட, தீண்டத்தகாததாய் ஆகிவிட்டது போலும்!

தமிழகத்தில் நடந்த முதல் இந்தி எதிர்ப்புப் போரில் (1938) ஈடுபட்டு, 1939 சனவரி 15இல் தமிழ் மொழிக் காப்பிற்காக முதல் உயிர்த்தியாகம் செய்தவர் எல். நடராசன் என்னும் தலித் சமூகத்தைச் சேர்ந்தவரே ஆவார். அவருக்கு அடுத்தே 1939 மார்ச் 11இல் தாளமுத்து என்னும் சகோதரர் உயிர்த்தியாகம் செய்தார். ஆனால், வரலாற்று ஏடுகளில்/ பெயர் சூட்டலில் 'தாளமுத்து - நடராசன்' என்று தாளமுத்து முன்பாகவும், நடராசன் இரண்டாவதாகவுமே மோசடியாக எழுதப்படுகிறது.

மொழிப்போரை முதலீடாக்கி அதிகாரத்தைக் கைப்பற்றிய திராவிட முன்னேற்றக் கழகம், நடராசனின் பெயரை இரண்டாம் இடத்துக்கு ஒதுக்கித் தள்ளியது. அதை ஒரு வரலாற்று உண்மையாக மாற்றும் பொருட்டு, அரசு மாளிகையொன்றுக்கு தாளமுத்து நடராசன் என்ற பிழையான வரிசையில் பெயர் சூட்டியது. முதல் மொழிப் போருக்கு சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு நடந்த போராட்ட நாளையே மொழிப்போர் தியாகிகள் நாள் எனவும் அறிவித்து, வரலாற்று மோசடியை அரங்கேற்றியது. அ.தி.மு.க.வும் இந்த விஷயத்தில் தி.மு.க.வின் கிளைக் கழகமாகவே செயல்பட்டு, அதே வரலாற்றுப் பிழையை வழிமொழிந்தது.

எல்லாத் தளங்களிலும் தமது அடையாளங்களை மீட்டெடுக்க முனைந்துள்ள தலித் மக்கள், இப்போது மொழிப்போர் வரலாற்றை நேர் செய்யும் விதமாக - நடராசன் உயிர் நீத்த சனவரி 15 ஆம் நாளை மொழிப்போர் தியாகிகள் நாள் என அறிவித்து முழங்குகின்றனர். மொழிப் போரில் முதல் பலியானவர் எல். நடராசன். அவர் இறந்த நாளே மொழிப் போர் தியாகிகள் நாளாகும்.

*அயோத்திதாசர் ஆய்வு மய்யம் - மதுரை, வெளியிட்டுள்ள துண்டறிக் கையிலிருந்து ஒரு பகுதி.*

Edited and Published by M. Punitha Pandiyan on behalf of Dr. Ambedkar Centre, 203, Jayam Block - Chitra Avenue, 9, Choolaimedu High Road, Chennai - 94, Printed by Y.S. Raj at Harijana Muzhakkam Printers, No. 46, Vizhagathottam, Saidapet, Chennai - 15



படிப்பகம்

www.padippakam.com







**வரப்புயர நீர் உயரும்**
- அவ்வையார்

**உழைப்புயர வாழ்வு உயரும்**
- சுதேசி பாரதி பஞ்சாலை

**எமது ஆலைகள்**
**பாரம்பரியம் படைத்தவை**
**நாகரீகத்தில் உயர்ந்தவை**

**ஆலைகளில் உற்பத்தி**
**நிரந்தரமான தரம்**
**நியாயமான விலை**

**தரமான நூல் வழங்கிடவும்**
**நயமாக சாயமேற்றித் தரவும்**
**எப்போதும் உங்களின் சேவையில் எங்களை ஈடுபடுத்திக் கொள்ளும்**

**M. கந்தசாமி**
தலைவர்
சுதேசி - பாரதி பஞ்சாலைகள் வரை நிலைக் கழகம்
புதுச்சேரி

No. 773/DIP/PRA/PRESS/2005 - 2006 / S - 59

படிப்பகம்

www.padippakam.com

# "அவுங்களுக்கு தண்டனை கிடைச்ச பிறகு நிலைமை மாறியிருக்கு"

**மேலவளவு வாக்குமூலங்கள் உணர்த்தும் உண்மைகள்**

மேலவளவிலிருந்து - கோ. சுகுமாரன்; வாக்குமூலங்கள் தொகுப்பு : முருகப்பன்; புகைப்படங்கள் : பாலா



அம்மாசி - தொம்பா (எ) சேவி

❝ சமூக இயலாமைகள் ஒழிப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்து அய்ந்து ஆண்டுகள் ஆனபின்பும் 'ஹரிஜன'ங்களின் பல்வேறு சிவில் இயலாமைகள், நமது கிராமங்களில் இன்னமும் நீடிப்பது வருத்தமளிக்கிறது. மதுரை மாவட்டம் மேலூர் வட்டத்தில் 'ஹரிஜன'ங்கள் மீதான சமூகத் தடைகளை ஒழிப்பதற்கு - 'அகில இந்திய ஹரிஜன சேவக் சங்கம்' தனது தீவிர இயக்கத்தைத் தொடங்கி, இப்போது 9 மாதங்கள் ஆகிவிட்டன. இந்தக் காலத்தில் டீக்கடைகள், முடி திருத்தும் நிலையங்கள், கிணறுகள், குளங்கள், சாவடிகள் முதலானவற்றில் 'ஹரிஜன'ங்களுக்கு உள்ள தடைகள் பற்றிப் பிரச்சாரம் செய்யப்பட்டது. சில இடங்களில், இந்தச் சட்டத்தைப் பிரச்சாரம் செய்து அதை நடைமுறைப்படுத்த வேண்டிய கிராம் முன்சீபுகளே மிகப் பிற்போக்கானவர்களாகவும், 'ஹரிஜன'ங்கள் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்துவதற்கு இடையூறாகவும் இருக்கிறார்கள். நம் சமூகத்தில் 'ஹரிஜன'ங்களுக்கெதிரான பாரபட்சம், எவ்வளவு ஆழ்ந்து வேரூன்றியுள்ளது என்பதைக் காட்டுவதற்குச் சில சம்பவங்கள் கீழே தரப்படுகின்றன.

... மேலவளவு என்ற இடத்தில், நான் இரண்டு 'ஹரிஜன' பையன்களுடன் ஒரு டீக்கடைக்குச் சென்றபோது, அங்கு ஒரு குழுவினர் என்னைத் தாக்குவதாக அச்சுறுத்தி, அந்தப் பையன்களை விரட்டிவிட்டார்கள். டீக்கடைக்காரர் வேண்டுமென்றே ஒரு கண்ணாடித் தம்ளரை உடைத்தார். அங்கிருந்தவர்கள் எல்லோரும் அதற்கு நான் பணம் கொடுக்க வேண்டும் என்றும், இல்லாவிட்டால் அடிபடுவேன் என்றும் சொன்னார்கள். ஆனால், நான் அருகிலிருந்த தொடக்கப்பள்ளியில் போய்ப் புகலடைந்தேன். பஞ்சாயத்து வாரியத் தலைவர் தலையிட்டபின் கூட்டத்தினர் மறைந்து போனார்கள்.

கீழவளவு என்ற இடத்தில் ஹரிஜனங்கள் அழுக்கடைந்த ஒரு குட்டையிலிருந்து தண்ணீர் எடுக்கிறார்கள். அதில் மனிதர்கள் குளிக்கிறார்கள். மாடுகளும் குளிப்பாட்டப்படுகின்றன. ஹரிஜனங்கள் பொது ஊருணியில் போய்த் தண்ணீர் எடுக்குமாறு ஹரிஜனங்களுக்கு தைரியம் சொல்லப்பட்டது. ஆனால், அவர்கள் சென்றபோது சாதி இந்துக்கள் அவர்களைத் திட்டி மிரட்டினார்கள். அதனால் ஹரிஜனங்கள் ஊருணியில் தண்ணீர் எடுக்கத் துணியவில்லை. கீழவளவில் காவல் நிலையம் ஒன்று இருக்கிறது. ஆனால், அங்குள்ள காவலர்கள் ஹரிஜனங்களின் இந்தக் கஷ்டங்களைப் பற்றி அலட்சியமாயிருக்கிறார்கள். ஆட்டுக்குளம் என்ற இடத்தில் நாங்கள் கூறியபடி பொதுக் கிணற்றில் தண்ணீர் எடுத்த ஹரிஜனங்களைச் சாதி இந்துக்கள் தடுத்து நிறுத்த முடியவில்லை. அதனால் அவர்கள் அந்தக் கிணற்றில் மலத்தைப் போட்டார்கள். எட்டிமங்கலத்தில் ஊர்ச் சாவடியில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தபோது ஹரிஜனங்கள் அங்கு நுழைந்தார்கள் என்பதற்காக, அவர்கள் அரசுப் புறம்போக்கு நிலத்தில் போட்டிருந்த நெல் நாற்றாங்காலைச் சாதி இந்துக்கள் அழித்துவிட்டார்கள். இதைப்பற்றி ஹரிஜனங்கள் கொடுத்த புகார் மீது காவல் துறையினர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.....

மேலூரிலிருந்து இரண்டு மைல் தொலைவில் உள்ள நாவினிப்பட்டியில் ஹரிஜனங்கள் பொங்கல் பண்டிகையின்போது நல்ல ஆடை அணிந்ததைக் கிராம முன்சீபே ஆட்சேபித்திருக்கிறார். அவர் இரண்டு ஹரிஜன இளைஞர்களைச் சட்டையையும் மேல் துண்டையும் அகற்றிவிடச் செய்தார். மேலும் அவர்களைக் கீழே விழுந்து கும்பிடச் செய்து, கோவணத்துடன் மட்டும் போகச் செய்தார்.

மிகவும் வேதனையளிக்கும் ஒடுக்குமுறை, மதுரை நகரிலிருந்து பத்து மைல் தூரத்தில் உள்ள மண்குளத்தில் நடந்தது. அந்த ஊரில் டீக்கடையில் நுழைய அனுமதி மறுக்கப்பட்ட இரண்டு ஹரிஜன இளைஞர்கள், காவல் துறையினரிடம் புகார் செய்ததற்காக கிராம முன்சீப் அவர்கள் மீது கோபம் கொண்டார். ஊர்ப் பெரியவர்கள் அவர்களில் ஒருவரைத் தூணில் கட்டி வைக்கச் செய்து, சாதி இளைஞர் ஒருவரைவிட்டு இரக்கமின்றி அடிக்கச் செய்தார்கள். மற்றொரு ஹரிஜன், கிராம முன்சீபின் வேலையாளால் கத்தியால் தாக்கப்பட்டார். ஹரிஜனங்கள் ஊருணியிலிருந்து தண்ணீர் எடுத்ததற்காக, அவர்களைச் சமூகப் புறக்கணிப்பு செய்து அவர்களுக்கு வேலை கொடுக்க மறுத்தார்கள். கடைக்காரர்கள் அவர்களுக்கு உணவுப் பொருள்களை விற்க மறுத்து, இரண்டு நாள்கள் பட்டினியாயிருக்க வைத்தார்கள். வருவாய்க் கோட்ட அதிகாரி தலையிட்ட பின்புதான் நிலைமை சீரடைந்தது.

சமீபத்தில் இரண்டு ஹரிஜனங்களும் நானும் குளத்தில் குளித்துவிட்டுச் சாவடியின் எதிரே இருந்த காப்பி கிளப்பில் நுழைந்ததற்காகச் சாதி இந்துக்கள் விறகுக் கட்டைகளால் அடித்தார்கள். நாங்கள் மதுரை அரசு மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றோம். எனக்கு வலது பாதத்தில் எலும்பு முறிவு ஏற்பட்டதால், வலது காலை ஊன்றி நடக்க முடியவில்லை. கிராம முன்சீப் உள்ளிட்ட 16 பேர் மீது காவல் துறையினர் குற்றச்சாட்டு பதிவு செய்திருக்கிறார்கள்..... ❞

- 'தென்னிந்தியாவில் ஹரிஜனங்களின் துன்பங்கள் : ஒரு சமூகத் தொண்டரின் அனுபவம்' என அகில இந்திய ஹரிஜன சேவக் சங்கத்தின் மண்டல அதிகாரி ஸ்வாமி ஆனந்த தீர்த்தர் கூறியுள்ளதை, டாக்டர் அம்பேத்கர் குறிப்பிட்டு தீண்டாமை, தீண்டப்படாதவர்கள் பற்றி நூல் ஒன்றினை எழுதியுள்ளார்.

அண்ணல் அம்பேத்கர் குறிப்பிட்டுள்ளபடி, அன்றைக்கு மதுரை மாவட்டத்தில் அதுவும் குறிப்பாக மேலூர் வட்டத்தில் தீண்டாமைக் கொடுமை, எந்தெந்த வடிவங்களில் நிலவியதோ, அதே போன்ற நிலை இன்றைக்கும் அப்பகுதிகளில் தொடர்வது, தலித்துகள் தங்கள் விடுதலைக்கு நீண்ட நெடிய போராட்டங்களையும் தியாகங்களையும் செய்ய வேண்டியதை வலியுறுத்துகிறது.

மேலவளவு ஊராட்சித் தலைவர் முருகேசன் உள்ளிட்ட ஆறு தலித்துகள் கொல்லப்பட்ட வழக்கு, தற்போது சென்னை உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கை நடத்திவரும் உயர் நீதிமன்ற வழக்கறிஞர் பொ. ரத்தினம், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று மேலவளவு வழக்கு குறித்து விளக்கமளித்து, நீதி கிடைக்க ஆதரவு திரட்டி வருகிறார். இதன் ஓர் அங்கமாக, 1.1.2006 அன்று புதுச்சேரியில் நடைபெற்ற



படிப்பகம்

www.padippakam.com

கூட்டத்தில் மேலவளவு கிராமத்திற்கு நேரடியாகச் சென்று உண்மை நிலையை அறிய தீர்மானிக்கப்பட்டது.

7.1.2006 அன்று வழக்கறிஞர்கள் பொ. ரத்தினம், பகத்சிங், அழகுமணி, பூபால், சுரேஷ், ராபர்ட் சந்திரகுமார், கோ. சுகுமாரன் (மக்கள் உரிமைக் கூட்டமைப்பு), மு.முத்துக்கண்ணு (இந்திய சமூக செயல்பாட்டுப் பேரவை), ரா. முருகப்பன் (பழங்குடி இருளர் பாதுகாப்புச் சங்கம்), ம. இளங்கோ (தந்தை பெரியார் தி.க.), ரா. கலியபெருமாள் (நகராட்சி/கொம்யூன் பஞ்சாயத்து எஸ்.சி./எஸ்.டி. ஊழியர் ஒருங்கிணைப்பு), பாவாடைராயன், வேல்முருகன் (புரட்சியாளர் அம்பேத்கர் தொண்டர் படை), கோவிந்தசாமி (சமூக நீதிப் போராட்டக் குழு), பினேகாஸ் (சட்டக் கல்லூரி மாணவர்), பாலா (பத்திரிகையாளர்) ஆகியோர் அடங்கிய குழு, மேலவளவு சென்னகரம் பட்டி உள்ளிட்ட கிராமங்களுக்குச் சென்று வந்தது. பாதிக்கப்பட்ட மக்களை நேரில் சந்தித்து ஆதரவு அளித்தது.

இன்றைக்கும் தலித்துகள் செருப்புப் போடக் கூடாது, மேல் சட்டை, துண்டு அணியக்கூடாது என கள்ளர்கள் சட்டம் போட்டு வைத்திருப்பதாக மேலவளவு, சென்னகரம்பட்டி தலித்துகள் கூறினர். கள்ளர்கள், தலித்துகளோடு பேசினால் ரூ. 60 அபராதமாக ஊர்ப் பொதுவுக்கு செலவிட செலுத்த வேண்டும் என்ற நிலை உள்ளது. தலித்துகள் மீது நடத்தப்படும் அத்துமீறல் குறித்து காவல் நிலையங்களில் புகார் கொடுத்தால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை. கள்ளர்கள் மிரட்டி புகாரைத் திரும்ப பெறச் செய்துவிடுகின்றனர். மேலவளவு முருகேசன் வழக்கில் தண்டனை கிடைத்த பிறகு, ஓரளவுக்கு நிலைமை மாறி வருவதை அறிய முடிந்தது. வன்கொடுமைத் தடுப்புச்சட்டத்தை முறையாக செயல்படுத்தினால், தலித்துகள் மீதான வன்முறை ஓரளவுக்குத் தடுத்து நிறுத்தப்படும் என்பதை மேலவளவு வழக்கில் குற்றவாளிகளுக்கு வழங்கப்பட்ட தண்டனை தெளிவாக்குகிறது.

மேலவளவு தலித்துகள் ஓரளவிற்கு குறைந்த அளவில் நிலம் உடையவர்களாகவும், படித்தவர்களாகவும் இருப்பதனால் தீண்டாமை - சாதிய அழுத்தத்திலிருந்து விடுபட வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கி இருக்கிறது. ஆனால், மேலவளவு கிராமத்தில் 6,000 கள்ளர் குடும்பம் இருப்பதால் வேறு வழியில்லாமல் தலித்துகள் கள்ளர்களுக்கு அஞ்சி வாழ வேண்டிய நிலையே தொடர்கிறது. இதுபோன்ற சூழலில், டாக்டர் அம்பேத்கர் வலியுறுத்திய தனிக் குடியிருப்பு முறை மிகவும் அவசியமானதாகிறது.

மேலவளவு வழக்கு உயர் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வேளையில், குற்றவாளிகள் யாரும் தப்பிவிடக் கூடாது என்பதை தலித்துகள் அனைவரும் வலியுறுத்தினர். இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியான ராமர் சிறையில் இருப்பது, தலித்துகளுக்கு ஓரளவுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்கியுள்ளது.

1992இல் கோயில் நிலத்தை குத்தகைக்கு எடுத்த காரணத்தினால் சென்னகரம்பட்டியைச் சேர்ந்த தலித்துகள் அம்மாசி, வேலு ஆகியோர் கழுத்தை அறுத்துக் கொல்லப்பட்டனர். இதில் முக்கியக் குற்றவாளியான ராமர், இவ்வழக்கில் இதுவரையில் கைது செய்யப்படவில்லை. 1992இல் நடந்த இக்கொடூர கொலை வழக்கில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டும் இதுநாள் வரையில் வழக்கு விசாரணை நடைபெறவில்லை. தமிழக அரசும், நீதித்துறையும் இதுபற்றி துளியும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.



முருகேசன் தனது மனைவியுடன்

அம்மாசி, வேலு கொலை செய்யப்படுவதற்கு முதல் நாளன்று குத்தகை எடுத்த நிலத்தில் நாற்று நட்ட காரணத்திற்காக ராமர் தலைமையில் கள்ளர்கள், சென்னகரம்பட்டி தலித்துகளைத் தாக்கியுள்ளனர். இதில் அம்மாசியின் மனைவி தொம்பா உள்பட 5 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். அப்போது, தாக்கியவர்கள் மீது கொலை முயற்சி வழக்கு பதியப்பட்டது. தி.மு.க. ஆட்சியில் சாதிக் கலவர வழக்குகளைத் திரும்பப் பெற்றபோது, இவ்வழக்கும் போதிய காரணமின்றி திரும்பப் பெறப்பட்டது. இதை எதிர்த்து பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் தொடரப்பட்ட வழக்கில், 'இவ்வழக்கை மீண்டும் விசாரிக்க வேண்டும்' என சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதை எதிர்த்து ராமர் தரப்பினர் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கில் - உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ரத்து செய்து நீதிபதி கண்ணதாசன் உத்தரவிட்டார். குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பிவிட்டனர். இத்தாக்குதலில் பாதிப்பிற்குள்ளான அம்மாசியின் மனைவி, ஓராண்டு கழித்து இறந்து போனார்.

நன்கு அறியப்பட்ட சென்னகரம் பட்டி, மேலவளவு வழக்குகளின் நிலையே இதுவென்றால், அறியப்படாத தலித்துகளின் மீதான வன்கொடுமைகளுக்கு நீதி எட்டாத ஒன்றுதான்.

சமூக விடுதலையை ஒதுக்கித் தள்ளிவிட்டு, தலித் இயக்கங்கள் தேர்தல் கூட்டணியில் மூழ்கி இருக்கும் நேரமிது. சாதிய - தீண்டாமைக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுவதும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்படி குற்றமிழைத்துள்ள ஆதிக்கவாதிகளுக்கு தண்டனை பெற்றுத் தந்து, தலித்துகளை அடக்குமுறைகளிலிருந்து காப்பதும்தான் நம்முன்னுள்ள கடமை. தற்போதுள்ள அமைப்பு முறையில், சட்டமன்ற உறுப்பினர்களாவும் - நாடாளுமன்ற உறுப்பினர்களாவும் தலித்துகளை அரசியல் அதிகாரத்தை நோக்கி அழைத்துச் செல்லலாம். ஆனால், தலித்துகளின் விடுதலை இதனையும் கடந்தது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**“இன்றைக்கும் தலித்துகள் செருப்புப் போடக் கூடாது, மேல் சட்டை, துண்டு அணியக்கூடாது என கள்ளர்கள் சட்டம் போட்டு வைத்துள்ளனர். கள்ளர்கள், தலித்துகளோடு பேசினால் ரூ. 60 அபராதமாக ஊர்ப் பொதுவுக்கு செலவிட செலுத்த வேண்டும் என்ற நிலை உள்ளது.”**



படிப்பகம்

www.padippakam.com

**எஸ் செல்லம்மா (42) :** நான் பிறந்தது தும்பப்பட்டி. கக்கன்ஜி பிறந்த ஊரு. கக்கன் வகையறாவுல எனக்கு அவர் தாத்தா. எங்க அப்பா பேரு மொந்தையன். நானும் கொஞ்சம் கொஞ்சமா கட்சியில இருந்து மாதர் சங்கத் தலைவியா ஆனேன். அப்போது 100 பட்டா வாங்கிக் கொடுத்தேன். அரசாங்கத்துல வீடு கட்டிக் கொடுத்தாங்க.

நம்ம சமுதாயத்துக்கு ஊருக்கு நான் நல்லதுதான் செய்து வரேன். அப்புறம் முருகேசன் தேர்தல்ல நின்ன பின்னாடி சம்ப வத்துக்கப்புறம் என்னை நிக்கச் சொல்லி, மதுரை கலெக்டர் காசி விஸ்வநாதன் ஆளனுப்பினார். நான் அப்பா வீட்டில் இருந்தேன். அப்ப நான் சொன்னேன், வேண்டாம் ஆம்பள பயலுவ நின்னுட்டு இப்பிடி பிரச்சினை ஆயிப்போச்சி இனிமேல் எனக்கு வேண்டாம் என்று சொன்னேன். அதுக்கு காசி விஸ்வநாதன், இல்லம்மா நீங்க வந்தா எந்தப் பிரச்சினையும் இருக்காது; நீங்க நல்லா நிர்வாகம் பண்ணுவிங்கன்னு கலெக்டரே கேட்டாக.

ஒரு நாள் ஊர்ல கூட்டம் போட்டு அன்னபோஸ்ட்டா யாராவது வரட்டும்னு கிராமத்துல கேட்டதுக்கு எங்க சமுதாயத்துல யாரும் ஒத்துக்கல. அப்புறம் என்னைய, நல்ல வழியில வந்தபுள்ள; சொன்னா கேக்குமுன்னு என்னைய வந்து பார்த்துச்சொன்னாங்க. அப்ப எல்லாம் போட்டிதான். வாங்க நாமினேசன் கட்டுவோம்னாங்க. அப்ப எங்கூட 8 ஆம்பளைங்க போட்டி. ஒரு பொண்ணு நான்தான். முதல்லயும் நான் கட்டி இருந்தேன். எங்க சமுதாயத்துல யும் சரின்னாங்க, பிற்பாடு, எங்க ஆளுங்களே என்னை வாபஸ் வாங்கச் சொன்னாங்க. நான் கட்சில பொறுப்பில இருக்கேன், வாபஸ் வாங்கமாட்டேன்னு சொல்லிட்டேன். அப்பதான் எனக்கு கட்சில மாவட்டத் துணைத் தலைவர், தலைவருன்னு பொறுப்பு கொடுத்துக் கிட்டே இருந்தாங்க. அப்புறம் இப்ப, எல்லோருமே போட்டி நாமினேசன் பணம் கட்டினோம். எல்லோருக்கும் ஓட்டு விழுந்தது. ஆனா நான் கொஞ் சம் அதிக ஓட்டுல ஜெயிச்சேன்.



எஸ்.செல்லம்மா



ஏகாதசி



ராஜா



போதராஜன்

உறுப்பினர்ல எங்க ஆளுங்க 2 பேர தவிர, மத்தவங்க கோனார் வீடு, முஸ்லிம் வீடு, பி.சி.ங்க, கள்ள வீட்டு ஆளுங்க, துணைத் தலைவரே எஸ்.சி.தான். எல்லாரும் ஏதாவது கேட்பாங்க. நான் தான் நம்ம ஊர்ல பிரச்சினை இல்லாம ஓட்டணும்னு பொறுமையா இருந்து நிர்வாகம் பண்ணிகிட்டு இருக்கேன்.

இது கட்சி சீட்டு இல்ல. தலைவருங்கறது மக்கள் பார்த்து ஓட்டுப் போட்டு எடுக்கறதுதான். கட்சிக் கூட்டங்கள்ல பேர் போடுவாங்க போவேன். வாசன், இளங்கோவன் எல்லாம் இங்க வந்தாங்கன்னா, முதல் ஆளா என்னதான் கூப்பிட்டுப் பார்த்து, எப்படிமா இருக்க, நல்ல இருக்கியா, தைரியமா இரும்மானு சொல்லுவாங்க. நானும் தைரியமா இருக்கேன். நல்லா நிர்வாகம் பண்றேன்.

**ஏகாதசி (63) :** நான் மாட்டு வியாபாரி. முருகேசன மேலவளவு ராசாமணி மகன் கண்ணன் வெட்டினாரு. நான் பார்த்தத அவங்க யாரும் பாக்கல. வீட்டுக்குத் திரும்பிட்டேன். எல்லாருக்கும் தெரிஞ் சதும் ஊர அழிக்கணும்னுதான் கிளம்பினாங்க. அதுக்குள்ள அதிகாரிக வந்து, போவப்படாதுன்னு, போலிசு எல்லாம் வந்து தடுத்துட்டாங்க. அந்த செட்டு ஆளுங்க எல்லாம் என்ன மிரட்டினாங்க, சாட்சி சொல்லக் கூடாதுன்னு. அழகர்சாமி, ரெங்கசாமி, ரெங்கநாதன் எல் லாம் ஜாமீன்ல வந்தப்ப எங்கிட்ட சொன்னாங்க. நான் அதெல்லாம் முடியாது, நடந்தத சொல்லு வந்தான்னு சொல்லிட்டன்.

**ராஜா :** முருகேசன் கொலைக்குப் பின்னாடி தீண்டாமை எல் லாம் கொஞ்சம் குறைஞ்சிருக்கு. ஊருலயும் ஒரு மாத்தம் இருக்கு. சட்டைப் போட்டுக்கிட்டு ஊருக்குள் போகலாம். மேல துண்டு, செருப்பு எல்லாம் போட்டுகிட்டுப் போனா ஒரு மாதிரி பார்ப்பாங்க. இப்ப அவங்களுக்குத் தண்டனை கிடைச்ச பிறகு, அதெல்லாம் மாறி கொஞ்சம் நார்மலா இருக்கு. முன்னாடி துண்டு, செருப்பு போட்டுக் கிட்டு போனா, பறயன் என்ன இப்படி வர்றான்னு பேசுவாங்க. ஆனா இப்ப அப்படி யாரும் பேசறது இல்ல.

மொத்தமா வாக்காளர்கள் 6000 பேர். குடும்பம் 3000 இருக் கும். இங்க காலனில 600 குடும்பம். இங்க படிச்சிட்டு 5, 6 பேரு தான் அரசு வேலைல இருக்காங்க. காலேஜ் படிச்சிட்டு ஒரு 10 பேர், +2 முடிச்சிட்டு 25 பேர் இருக்காங்க. முரு கேசன் கொலை நடந்த பிறவு 5 ஆவது வரைக்கும் இங்கேயே பள்ளிகூடம் இருக்கு. அதுக்கு முன்னாடி ஊர்ல தான் போய்ப் படிப்போம். அப்ப 10ஆவது வரைக்கும் இருந்தது. இப்ப +2 ஆக்கியிருக்காங்க.

**போதராஜன் :** முருகேசன் கொலைக்கு முன்னாடி கள்ளர் ஆளுக் கும் எங்களுக்கும் ஏதாவது பிரச்சினை, சண்டை வரும். ஆனா நாங்க யாரும் பயந்துகிட்டு போய் போலிஸ்ல புகார் எல்லாம் கொடுக்க முடியாது. அப்படி சண்டை நடந்ததுன்னு தெரிஞ்சா, எங்க ஆளுங்க ஒவ்வொருத்தருக்கும் 'குடி'ன்னு சொல்லி ஒரு கள்ளர் இருப் பாங்க. உடனே அவங்கள கூட்டியாந்து சமரசம் பண்ணிடுவாங்க. அடிச்சிடு வாங்க. நாங்க போய் தீண்டாமை கேஸ்ல புகார் கொடுப்போம். உடனே கொடுத்தவனோட 'குடி'ய அழைச்சிகிட்டு வந்து புகாரை வாபஸ் வாங்க வச்சிருவாங்க. நான் பி.எஸ்.சி. டிகிரி முடிச்சிட்டு எலக்டீரி சியனாவும், எல்.அய்.சி. ஏஜெண்டாவும் இருந்துகிட்டு இருக் கேன். நான் 92இல் பி.எஸ்.சி. முடிச்சேன். எம்ப்ளாய்மென்டல பதிவு பண்ணியிருக்கேன்.

7 பேர் அரசு வேலையில இருக்காங்க. ஒருத்தர் சர்வேயர், குடிசை மாற்று வாரியத்துல, போலிஸ்ல இருக்கிறாங்க. காலேஜ் லெக்சரர். அதிக பட்டப் படிப்பு நிறைய பேர் படிச்சிருக்காங்க. ஊர்ல மீனான்றவங்க வீட்டுக்கு வயரிங் வேலைக்கு என்னை கூப் பிட்டாங்க. அது பப்ளிக் பிளேஸ். பாதை 10 அடி பாதை. நன் ஒரு கோல் ஊன்றிதான் வயர் இழுத்தேன். பக்கத்து வீட்டுக்காரர் சொக்கு அதுக்கு எதிர்ப்பு தெரிவிச்சார். அது மட்டுமில்லாம நீ எப்படிடா இங்க வந்து கட்டலாம்னு என்னப் பிடிச்சி இழுத்து மரத்துல எத்தி னாரு. அதுவேற காயம். என் தொழில் மரத்துல கட்டறதுதான். வேலை கொடுக்கறதும், கொடுக்காததும் ஈ.பி.யில போய் நீங்க



படிப்பகம்

www.padippakam.com

தடுங்கன்னு சொன்னேன். அவர் உட்கார்ந்திட்டாரு. அப்பவே, இந்தப் பக்கத்து வீட்டு பொண்ணு அய்யனாரு சம்சாரம் ரத்தினம், ஒரு பறயன் நீ எப்படி இழுத்து கட்டலாம்னு சொல்லிச்சு. அதனால நான் மேலவளவு போலிஸ் ஸ்டேஷன் போய் ரிப்போர்ட் செஞ்சேன். சிங் போலிசார் வந்து விசாரித்தார். புகாருக்கு ரசீதுகூட கொடுக்கல. முருகேசன் அண்ணன் கருப்பையா, இன்னும் கொஞ்சம் பேரு கேள்விப்பட்டு ஓடிவந்தாங்க. அப்புறம் எஸ்.பி.கிட்ட சொல்லி, அவர் சொன்னப்புறம்தான் சி.எஸ்.ஆர். கொடுத்தாங்க. நான் வாபஸ் வாங்க மறுத்துட்டேன்.

நைட் 8 மணிக்கு சண்முகம் எஸ்.அய். வந்தாரு. ஆஸ்பத்திரிலே சேர மெமோ கொடுக்க மறுத்துட்டாறு. நானே ஆஸ்பத்திரியில அட்மிட் ஆயி எஸ்.சி./எஸ்.டி. வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில எப்.அய்.ஆர். போட்டாங்க. கேஸ் போட்டவங்க எம் பேர்லயும் கேஸ் போட்டுட்டாங்க. எம்பேர்ல அத்துமீறி நான் அந்த ஊருக்குள்ள நுழைந்ததாகவும், அரிவாளால வெட்டிடுவேன்னு மிரட்டினதாகவும் சொக்கு கொடுத்த புகார்ல எம் பேர்ல பொய்க் கேசு போட்டுட்டிருந்தாங்க. அவங்க கள்ளர் தரப்புலகூட மனு கொடுக்கல. போலிஸ் அவங்களே எழுதி கேஸ போட்டுக்கிட்டான். இப்படி எம்பேர்ல கேஸ் போட்டதுகூட, எனக்கு 90 நாள் கழிச்சுதான் தெரியும். இந்த மாதிரி போலிஸ் இன்னும் ஆதரவா அவங்களுக்குதான் இருக்கு. இந்த மாதிரி கேஸ்னா கள்ளர் சமூகத்தில யாருமே போலிஸ் ஸ்டேஷன் வரமாட்டாங்க. நாங்க எல்லாம் போவோம். அவங்க வரமாட்டாங்க. அவங்களுக்காக சண்முகம் எஸ்.அய்.தான் வந்து இருந்து எல்லாக் காரியத்தையும் முடிச்சு கொடுப்பாரு.

**மணிமேகலை :** எனக்கு 17 அல்லது 18 வயசுல கல்யாணம் நடந்தது. நான் 5ஆவது வரைக்கும் படிச்சிருக்கேன். என்னோட சொந்த ஊரு வினோபா நகர் காலனி. அங்க 500 வீடு இருக்கும். எங்க அப்பா பேரு காந்தன். எங்கம்மா பேரு கலியாணி. எங்கூட பிறந்தவங்க 5 பொம்பள பிள்ளைங்க 2 பையங்க. நாங்க அக்காளும், தங்கச்சியும் அண்ணன் தம்பிக்கு வாக்கப்பட்டோம். 2 பேருமே இறந்துட்டாங்க. அவளுக்கு 2 பொம்பள பிள்ளைக இருக்கு. அத எங்க அப்பா வீட்ல வச்சிகிட்டு அங்கேயே இருக்கு. எங்க தங்கச்சி வீட்டுக்காரர் ராஜா. முருகேசன் தம்பி.

கொலை நடந்தப்புறம் கருணை அடிப்படையில கலைஞர் ஆட்சில 7 பேருக்குமே சாலைப் பணியாளர் வேலை போட்டு கொடுத்தாக அரசாங்கத்துல. 2 லட்சம் பணம் கொடுத்தாங்க. இந்த வீடு கட்டிக் கொடுத்தாங்க. வேலை செய்யற அண்ணிக்குதான் எங்களுக்கு சம்பளம்.

**சென்னகரம்பட்டி - மேலூர் வட்டம்**

**பெருமாள் (47) :** அம்மாச்சி அம்மன் மண்டக் கோயிலுக்கு சொந்தமான நிலம். 20 வருசமா அவங்கதான் ஏலம் எடுத்தாங்க. அந்த தடவ நாங்க எஸ்.சி. எல்லாம் ஒண்ணா சேர்ந்து ஏலம் எடுத்தோம். மொத்த நிலம் 9 ஏக்கர் 27 சென்ட். அதை



அம்மாசி மகன்கள் நல்லதம்பி, பிச்சை

ஏலம் எடுத்திட்டோம்னுதான் படிப்படியாய் அந்தமாதிரி செஞ்சாங்க. நாங்க ஏலம் எடுத்த பின்னாடி, அதிகாரிகள்ட்ட போய் அது செல்லாதுன்னு அறிவிக்கச்சொல்றாங்க. கமிஷனர் கன்பார்ம் ஆர்டரை எங்களிடம் கொடுத்தாரு. இந்து அறநிலையத் துறை சென்னையில் இருந்து இந்தக் கடிதம் வந்தது. இந்த வேலைகளை எல்லாம் சிவனாண்டி (எ) தர்மலிங்கம்தான் முன்நின்று செய்கிறார். இவர் வி.ஏ.ஓ.ஆ இருந்தாரு. கொலை நடக்கும்போது அவர்தான் வி.ஏ.ஓ. பிரச்சினை இருந்தால் 144 அறிவிச்சாங்க. மேலூர் தாலுக்கா ஆபிஸ்ல பீஸ் கமிட்டி போட்டாங்க. அவங்களுக்கு நோட்டீஸ் போச்சி 5.7.92இல் அவங்க வரல. நாங்க மட்டும் ஒரு 10, 20 பேர் இருக்கோம். மேலூர் தாலுக்கா போனோம். நைட் 10 மணி வரைக்கும் இருந்தும் அவங்க வரல. சாகுல் அமீதுன்றவர்தான் தாசில்தாராக இருந்து பீஸ் கமிட்டிய கூட்டினாரு. அவங்க வரலன்னு ராத்திரி கடைசி பஸ்சுக்கு நாங்க கிளம்பினோம். வக்கிராபுரத்துல பஸ் வழி மறிச்சி இழுத்து வேலு, அம்மாசிய கொலை பண்ணிபுடறாங்க.

**நல்லதம்பி (அம்மாசி மகன்) :** இப்ப எனக்கு 45 வயசு. பீஸ் கமிட்டிக்கு நானுந்தேன் எங்க அப்பாகூட போயிருந்தேன். பஸ்ல வரும்போது சேகருன்றவன் மட்டும் மேலூர்லயே பஸ்ல ஏறினான். இவன் ராமர் மச்சான். கவுட்டியாம்பட்டி ஊர்க்காரன். வழியில வந்துகிட்டு இருக்கும் போதே ஒரு ஸ்டாப்ல எங்கடா ஆள காணோம் அப்படின்னு சொன்னான். அத கேட்ட நாங்களும் ஏதோ நடக்கப் போறதுன்னு இருக்கும்போது பஸ்ல மறிச்சாங்க. ராமர்தான் பஸ்ச மறிச்சது. கூட ஒரு 20 பேர் இருக்கும். கத்திய வீசினதும் டிரைவர் பஸ்ல இருந்தாரு. நாங்க டிரைவர்கிட்ட வண்டிய எடுயா என்று சொன்னோம். ஆனா எடுக்க விடல. உள்ள பூந்து 2 பேரை இழுத்தாங்க. பீட்டுக்காக இருந்த போலிஸ் மேலூர்ல சாப்பிட்டு அதே பஸ்ல வந்துகிட்டு இருந்தாங்க. அவங்களும், நீங்களும் இதுலதாண்டா சாவப் போறீங்க எடுறா துப்பாக்கியின்னு சொன்னாரு. எல்லாரும் திபு திபுன்னு கீழே இறங்கிடுறாங்க. டிரைவரும் வண்டிய எடுத்துடுறாரு. ராமரும் சிவனாண்டியும் சேர்ந்து, வேலுவையும் எங்க அப்பாவையும் புடிச்சி இழுத்துடுறாங்க. சிவனாண்டிதான் எங்க அப்பாவை கையில புடிச்சிதாங்கி இழுத்தாரு. அவ்வளவுதான் நாங்க பார்த்தது. புடிச்சி இழுத்ததுல வெளியில வந்த வேலு பயந்து ஓடுனாறு. அவன தொரத்திகிட்டு ராமர் ஓடுனாறு. அதான் நாபார்த்தது. அதுக்கப்புறம் நைட்டே எங்களுக்கு விசயம் தெரிஞ்சிடுச்சி. ஆனா போலிஸ் அவரை போகவிடாம தடுச்சிருச்சி. எங்க ஊர்ல 144 போட்டு போலிஸ் பந்தோபஸ்து இருந்தாங்க. நாங்க இல்லாமலே பாடிய கொண்டு போயிட்டாங்க. மறுநாள் காலையில 10 மணிக்குதான் எங்கள அழைச்சிகிட்டுப் போனாங்க. போலிஸ் யாரையும் கைது பண்லை. 13 வருசமா இந்த கேஸ் நிலுவையில இழுத்துகிட்டு இருக்கு.

இந்த கொலைக்கு முன்னாடி கள்ளர் ஆளுக எங்க ஆளுங்கள 5 பேர் குத்திப் புட்டாக. அதில் எங்க அம்மா, சுரேஷ், ராஜேந்திரன், அவங்க அம்மா, ஓனயன் இந்த 5 பேருக்கும்தான் குத்து விழுது. எங்க அம்மாவுக்குதான் இதுல அதிக காயம். இதுக்கு கேஸ் கொடுத்தோம். இப்பதான் இந்தக் கேஸ தள்ளுபடி பண்ணிட்டாங்க. எங்க அம்மா, இந்த குத்துபட்ட காயத்தால அடுத்த 2 வருசத்திலேயே இறந்திட்டாங்க. எங்க அப்பா இறந்ததுகூட எங்க அம்மாவுக்குத் தெரியாது. புதைச்சிட்டு அப்புறம் பொறுமையாதான் சொன்னோம். ●



படிப்பகம்

www.padippakam.com

## திருவள்ளுவர் எழுச்சிப் பெருவிழா



சோளிங்கபுரம் புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றத்தின் சார்பில் 16.1.2006 அன்று, பொங்கல் விழா - திருவள்ளுவர் நாள் விழா, க. முகிலன் தலைமையில் நடைபெற்றது. உயர்நிலை/மேனிலைப் பள்ளி மாணவர்கள் பங்கேற்ற திருக்குறள் வினாடி-வினா நிகழ்ச்சியை கவிஞர் தமிழேந்தி நெறியாளராக இருந்து நடத்தினார். 2000 ஆண்டு முதல் கவிஞர் தமிழேந்தியால் நடத்தப்படும் திருக்குறள் வினாடி - வினா நிகழ்ச்சி, மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. தமிழ் - தமிழர் இயக்கத்தின் தலைவர் தோழர் தியாகு எழுச்சிமிகு சிறப்புரையாற்றினார். திருக்குறள் வினாடி - வினா போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நூல்களும் பணமும் பரிசாகத் தரப்பட்டன. சனவரி 11 அன்று நடத்தப்பட்ட திருக்குறள் ஒப்புவித்தல் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் இதேபோல் பரிசுகள் வழங்கப்பட்டன. ◆

## சிதைந்த வாழ்வுக்கு ஆதரவு



சுனாமியால் பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கும், கடலூர் மாவட்டத்திற்குள் அடங்கிய மலைவாழ் இருளர் பழங்குடி மக்களுக்கும், 'சமூக விழிப்புணர்வுக்கான இளைஞர் இயக்கம்' ஆறுதலும் ஆதரவும் தந்து, இம்மக்களின் சிதைந்து போன வாழக்கையினை, மறுகட்டமைப்பு செய்திட கடந்த ஓராண்டாகப் பணியாற்றி வருகின்றது. 26.12.05 அன்று பரங்கிப்பேட்டையை அடுத்த இந்திரா நகரில் முதலாண்டு சுனாமி நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்வியக்கத்தின் இயக்குநர் ரமேசுநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கடலூர் மாவட்ட ஆட்சியர் சுகன்தீப் பேடி கலந்து கொண்டு, 39 தலித் மக்களுக்கான குடியிருப்புகளுக்கும், 14 இருளர் பழங்குடியினருக்கான ரூ. 1.50 லட்சம் மதிப்பீட்டிலான வீடுகளுக்கும் அடிக்கல் நாட்டினார். ஆதித் தமிழர் விடுதலை இயக்க அமைப்பாளர் அ. வினோத் மற்றும் பலரும் இவ்விழாவில் உரை நிகழ்த்தினர். ◆




# SELVI AUDIOS

***Professional Sound***
***and***
***Prem in***
***Thendral Orchestra***



**S. Annadurai**
**Proprietor**
**No. 157, C.T.H. Road,**
**Thirunindravur - 602 024**
**Cell : 94448 72934**
**94441 25096**

**Decorators, Professional Sound Systems & Lightings, High Class Catering Contractor for Marriage Reception Party & Dinner**




படிப்பகம்

www.padippakam.com

## 'தலித் முரசு' வாழ்நாள் கட்டணம் செலுத்திய சமூக நீதிப் போராளிகள்

திரு. எஸ். விஸ்வநாதன், சென்னை
திரு. கே.சி பானுமதி, ஓசூர்
திரு. பூங்குழலி, புதுச்சேரி
திரு. தா.செ. மணி, மேட்டூர் அணை
திரு. ஆர். சவுந்திரராசன் கோவில்பட்டி
திரு. சி.ந. சந்திரசேகரன், சென்னை
திரு. சகுந்தலா கோபால் அரக்கோணம்
திரு. எம். கதிரவன், மும்பை
திரு. எஸ். பிரேம்குமார், சென்னை
திரு. ந. இளஞ்செழியன், சென்னை
திரு. ஈ. லெனின், சென்னை
திரு. அரங்க மல்லிகா, சென்னை
திரு. 'வான்முகில்', திருநெல்வேலி
திரு. கே. ஜான் அன்பழகன் அரக்கோணம்
திரு. கே.ஆர். பாஸ்கரன் அரக்கோணம்
திரு. ர. நடராசன், வேலூர்
திரு. அருட்தந்தை மனு, சென்னை
திரு. ஆர். மோகன் ராஜ், சென்னை
திரு. ஆ. இராசா, பெரம்பலூர்
திரு. பி. பாரி, தர்மபுரி
திரு. பி. கெவரன், தர்மபுரி
திரு. ஏ. சிங்காரம், ஈச்சம்பாடி
திரு. ஜி. தீப்பாஞ்சி, நல்லம்பள்ளி
திரு. ஜி. சுப்பிரமணியன், தர்மபுரி
திரு. சி. அழகரசன், தர்மபுரி
திரு. எம். பெருமாள், தர்மபுரி
திரு. ஜி. முருகன், தர்மபுரி
திரு. எம். கிருஷ்ணன், தர்மபுரி
திரு. எச். நாராயணசாமி, கிருஷ்ணகிரி
திரு. சி. சுப்பிரமணியம், தஞ்சாவூர்
திரு. அ. அன்னதானம், தஞ்சாவூர்
திரு. க. சேட்டு, தஞ்சாவூர்
திரு. ராசா சர்வங்கன், தஞ்சாவூர்
திரு. ரா. தியாகராசன், தஞ்சாவூர்
திரு. ஆர். வேணுகோபால் கோயம்புத்தூர்

## அடுத்த இதழில்...



புகழ்பெற்ற மனித உரிமை ஆர்வலர் டாக்டர் பாலகோபால் அவர்கள் 'தலித் முரசு'க்கு அளித்துள்ள சிறப்புப் பேட்டி, மார்ச் இதழில் இடம்பெறுகிறது.

•

யாக்கன் எழுதும் 'ஜனநாயக இருள்' தொடர், தவிர்க்க இயலாத காரணங்களால் இரு மாதங்களாக வெளிவரவில்லை. அடுத்த இதழில் இடம் பெறுகிறது.



புரட்சியாளர் அம்பேத்கரின் வித்தியாசமான, தெளிவான இதுவரை யாரும் வெளியிடாத மிகவும் அழகான ஒரு புகைப் படத்தை (A4 அளவு) 'தலித் முரசு' வெளியிட்டுள்ளது. இதை 'லேமினேட்' செய்தோ - 'பிரேம்' செய்தோ வீடுகளிலும், அலுவலகங் களிலும் பொருத்திக் கொள்ளலாம்.

ஒரு படத்தின் விலை : ரூ. 5 மட்டுமே

குறைந்தது 10 படங்களை வாங்கினால் தான் 'கூரியரில்' அனுப்ப முடியும். படத்திற்கான கட்டணத்துடன் ரூ. 10 சேர்த்து அனுப்பவும்.




'பவுத்தம் ஏற்போம்
இந்து மதம் மாய்ப்போம்'

தலித் முரசு - மாத இதழ்

ஆண்டுக் கட்டணம் : ரூ. 100
வாழ்நாள் கட்டணம் : ரூ. 1,000

பெயர் ..................................................

முகவரி ..................................................

..................................................

..................................................

பணவிடை, கேட்போலை அனுப்புவோர்
DR. AMBEDKAR CENTRE என்ற பெயருக்கு அனுப்பவும்



படிப்பகம்

www.padippakam.com





PPA



# புதுவை நகரமைப்பு குழுமம்

## ஜவஹர் நகர், புதுவை - 605 005



## இக்குழுமத்தின் செயல்பாடுகள்

- ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வளர்ச்சிப் பணிகளை செயல்படுத்துதல்.
- நகர மற்றும் கிராம அமைப்பு சட்டத்திட்டங்களுக்கு இணங்க, கட்டுமானப் பணிகளுக்கு அனுமதி அளித்தல்.
- அனுமதியற்ற கட்டுமானப் பணிகள் மற்றும் மனைப் பிரிவுகளை கட்டுப்படுத்துதல்.
- கட்டிட வரைபடங்கள் சமர்ப்பிப்பது, அனுமதி பெறுவது பற்றிய விவரங்கள் பொதுமக்கள் அறிந்து கொள்ள இக்குழுமத்தில் ஆலோசனை மையம் அமைக்கப்பட்டுள்ளது.
- மழைநீர் சேமிப்பு கட்டிட வரைபட அனுமதி வழங்கும்போது வலியுறுத்தப்படுகிறது.
- பாரம்பரிய கட்டிடங்களுக்கு அனுமதி அளிக்கும்போது முக்கியத்துவம் அளிக்கப்பட்டு பாதுகாப்பிற்கு வலியுறுத்தப்படுகிறது.
- பூகம்ப பகுதிக்கான கட்டிட கட்டுமான தொழில்நுட்பங்களை அடுக்குமாடி கட்டிடங்களுக்கு வலியுறுத்துதல்.
- இக்குழுமத்தின் அனுமதியற்ற வீட்டுமனைகளை வாங்க வேண்டாம் என பொதுமக்களை கேட்டுக் கொள்கிறோம்.

**தி. தியாகராஜன் Ex. MLA**
தலைவர்
புதுவை நகர அமைப்பு குழுமம்

No. 773/DIP/PRA/PRESS/2005 - 2006 / S - 59

படிப்பகம்

www.padippakam.com

பெரியார் பேசுகிறார்

# சாதி ஒழிப்பிற்கு இந்து மதத்தை ஒழிக்காமல் வேறு எதைச் செய்வது?

அம்பேத்கர், உலகத்தில் பெரிய அறிஞர்கள் கூட்டத்தைச் சேர்ந்தவர். அவர்கள் இவ்வளவு பெரிய அறிஞராக விளங்கக் காரணம் என்ன? படிப்பு, திறமை என்று சொல்வதெல்லாம் இரண்டாவதுதான். அவரைவிடப் படித்தவர்கள், திறமை உள்ளவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் அம்பேத்கர் பெரிய அறிவாளியாக விளங்கக் காரணம் - அவரது படிப்பு, திறமை என்பவை மாத்திரமல்ல; அவருடைய படிப்பும் திறமையும் நமக்குப் பயன்படுகிற தன்மையில் இருப்பதால் தான் அவரை அறிவாளி என்று சொல்ல வேண்டியிருக்கிறது. மற்றவர்கள் படிப்புத் திறமையெல்லாம் வேறு விதத்தில் பயன்படுத்தப்படுகிறது.

அம்பேத்கர் ஒரு நாஸ்திகர். அவர் இன்றல்ல; நீண்ட நாளாகவே நாஸ்திகர். ஒன்று சொல்லுகிறேன். உலகத்தில் யார்யார் பெரிய அறிவாளிகளாக இருக்கிறார்களோ, அவர்களெல்லாரும் நாஸ்திகர்கள்தான். நாஸ்திகராக இருக்கிறவர்கள்தான் ஆராய்ச்சியின் சிகரமாக, அறிவு பிரகாசிக்கக் கூடிய மனிதராக ஆகமுடிகிறது. அவர் தனது சொந்த அறிவை உபயோகித்து, தான் கண்டதைத் தைரியமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார். நம் நாட்டில் அறிஞர் கூட்டம் என்பவரெல்லாரும் எடுத்துச் சொல்லப் பயப்படுவார்கள். அவர் இதுபோலல்லாமல் தைரியமாக எடுத்துச் சொல்லி வந்திருக்கிறார்.

இப்பொழுது அதிசயமாக உலகம் பூராவும் நினைக்கும்படியான சம்பவம் ஒன்று நடந்தது. அதுதான் அம்பேத்கர் புத்த மதத்தில் சேர்ந்தது. இப்போது பேருக்குத்தான் அவர் புத்த மதத்தில் சேர்ந்ததாகச் சொல்கிறாரே தவிர, அம்பேத்கர் வெகுநாட்களாகவே புத்தர்தான்.


1930 - 35லேயே சாதி ஒழிப்பில் தீவிர கருத்துள்ளவராக இருந்தார்; சாதி ஒழிப்புக்காக பஞ்சாபில் ('ஜாத் பட் தோடக் மண்டல்' என்று கருதுகிறேன்) ஒரு சபை ஏற்படுத்தியிருந்தார்கள். என்னைக்கூட, அதில் ஓர் அங்கத்தினராகச் சேர்த்திருந்தார்கள். அந்தச் சபையினர் சாதி ஒழிப்பு மாநாடு என்பதாக ஒரு மாநாடு கூட்ட ஏற்பாடு செய்து, அந்த மாநாட்டுக்கு அம்பேத்கர் அவர்களைத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்டார்கள். அவரும் ஒத்துக் கொண்டு தலைமை உரையாக 100 பக்கம் ஆங்கிலத்தில் எழுதினார். அதில் பல ஆதாரங்களை எடுத்துப்போட்டு, சாதி ஒழிய இந்து மதமே ஒழிய வேண்டும் என்று எழுதியிருந்தார். இதைத் தெரிந்து அவரிடம் 'உங்கள் மாநாட்டுத் தலைமை உரையை முன்னாடியே அனுப்புங்கள்' என்று கேட்டு வாங்கிப் பார்த்தார்கள். அதில் ஆதாரத்தோடு இந்து மதம் ஒழிய வேண்டும் என்று எழுதியிருந்தார். அதைப் பார்த்துவிட்டு, ''உங்கள் தலைமையுரை எங்கள் சங்க மாநாட்டில் படிப்பதற்கு ஏற்றதாக இல்லை. இது சாதி ஒழிப்புச் சங்கமே தவிர, இந்து மத ஒழிப்புச் சங்கமல்ல; ஆகையால் நீங்கள் இந்து மதம் ஒழிய வேண்டும் என்கிற அந்த ஒரு அத்தியாயத்தை நீக்கிவிட வேண்டும்'' என்று அம்பேத்கரிடம் கேட்டார்கள்.

அதற்கு அம்பேத்கர் ' சாதி ஒழிப்பிற்கு இந்து மதம் ஒழிய வேண்டும்' என்கிறதுதான் அஸ்திவாரம். அதைப் பேசாமல் வேறு எதைப் பேசுவது? ஆகையால் அதை நீக்க முடியாது என்று சொல்லிவிட்டார். பின் மாளவியா ஏதேதோ சமாதானமெல்லாம் சொன்னார். அதற்கும் அவர், ''நான் தலைமை உரையைப் பேசுகிறபடி பேசுகிறேன்; நீங்கள் வேண்டுமானால் அதைக் கண்டித்து மாநாட்டில் பேசுங்கள்; தீர்மானம் வேண்டுமானாலும் போடுங்கள், நான் முடிவுரையில் அதுபற்றிப் பேசுகிறேன்'' என்று சொல்லிவிட்டார். பிறகு மாநாடே நடக்காமல் போய்விட்டது.

நான் அம்பேத்கரிடம் அந்தப் பேச்சை வாங்கி, 'சாதியை ஒழிக்கும் வழி' என்று தமிழில் புத்தகமாகப் போட்டு வெளியிட்டேன். அவர் அப்போதே அவ்வளவு தீவிரமாக இருந்தார். நாம் ராமாயணத்தைப் பற்றி வாயால் பேசிக் கொண்டிருக்கும் போதே, அதாவது 1932இலேயே அவர் ராமாயணத்தைக் கொளுத்தினார். அந்த மாநாட்டுக்கு என். சிவராஜ் தான்தலைவர். இதெல்லாம் 'குடியரசில்' இருக்கிறது. நான் 1930இல் ஈரோட்டில் நடந்த சீர்திருத்த மாநாட்டிற்கு அம்பேத்கரை அழைத்தேன். என்ன காரணத்தாலோ அம்பேத்கர் வரவில்லை. அவருக்குப் பதிலாக எம்.ஆர். ஜெயகர் வந்திருந்தார். அம்பேத்கர் வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

அந்தச் சமயத்தில்தான் அம்பேத்கர் இஸ்லாம் ஆகப் போகிறேன் என்று சொன்னார். நானும் எஸ். ராமநாதனும் இங்கிருந்து தந்தியடித்தோம். ''தயவு செய்து அவசரப்பட்டு சேர்ந்து விடாதீர்கள். குறைந்தது ஒரு லட்சம் பேராவது கூட பின்னால் வந்தார்கள் என்றால்தான் அங்கும் மதிப்பிருக்கும்; இல்லாவிட்டால் மவுலானா சொல்கிறபடித்தான் கேட்க வேண்டும். அவர்களோ கை வைக்கக் கூடாத மதம் (Perfect Religion) என்பதாகச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள். எவனுக்குமே கை வைக்க உரிமையில்லை என்பவர்கள். வெறும் தொழுகை அது இது எல்லாம் உங்களுக்கு ஜெயில் போலத்தான் இருக்கும். தனியே போவதால் அங்கும் மரியாதை இருக்காது'' என்று தந்தியில் சொன்னோம். அதன் பிறகு யார் யாரோ அவர் வீட்டிற்குப் போய் மதம் மாறக் கூடாதென்று கேட்டுக் கொண்டார்கள். பத்திரிகையில் வந்தது. அப்போதே அவர் மதம் மாறுவதில் தீவிர எண்ணம் வைத்திருந்தார். எப்படியோ கடைசியாக, இப்போது புத்த மதத்தில் சேர்ந்துவிட்டார். என்றாலும் அவர் ஏற்கனவே புத்தர்தான்.

*28.10.1956 அன்று, வேலூர் நகராட்சி மன்றத்தில் ஆற்றிய சொற்பொழிவு*



**"அம்பேத்கர் மக்களுக்கு வழி காட்டுபவர். சாதி, மதக் குறைபாடுகளை மனதில் பட்டதைத் தைரியமாக எடுத்துக் கூறி வந்தவர். சுய நலமில்லாமல் பாடுபட்டவர்; இந்தியா முழுவதும் விளம்பரம் பெற்றவர். அவர் தம்முடைய மக்களுக்குப் பவுத்த மதத்திற்குப் போகும்படி வழிகாட்டியிருக்கிறார். இங்கும் பலபேர் மாறக் கூடிய நிலை ஏற்படும். அவர் உள்ளபடியே ஒரு பெரிய தலைவர். அவர் சம தர்ம காலத்திற்கு முன் ஏற்பாடு செய்யப்பட்ட தலைவர். அம்பேத்கருக்குப் பிறகு அவரைப் போன்ற தலைவர் ஏற்பட முடியாது."**



படிப்பகம்

www.padippakam.com

Dalith Murasu, Tamil Monthly Regd. No. TN/CH(C)/43/04-06 Posted at Patrika Channel Egmore RMS/1 Periodicals. Registered with the Registrar of News Papers for India Under No. TNTAM/2003/11948. Licensed to Post without Prepayment Licence No. 32

Asleep. And awake. At the same time.



*There's a place where the earth meets the sun. Where the sky meets the sea. Where France meets India - in heritage, cuisine and architecture. Where mind meets body - at a Yoga or Meditation workshop. Where a potter's wheel meets peaceful hands - turning out the most exquisite terra cotta. Where you meet people of motley cultures, colours and listen to enchanting stories. And where you meet yourself.*

Festivals ❋ Food ❋ Handmades ❋ Heritage ❋ Investments

*International Yoga Festival : January 4-7, every year*

PEACEFUL

Pondicherry

Give time a break.

www.tourism.pon.nic.in

படிப்பகம்